www.tamilarangam.net

සරිනිහර්
SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வ'மிந்த நாட்டிலே - பாரதி

**சிவ(ர)புராணம்!**

ஆண்டொன்று ஆவதற்குள் அவரழியப் போகின்றார்
பூண்டோடு என்றுவிட்டார் போரமைச்சர்~நாண்டுகொண்டு
நிற்பானேன்? நாமரசை ஆதரிப்போம்: நம்மசிவா
சொற்கேட்க உண்டு சுகம்!

~ஈழமோகம்

ஜூன் 29 - ஜூலை 12, 1995 | 75வது சிறப்பிதழ் | விலை~7.00



"படையினரை சமாதானத்துக்கு கொண்டுவருவது எப்போது?"
-பக்கம்-8



"சமாதானத்திற்கு குந்தகம் செய்பவர்கள் யார்?"
-பக்கம்-7



காத்தான்குடி: எச்சரிக்கை...
-பக்கம்-18



சமாதானத்தின் எதிர்காலம்?
-பக்கம்-9



# யுத்தமா? சமாதானமா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## இராணுவம் வைக்கும் குண்டுகள்!

அண்மையில் கொழும்பு முழுவதும் இடத்திற்கிடம் வெடிக்கும் சிறு அளவிலான குண்டுகள் தொடர்பாகப் பல்வேறு கருத்துக்கள் வெளிவருகின்றன.

பெரும்பாலானோர் இக்குண்டுகள் புலிகளால் வைக்கப்பட்டவை அல்ல எனக்கூறுகின்றனர் ஆனாலும் இராணுவ இரகசிய புலனாய்வுப் பிரிவின் அதிகாரியொருவர் ''அக்குண்டுகள் புலிகளால் வைக்கப்பட்ட குண்டுகளே எனவும், இவ்வாறு குண்டுகள் வைப்பதனூடாக கொழும்பில் இராணுவத்தைப் பலப்படுத்துவதனூடாக வடபகுதிக்கு வரும் இராணுவப் பிரிவுகளின் அளவைக் குறைப்பதே அவர்களின் நோக்கமாகும்''என்கிறார். இதே சமயம் கடந்த காலத்தில் சமாதான அமைப்பில் ஈடுபட்ட பௌத்த தேரரான மாதம்பிட்டியே அஸ்ஸஜீ தேரர், இக்குண்டு வெடிப்புக்கள் இராணுவ அதிகாரிகளின் வேலையென உறுதியாகக் கூறுகிறார். வட - கிழக்குப் போர்க் களத்திற்குச் செல்ல இராணுவப்பிரிவினருக்கு உள்ள விருப்பமின்மையால், கொழும்பிற்கு பாதுகாப்புத் தேவையென்ற எண்ணத்தை உருவாக்கவே இவ்வாறான குண்டு வைப்புக்களில் இராணுவத்தினர் ஈடுபடுவதாக அவர் கூறினார்.

இதே சமயம் ஈ.பி.டி.பி. இயக்கத்தின் யாழ்ப்பாண மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவதாசன் இப்படிக் கூறுகிறார்: எல்லாளன் படை மற்றும் வேறு பெயர்களில் கொழும்பில் சிறு குண்டுகளை வெடிக்க வைப்பது புலிகள் இயக்கத்தினரே. அவர்கள் இராணுவத்தைத் தவறான வழியில் திசை திருப்ப இவ்வாறு பல்வேறு பெயர்களில் இந்நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள்.

றஷ்மிய - 19950618

## 'மனநோயாளி'க்கு பதவி!

தற்போது மேஜர் ஜெனரல் பதவிக்குப் பதவியுயர்வு பெற்றுள்ள கேணல் பலித் பெர்ணாண்டோ இராணுவத்தை விட்டுவிலக வேண்டி வந்தது, ஐ.தே.க. ஆட்சிக் காலத்தில் சில இராணுவத் தளபதிகளிடமிருந்து எழுந்த கடும் எதிர்ப்புக் காரணமாகவே.

பிரிகேடியர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள, பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தயின் இணைப்பதிகாரியாகப் பணிபுரியும் கப்ரன் ஹிரன் ஹலங்கமுவும் இராணுவ சேவையிலிருந்து ஓய்வில் சென்றவராவார்.

பிரிகேடியர் நிலைக்கு பதவி உயர்வு பெற்றுள்ள இலங்கை இராணுவ சேவைப் படைப்பிரிவின் எச்.ஆர்.எஸ்.பெரேரா மனநோயாளியொருவர் எனக்கருதப்பட்டு இராணுவ சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒருநபராவார். அரச அமைச்சரொருவரின் தங்கையைத் திருமணம் செய்துள்ளதை கருத்திலெடுத்து கம்பஹா மாவட்ட அமைச்சரொருவரினால் இப்பதவி உயர்வு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சில பிரிவினர் கருதுகின்றனர். முன்பு ரூபா மூவாயிரம் ஓய்வூதியத்திற்கு உரிய அவர் புதுப்பதவி உயர்வுடன் ரூபா பத்தாயிரம் ஓய்வூதியத்திற்கு உரியவராக உயர்த்தப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடைத்துள்ளது.

பிரிகேடியர் நிலைக்கு உயர்த்தப்பட்டுள்ள இலங்கை இராணுவப் பொலிசின் மேஜர் ரீ.டி.ராஜபக்ஷவும் இராணுவ சேவையிலிருந்து ஓய்வில் சென்றிருந்தவராவார்.

இப்பதவி உயர்வுகள் வழங்குகையில் இராணுவத் தளபதியிடம் கூட எதுவித விசாரணையும் மேற்கொள்ளவில்லை எனவும், ஒன்றுக்கொன்று முரணான கொள்கையொன்று பின்பற்றுவது இராணுவ அதிகாரிகளின் கடும் விசனத்திற்குக் காரணமாகியுள்ள தெனவும் அறியமுடிகிறது.

றாவய - 19950618

## இந்து சமுத்திரத்துள் அமெரிக்கப் படை!

ஆசிய வலயத்தின் பாதுகாப்பைப் பாரதூரமாகப் பாதிக்கும் என அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்த இரணவில அமெரிக்காவின் குரல் (Voice of America) திட்டத்திற்குப் பாராளுமன்ற அங்கீகாரம் கிடைத்தவுடன் அமெரிக்காவின் ஐந்தாவது கடற்படைப்பிரிவை இந்து சமுத்திரத்தினுள் அமைக்க அமெரிக்கா தீர்மானித்துள்ளது.

உத்தேசிக்கப்பட்டபடி இக்கடற்படைப் பிரிவினூடாக அமெரிக்கா தென் ஆசிய வலயத்தினுள் இராணுவ மற்றும் அரசியல் ரீதியாகத் தலையிடுவதற்கு வழி அமைக்குமென்பது அரசியல் அவதானிகளின் கருத்தாகும். அக்கருத்தை உறுதிப்படுத்தும் சிறு சம்பவங்கள் கடந்த வாரத்தினுள் அமெரிக்கத் தலையீட்டால் இந்து சமுத்திர வலயத்தினுள் நடந்தேறியுள்ளன.

இச்சம்பவங்களில் முதன்மை இடம் பெற்றுள்ளது. இந்தியக் கடற்பரப்பில் அமைந்துள்ள கொச்சின் விரிகுடாவிற்கு அண்மையில் மிக அண்மையில் நடைபெற்ற இந்திய - அமெரிக்க கூட்டு இராணுவப் பயிற்சியாகும். இவ் இராணுவப் பயிற்சிக்காக அமெரிக்கா STUREEN CLASS என்ற ஹார்பூர் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தக் கூடிய ஆற்றலுடன் கூடிய அணு நீர்மூழ்கிகளை ஈடுபடுத்துவது அநேக அரசியல் அவதானிகளை சந்தேகத்திற்கு உட்படுத்தி உள்ளது. இவ் இராணுவப் பயிற்சியில் ஐக்கிய நாடுகள் பசுபிக் வலயப்படைப்பிரிவின் தளபதியான கடற்படை அட்மிரல் றொனால்ட் ஜேஸ்லாரோபர் உம் கலந்து கொண்டதாக அறியக்கிடைத்துள்ளது.

இச்சம்பவங்களுக்குப் புறம்பாகக் கொச்சின் கோவா பிரதேசங்களில் அமைந்துள்ள இந்தியக் கடற்படை தளங்களை அமெரிக்கா போர்க் கப்பல்களைத் திருத்துவதற்காக உபயோகிக்கவும் அமெரிக்க அதிகாரிகள், இந்திய ஆட்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளனர். இவ் அனைத்துச் சம்பவங்களும் இரணவில பிரதேசத்தில் அமெரிக்காவின் குரலிற்கான பாராளுமன்ற அங்கீகாரம் கிடைத்தன் பின்பு நடைபெற்றவை. ஆதலால் இரணவிலப் பிரச்சினை மிகவும் தீர்மானகரமான முறையில் தென் ஆசிய வலய நாடுகள் பலவற்றின் அரசியல் நிலவரத்தைப் பாதிப்பதாக அரசியல் விமர்சகர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர். முதல் சந்தர்ப்பத்தில் நேரடி இராணுவ நடவடிக்கைகளுக்காக அமெரிக்காவினால் ''இரணவில'' பயன்பாட்டிற்கு எடுக்காது விட இடமிருப்பினும் ஆரம்பம் தொடக்கமே வலயத்தினுள் அமைக்கப்பட்டுள்ள அமெரிக்கப் படைப்பிரிவிற்காக அனைத்துத் தொடர்பு மத்திய ஸ்தானமொன்றாக அதனைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க முடியாது எனவும் அவர்கள் மேலும் ''ஹிறு''விற்குத் தெரிவித்தனர்.

ஹிறு - 19950618

## புலிகளின் பகிரங்கக் கொலைகள்!

புலிகள் இயக்கத்தை அவமானத்திற்கு உள்ளாக்கி, அவர்களின் இயக்க இரகசியங்களைப் பாதுகாப்புப் படையினருக்கு வழங்கும் வடகிழக்குப் பிரதேசத்திலுள்ள தமிழ் மக்களைக் கைது செய்யவும், பகிரங்கமாகக் கொல்லவும் புலிகள் இயக்கம் ஆரம்பித்துள்ளதாக வடபகுதியிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 600ஐத் தாண்டியுள்ள அதே சமயம் 12 பேர் மட்டில் பகிரங்கமாகக் கொல்லப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புப் படையினரால் தொடர்ச்சியான தாக்குதலொன்று நடத்தப்பட்டால் தமக்கு ஏற்படக்கூடிய பாதிப்பைக் குறைத்துக் கொள்ளும் நடவடிக்கையாக வட மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களிற்கும் மீண்டும் இராணுப் பயிற்சி வழங்கவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

லக்பிம - 19950618

தொகுப்பு:
விவேக்

## தமிழ் இளைஞர்கள் கடத்தல்!

ஜூன் 16ம் திகதி வியாழக்கிழமை நள்ளிரவு கொழும்பு கிரான்ட்பாசிலுள்ள ஹென்வூட் (Kent wood) லொட்ஜில் தங்கியிருந்த இரண்டு தமிழ் இளைஞர்கள் மஞ்சள் வான் ஒன்றில் வந்தவர்களினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளார்கள்.

நள்ளிரவு வேளையில் சிவில் உடையில் வந்த ஒரு கோஷ்டி லொட்ஜில் தங்கியிருந்தோரை விசாரித்து விட்டு சுரேஷ், சிறிதரன் ஆகிய இரண்டு இளைஞர்களை மட்டும் அவர்களுடன் அழைத்துச் சென்றுள்ளார்கள்.

லொட்ஜின் உள்ளே வந்து விசாரித்த நான்கு பேரும் ரி - 56 துப்பாக்கியே வைத்திருந்தார்கள். இது அனேகமாக இராணுவம் பயன்படுத்துகின்ற துப்பாக்கியாகும். அதைவிட இவர்கள் முழுக்க முழுக்க சிங்களத்திலேயே விசாரித்துள்ளார்கள்.

இவர்கள் வந்த மஞ்சள் வானின் இலக்கத்தகடுகளும் தெரியாவண்ணம் மறைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.



### பிரேமதாச கால பேச்சுவார்த்தை:
## தெற்கு பிரச்சினையை தீர்க்கவே செய்யப்பட்டது!
### -தயான் ஜயதிலக்க

''பிரேமதாச அரசு அன்று புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதற்கான காரணம் நாட்டில் ஏற்பட்டிருந்த இரண்டு ஆயுதப்போராட்டங்களையும் அடக்குவதற்கு முதல் ஒன்றுடன் சமரசம் செய்துகொண்டு அந்த இடைவெளியைப் பயன்படுத்தி மற்றைய ஆயுதப்போராட்டத்தை அடக்கவே''

இப்படி கூறியவர் முன்னாள் வடகிழக்கு மாகாண ஈ.பி.ஆர்.எல்.எப். அரசாங்கத்தின் ''சுகாதார மற்றும் கொள்கை திட்டமிடல்'' அமைச்சராக இருந்தவரும், அதன்பின் பிரேமதாசவின் நெருங்கிய சகாவும் ஆலோசகருமாகவும் இருந்த தயான் ஜயதிலக்கவே. அவர் அண்மையில் சிங்கள தினசரிப் பத்திரிகையான லங்காதீபவுக்கு வழங்கிய பேட்டியொன்றிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

தயான் ஜயதிலக்க இன்று பிரேமதாச சென்டர் நிர்வாக இயக்குனர். பிரேமதாச எடுத்த பல முக்கியமான அரசியல் முடிவுகளுக்குக் காரணமாக இருந்தவர் தயான் என்பது குறிப்பிடத்தக்கது.

தயான் ஜயதிலக்கவின் பேட்டியில் இருந்து சில பகுதிகள்.

''ஜனாதிபதி பிரேமதாச புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதற்கு நானும் உடன்பட்டேன். அதற்கான முதலாவது காரணம், அப்படியொரு பேச்சுவார்த்தை நடாத்தப்படாமல் இருந்திருக்குமானால் இலங்கை இராணுவம் இரண்டு போர்முனைப்புகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவந்திருக்கும்; வடக்கில் புலிகளுடனும் தெற்கில் ஜே.வி.பி.யுடனும். அப்படியொரு பேச்சுவார்த்தை நடாத்தப்படாமல் இருந்திருக்குமானால் அரசு ஜே.வி.பி. பாஸிஸ்டுகளுக்கு அடிபணிய வேண்டியிருந்திருக்கும். எனவே புலிகளுடனான 14 மாத காலப் பேச்சுவார்த்தைக் காலப்பகுதி தெற்குப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நல்லதொரு இடைவெளியாக இருந்தது.

இரண்டாவது காரணம்; அதுவரை காலம் இலங்கை அரசாங்கமும் புலிகள் இயக்கமும் நேருக்கு நேர் பேச்சுவார்த்தை நடாத்தியது கிடையாது. அதையும் செய்து காட்ட வேண்டும் எனும் நிலைப்பாட்டில் இருந்தேன்.

அன்று பிரேமதாச புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார், சீமெந்து, வாகனம், பணம் என்பவையெல்லாம் வழங்கினார் என்று பிரச்சாரம் செய்த பொ.ஐ.மு. இன்று செய்ததென்ன? சந்திரிகா ஹொபன்கேகனில் இருந்த போது அரசாங்கம் வழங்கிய சீமெந்தில் புலிகள் பங்கர் கட்டுவதாக ஒப்புக்கொண்டிருந்தார். டிரான்சிஸ்டர் டோச்களினால் ஜொனி வெடிகள் செய்ய முடியும் என்பதை அறிந்திருந்தும் கூட பெட்டரி மீதான தடைநீக்கப்பட்டது. அனுருத்த ரத்வத்த வவுனியா சோதனை முகாமிலிருந்து பெட்டரி நிறைக்கப்பட்ட பொதிகள் என்பவற்றை வடக்குக்கு அனுப்பும் காட்சியை ரூபவாஹினி கூட காண்பித்தது.

பிரேசமதாச ஆயுதம் கொடுத்தது மீண்டும் எங்களுக்கு திருப்பி தாக்குங்கள் என்ற அர்த்தத்திலல்ல. அன்றைய சூழ்நிலையில் இந்திய அமைதி காக்கும் படையுடன் கொண்டிருந்த முரண்பாட்டின் காரணமாகவே அவர் அவ்வகையான காரியத்தை செய்தார். பிரேமதாச ஒரு குழியை சிறிது தோண்டி வைத்தார் என்றால் சந்திரிகா அதே குழியை விசாலப்படுத்தி ஆழப்படுத்தி பல யார் தொலைவிலிருந்து வேகமாக ஓடிவந்து அதே குழிக்குள் விழுந்து கொண்டார் 'இவ்வளவே.

சிங்கள இனத்துக்கு இருக்கின்ற ஒரேயொரு அரசு இலங்கை மட்டுமே என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். எங்களுக்கு பின்னோக்கி செல்ல முடியாது சுற்றிலும் இருப்பது பெரிய சமுத்திரம். அதற்கப்பால் இருப்பது அந்தாட்டிக்கா. இன்று பிரபாகரன் ஆரம்பித்திருப்பது சிங்கள மக்களை சமுத்திரத்திற்குள் தள்ளிவிடும் யுத்தம் என்பதை நாம் தெரிந்து கொள்வது அவசியம். இன்று அரசாங்கம் நடத்தும் யுத்தம் ஒரு வரையறுக்கப்பட்ட போர். இது மிகவும் பலவீனமான ஒன்று. வரையறையில்லாத ஒரு போர் நடாத்தப்படாது போனால் நாம் தொடர்ந்தும் பாரிய தோல்விகளுக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என்பது மட்டும் நிச்சயம்!

இவ்வாறு தயான் ஜெயதிலக பேட்டியில் தெரிவித்திருக்கிறார். இரண்டு எதிரிகளுடன் ஒரே நேரத்தில் மோத முடியாது என்றதனால் தந்திரோபாய ரீதியாகத்தான் புலிகளுடன் பிரேமதாச அரசு பேசியிருக்கிறது என்பது தெளிவு. ஜே.வி.பி. சிங்கள இளைஞர்களைக் கொன்று குவித்த பின் புலிகளுடனான பேச்சை முறித்து யுத்தத்தில் ஈடுபட்டது. His master's roice ஆக, பிரேமதாச இதய சுத்தியுடன் கண்ணியமாகப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார் என்றும் புலிகள் ஒரு தலைப்பட்சமாக யுத்தத்தை ஆரம்பித்து விட்டதாகவும், கூப்பாடு போட்டவர்கள் இப்போது என்ன சொல்லப்போகிறார்கள்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரிநிகர் SARINIHAR

சரிநிகர்

# அடுத்த காலடி

உங்களின் கைகளில் இப்போது விரிந்திருப்பது சரிநிகரின் எழுபத்தைந்தாவது இதழ். தொண்ணூறாம் ஆண்டு ஜூன் மாதம் ''ஈழயுத்தம் - 2'' ஆரம்பமான போது சரிநிகரின் முதலாவது இதழ் வெளியானது. ஐந்து வருடங்கள் ஆயிற்று. மானுட வரலாற்றில் ஐந்து வருடங்கள் என்பது ஒரு அரைக்கால் மணித்துளியும் ஆகாது. ஆனால், சரிநிகர் போன்ற மாற்றுப் பத்திரிகைகளுக்கோ ஒரு ஐந்து வருடங்களானாலும் அது நீண்ட பயணமும் நெடிய காலமுமாகும்.

இந்த ஐந்து வருடங்களிலும் சரிநிகரின் வாசகர் தொகை ஆயிரக்கணக்காகப் பல்கிப் பெருகி இருக்கிறது. இந்த ஐந்து வருடங்களிலும் அளவற்ற குருதியும் கண்ணீரும் சிந்தப்பட்டுள்ளது. யுத்தம் எல்லா விழுமியங்களையும் அடித்துக் கொண்டு செல்கிறது.

நாம் முதலாவது இதழை வெளியிட்ட போது இருந்த சூழலுக்கும் இப்போது இந்த எழுபத்தைந்தாவது இதழை வெளியிடுகிற போது உள்ள சூழலுக்கும் அடிப்படையில் எந்த மாற்றமும் இல்லை என்பது நமது அரசியல் வில்லங்கங்களுள் ஒன்று. பொருத்தப்பாடு கருதியும் சரிநிகரின் அரசியல், சமூக இலட்சியங்களை மீளவும் ஒருமுறை வலியுறுத்தவும் வேண்டி நாம் முதலாவது இதழில் எழுதிய ஆசிரியர் தலையங்கத்தை அருகில் மறுபிரசுரம் செய்கிறோம்.

கடந்த ஐந்து வருடங்களில் சரிநிகரிலும் சரிநிகர் தொடர்பாகவும் எழுந்த கேள்விகள், அபிப்பிராயங்கள், கருத்தியல் முரண்பாடு போன்றவை குறித்து சரிநிகர் ஆசிரியரும் ஆசிரியர் குழுவினரும் அக்கறை கொண்ட நண்பர்கள், விமர்சகர்கள் பலருடன் நீண்ட கருத்தாடல்களை நிகழ்த்தினர். சரிநிகர் வாசகர்களிடமும் ஒரு கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டது. இக்கருத்துக் கணிப்பின் முற்றான விவரங்களும் ஆய்வும் இனிவரும் சரிநிகர் இதழ்களில் வெளியாகும். எனினும் சில ஆரம்பத் தகவல்களை உங்கள் முன் வைக்கிறோம். இதுவரை மொத்தம் 358 வாசகர்கள் வாசகர் கருத்துக் கணிப்புப் படிவங்களை நிரப்பி அனுப்பியிருந்தார்கள். இவர்களுள் 271 தமிழர்களும், 86 முஸ்லீம்களும், ஒரு சிங்களவரும் உள்ளனர். அனுப்பியவர்களில் 25 பேர் மட்டுமே பெண்கள். யாழ், வன்னி மாவட்டத்திலிருந்து 22 பேரும் மலையகத்திலிருந்து 74 பேரும், அம்பாறை மாவட்டத்திலிருந்து 26 பேரும், மட்டக்களப்பிலிருந்து 79 பேரும், திருமலையிலிருந்து 40 பேரும், புத்தளத்திலிருந்து 16 பேரும், கொழும்பிலிருந்து 101 பேரும் படிவங்களை அனுப்பியிருந்தனர்.

இந்தக் கருத்துக்கணிப்பும் நண்பர்கள், விமர்சகர்கள் ஆகியோருடனான விவாதங்களும் சரிநிகர் பற்றிய விமர்சனங்களிலும் எம்மையும் ஈடுபடுத்திற்று.

ஒரு புதிய உத்வேகத்துடன் இன்னும் ஆழமான தேடலுடனும் மேலும் திடமான கடப்பாட்டுடனும் சரிநிகரை வெளியிட்டு வருவோம் என்பதை அனைவருக்கும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சரிநிகர் இதுவரை கடந்து வந்துள்ள பாதை மிகவும் சிக்கலானதும் ஆபத்துக்கள் நிறைந்ததுமாகும். முதலிரண்டு வருடங்களிலும் பத்திரிகையைக் கடைகளில் விற்பனைக்கு வைக்கவே பெரும்பாலான வர்த்தகர்கள் முன்வரவில்லை. பத்திரிகையை விற்றுத்தர முன்வந்த வர்த்தகர்களும் மேசைக்கு அடியில் சரிநிகரை ஒளித்து வைத்துத் தான் விற்க நேர்ந்தது.

சரிநிகருக்கு எழுத முன்வருபவர்களில் வெகு சிலரே தமது சொந்தப் பெயர்களில் எழுதத் துணிகிறார்கள். பலருக்கு சரிநிகர் இன்னும் ஒரு 'அபாயகரமான' பத்திரிகையாகவே உள்ளது.

மாற்றுக் கருத்துக்களும், மாற்றுச் சிந்தனைகளும் எவ்வித ஈவிரக்கமுமின்றி அழிக்கப்பட்ட சூழலும், கருத்துக்களைக் கருத்துத் தளத்தில் சந்திக்க முடியாத அரசியலாளரின் எதிர்ப்புக்களும் எச்சரிக்கைகளும் எப்போதும் எங்களுடன் கூட வந்திருக்கின்றன.

ஆரம்பத்திலிருந்தே வடபுலத்தில் சரிநிகர் தடை செய்யப்பட்டுள்ளது. இது பற்றிய ''உத்தியோகபூர்வமான'' அறிவித்தலெதுவும் லண்டனிலிருந்தோ அன்றிக் கோண்டாவிலிலிருந்தோ இதுவரை வெளியாகவில்லை. என்றாலும், நடைமுறையில் வடபுலத்தில் சரிநிகரின் நிலை இதுதான்.

கொழும்பிலோவெனில், காலத்துக்குக் காலம் எங்களைத் தங்கள் முற்கற்பிதங்களின்படி 'புலிகளின் பேப்பர்' என்றோ 'மலையக மக்கள் முன்னணியின் பேப்பர்' என்றோ 'சந்திரிகாவின் வால்' என்றோ முத்திரை குத்தி வருவது நடந்து வந்திருக்கிறது. கட்சி மற்றும் இயக்க அரசியல் சாராத அரசியல் பத்திரிகைத்துறைப் பாரம்பரியம் இல்லாத ஒரு சூழலில் இத்தகைய முத்திரை குத்தல்கள் எனும் விபத்துக்களும் எங்களுக்கு இப்போது சாதாரணமாகப் போய்விட்டன.

இன்னொரு தளத்தில், சரிநிகர் தமிழ் இனவாதத்தைத் தூண்டுகிறது என்றும் கடந்த ஓகஸ்ட்டுக்குப் பிறகு, சமாதானத்துக்கு எதிராகச் செயல்பட்டு வந்திருக்கிறது என்றும் அரசு - புலிகள் தொடர்பான செய்திக் கண்ணோட்டங்களில் சமநிலையை இழந்துவிட்டது என்றும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் அடிப்படைக் கோட்பாடான நீதி, சமத்துவம் என்ற இரண்டினதும் அடிப்படையில் தமிழ் முஸ்லீம் மக்களின் குரலாகச் சரிநிகர் இருந்து வந்திருக்கிறது. இந்தக் குற்றச்சாட்டுக்களை வாசகர்களாகிய உங்களிடமே விட்டுவிடுகிறோம். எழுதுங்கள்.

தங்களுக்கு வசதிப்படுகிற போது தங்களுக்கு வசதிப்பட்ட மாதிரிச் சரிநிகரின் கட்டுரைகளையும், பிறபடைப்புக்களையும் மூலம் குறிப்பிடாமல் 'பாவிப்பது' உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் ஒரு கலையாகவே மாறியுள்ளது என்பதையும் இச்சந்தர்ப்பத்தில் நாம் பதிவு செய்ய விரும்புகிறோம்.

சரிநிகர் ஆரம்பத்திலிருந்து வந்தது போலவே சுதந்திரமான கருத்துக்களுக்கான ஒரு களமாகவே என்றும் இருக்கும்.

யுத்தம் - சமாதானம் பற்றிய பல்வேறு கருத்து நிலையில் உள்ளவர்களுடைய பேட்டிகளும் கட்டுரைகளும் 4, 5, 6, 7, 8, 9 ஆம் பக்கங்களில் வெளியாகியுள்ளன. இனத்துவப் பிரச்சினைக்கு வெட்டொன்று துண்டிரண்டு என்பது மாதிரியான சடுதித் தீர்வுகள் சாத்தியமில்லை என்பதையே இத்தகைய பன்முகப் பாங்கான அபிப்பிராயங்கள் தெரிவிக்கின்றன. கூடவே இலங்கைக்கான ஒரு சமஷ்டி அரசியல் யாப்பை வலியுறுத்தித் தென்னிலங்கை எங்கும் பிரசாரக் கூட்டங்களை நடாத்தி வரும் அரசியல் யாப்பு மாற்றத்திற்கான இயக்கத்தினரின் அரசியல் யாப்பு வரைவு ஒன்றையும் பிரசுரிக்கிறோம்.

இவை பற்றிய உங்களுடைய கருத்துக்களையும் எதிர்பார்க்கிறோம்.

தென்னிலங்கையிலும் வடபுலத்திலும் இப்போது மிகவும் தூக்கலாக இருக்கிற யுத்தமோகம் பிரச்சினையைத் தீர்க்க எவ்வகையிலும் உதவப்போவதில்லை. அரசமைப்பை முற்றாக மீளமைப்புச் செய்து அதன் மூலம் தமிழ், முஸ்லீம் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கக்கூடிய வகையில் தீர்வை முன்வைக்காது இடம்பெறும் யுத்தம் அநீதியானதும் மூறையற்றதுமாகும். அதே போல வடபுலத்தை மூடுண்ட சமுதாயமாகக் குரலற்றதாகவும் முகமற்றதாகவும் நெருக்கியபடி இறுதி யுத்தம் என்று புலிகள் கோஷம் எழுப்புவதும் முறையற்றதாகும்.

இந்த யுத்தத்தை ஆரம்பத்திலிருந்தே நாங்கள் எதிர்த்து வந்திருக்கிறோம். யுத்தம் என்பது யுத்தம்தான். அதற்கு ஒருபோதுமே மனிதாபிமான முகம் இருக்க நியாயமில்லை. நீண்ட யுத்தத்தின் தர்க்க ரீதியான முடிவு கொடுங்கோன்மையே அன்றிச் சமாதானமல்ல. இலங்கை போன்ற பன்முகப்பாங்கான இனத்துவங்களும், கலாசாரங்களும் வேரூன்றியிருக்கும் நாட்டின் அரசும் ஆயுதப்படைகளும் ஓரினத்துவத்தை மட்டுமே பிரதிபலிக்கும் வரை அந்தப் படைகளுக்கோ அன்றி அரசுக்கோ (State) தமிழ், முஸ்லீம் மக்கள் மீது எவ்வித நியாயாதிக்கமும் கிடையாது என்பது எமது நிலைப்பாடு.

எனவேதான் கடந்த ஐந்து வருடங்களாக நாம் திரும்ப திரும்பச் சொல்லி வந்த அடிப்படை அரசியல் கருத்தை மீளவும் வலியுறுத்த விரும்புகிறோம். தமிழ், முஸ்லீம் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்து நடைமுறைப் படுத்துவதுதான் அரசு செய்யவேண்டியது. அதுதான் தீர்வுக்கான முதல் படி. மறுபுறத்தில், சுயநிர்ணய உரிமை எனும் கருத்தையும் வெறும் அரசியல் சார்ந்த ஒன்றாகக் குறுக்கி விடுகிற ஆபத்தான போக்கையும் தமிழ், முஸ்லீம் மக்கள் நிராகரிக்க வேண்டும். தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பது வெறுமனே தேசிய இனங்களின் தன்னடையாளம், மற்றும் தன்னாட்சி என்பதுடன் சுருங்கி விடமுடியாது. ஒரு தேசிய இனத்தின் தன்னுறுதிப்பாடும், தன்னாட்சியும் அது மற்றவர்களையும் மற்றத் தேசிய இனங்களையும் குறித்து எவ்வளவு பொறுப்புணர்வைக் காட்டுகிறது என்ற அடிப்படையில் பார்க்கிற போதே உண்மையான அர்த்தம் பெறுகிறது.

மற்றவர்கள் தொடர்பாக எங்களுடைய கடப்பாடும் பொறுப்புணர்வும் என்ன? இந்தக் கேள்வியிலிருந்துதான் சுயநிர்ணய உரிமை தொடர்பான அரசியல், தார்மீகப் புரிதல் ஆரம்பமாக வேண்டும். முஸ்லீம், தமிழ், சிங்கள மக்கள் அனைவருக்குமே இது பொருந்த வேண்டும். தங்களுடைய தனித்துவத்தையும், உரிமைகளையும் வலியுறுத்துகிற தமிழ் மக்கள், முஸ்லீம் மக்களதும் அவர்களது உரிமைகள் தொடர்பாகத் தங்களுடைய பொறுப்புணர்வு என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். அதே போல தமது தனித்துவ அடையாளங்களையும் உரிமைகளையும் முஸ்லீம் மக்கள் வலியுறுத்துகிற அதேநேரம் தமிழ் மக்கள் தொடர்பாகத் தங்களுடைய பொறுப்புணர்வு என்ன என்பதைச் சிந்திக்க வேண்டும். இதுதான் சுயநிர்ணய உரிமையின் மறுபக்கம். இத்தகைய புரிதலின் அடிப்படையில்தான் சமத்துவமும் பரஸ்பர கௌரவமும் அதனூடாக ஜனநாயகமும் ஏற்பட முடியும்.

அற்புதமான எழுத்தாளர் ஸ்தயேவ்ஸ்கியின் 'கரமஸோவ் சகோதரர்கள்' என்ற நாவலில் வருகிற அலியோஷ் க்ரமஸோவ் ஒருமுறை சொல்கிறார்:

''நாங்கள் எல்லோருமே மற்றைய ஒவ்வொருவருக்கும் பொறுப்பானவர்கள்; ஆனால் மற்றைய எல்லோரையும் விட நான்தான் அதிக பொறுப்புள்ளவனாக இருக்கிறேன்''. (We are all responsible for everyone else. But I am more responsible than all the others) பலதேசியங்கள் வாழும் நாட்டில் நாங்கள் கருதுகிற சுயநிர்ணய உரிமையின் முழுமையான அர்த்தம் இதுதான்.

எங்களுக்கு முன்னால் அதிக தெரிவுகள் இல்லை. ஒன்று - சமத்துவம், சகோதரத்துவம் எல்லாவற்றிலும் பன்மைப்பாடு, கருத்தாடல்.

மற்றது - கொடுங்கோன்மை, யுத்தம்.

மக்களதும் எங்களதும் தெரிவு முன்னது. வடபுலத்தும், தென்புலத்தும் ஆட்சியாளரது தெரிவு பின்னது!.

-சரிநிகர் ஆசிரிய பீடம்



## முதல் காலடி

**ஒரு 'அதிரடித் தாக்குதல்' போல எதிர்பாராது திடீரென்று உங்களைச் சந்திக்கிறோம். (பாருங்கள்: மொழியே எவ்வளவு இராணுவ மயப்பட்டுவிட்டது என்று!)**

**'சரிநிகர்' என்ற எங்களுடைய பத்திரிகையே நாம் சந்தித்துக் கொண்ட, சந்திக்கப் போகின்ற தளம்.**

**நீண்ட காலமாகவே இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம் இத்தகைய பத்திரிகையொன்று தமிழில் கொண்டுவர வேண்டுமெனத் திட்டமிட்டிருந் தும் இன்றுதான் சாத்தியமாகி உள்ளது.**

**இலங்கை பல்வேறு இனக்குழுமங்களையும், பல்வேறு மதங்களையும் கொண்ட ஒரு நாடு என்பதும் இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு எவ்வாறு இந்த இனக்குழுமங்களிடையேயும், மதங்களிடையேயும் சமத்துவம் பேணப்படுகிறது: பேணப்படப் போகின்றது என்பதிலேயே தங்கியுள்ளதென்பதும் ஒரு தவிர்க்க முடியாத வரலாற்று நியாயம் என்று கருதுகிறோம். இன்று வரையும் இனக்குழுமங்களிடையே நிலவி வருகிற அசமத்துவம் என்று முற்றாக நீக்கப்படுகிறதோ அன்றுதான் இலங்கையில் வரலாறு முன்நோக்கிய முதலாவது அடியை எடுத்துவைக்க முடியும்.**

**சரிநிகர் - அதனுடைய பெயர் தெளிவுபடுத்துகிற மாதிரியே இலங்கையின் சகல இனக்குழுமங்களுக்கிடையேயும் அசமத்துவத்தை ஒழிக்க முன்வருகிறது. எங்கெங்கு அசமத்துவம் நிகழ்கிறதோ அங்கங்கு எங்களுடைய 'தாக்குதல்கள்' இடம்பெறும்.**

**நீதியும், மனித உரிமைகளும், உண்மையும், பத்திரிகைச் சுதந்திரமும் வாழும், வாழ்விக்கும் தேசமே எங்களுடைய இலட்சியம். இந்த இலட்சியம் யதார்த்த நிலைக்குக் கொண்டு வரப்படவேண்டுமானால், இந்த நாட்டின் முக்கியமான சிறுபான்மை மக்களான வடக்குக் கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லீம்கள் ஆகியோருடைய தனித்துவம் வாய்ந்த பிரச்சினைகளும், அவர்களுடைய தனித்துவமான இனக்குழும இயல்புகளும் கவனத்திலெடுக்கப்பட்டு ஒரு பரந்த புரிந்துணர்வு அடிப்படையில் தீர்வு முயற்சிகள் செய்யப்பட வேண்டும்.**

**சரிநிகர் - அனைத்துச் சிறுபான்மை மக்களதும் 'தேசிய'த்துக்கு உத்தரவாதம் அளிக்கும். அதே சமயம் இம்மக்களிடையே நல்லெண்ணமும் சிறந்த உறவுகளும் நிலவத் தன்னாலான பணியைப் புரியும். மேலாதிக்க வாதமும், அச்சுறுத்தலும் எங்கிருந்து வந்தாலும் எதிர்க்கப்படவேண்டியனவே என்னும் நிலைப்பாட்டிலிருந்து சரிநிகர் பிறழாது.**

**'நாலுவார்த்தை பேச, எழுத' எவர்க்கும் இருக்கும் உரிமையை அங்கீகரிக்கும் நாம் எங்களுக்கிருக்கும் அந்த உரிமையை எவர்க்காகவும் விட்டுக் கொடுக்கவும் தயாரில்லை.**

**எங்களுடைய நீண்ட, கடினமான, ஆபத்துக்கள் நிறைந்த பயணத்தில் துணைக் கரம் சேர்க்க வாருங்கள்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்று சில தமிழ்ப்புத்திஜீவிகள் இனப்பிரச்சினை தொடர்பாக முன்னெப்போதுமில்லாத வேகத்துடனும், உக்கிரத்துடனும் ஒரு கருத்தை முன்வைத்துப் பேசியும் எழுதியும் வருகின்றனர். அக்கருத்தின் வடித்தெடுத்த சாரம் ''ஒரு சமாதானத்தீர்விற்குப் பிரதான முட்டுக்கட்டை புலிகளின் இராணுவமயப்பட்ட முரட்டுப் பிரிவினைவாதமாகும். அத்துடன் தமிழ் மக்களுக்குப் பிரதான பிரச்சினை புலிகளின் ஜனநாயக மறுப்பும் போர்வெறியுமேயாகும்'' என்பதாகும். அரசு ஒரு தீர்வை முன்வைத்தல் அவசியம். இராணுவம் சில அத்துமீறல்களில் ஈடுபடுவது கண்டிக்கத்தக்கது என்ற வகையில் இவர்கள் விரிவாகச் சுற்றிவளைத்துப் பேசினாலும் அதில் இழையோடி நிற்கும் மைய எண்ணம் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டால் எல்லாம் சரிவந்து விடும் என்பதே.

இவர்களுடைய பேச்சு, எழுத்து ஆகியவற்றின் இந்தமையத்தொனியை சரியாகவே புரிந்து கொண்டுள்ள சில தீவிர சிங்கள இனவாதிகள் இவர்களுடைய எழுத்துக்கும் பேச்சுக்கும் முக்கியத்துவம் கொடுக்க முனைந்துள்ளனர். இங்கு நாம் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இலங்கை இராணுவத்துடன் இணைந்து புலிகளுக்கு எதிராகச் செயற்படுவதாகப் பலரால் விமர்சிக்கப்படும் புளொட், ஈ.பி.டி.பி., எனும் முன்னாள் ஈழவிடுதலை இயக்கங்கள் கூட புலிகளை அழிப்பதற்கு முன்னர் அரசு ஒரு சரியான அரசியல் தீர்வை முன்வைக்காத பட்சத்தில் பாராளுமன்றத்திலும் அதற்கு வெளியிலும் தாம் அரசிற்கு தற்போது வழங்கிவரும் ஆதரவை வாபஸ் பெற்றுக்கொள்ள வேண்டிவரும் என அண்மையில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளன. புலிகளை அடித்துப் பலவீனப்படுத்திவிட்டால் தமிழ் மக்களுக்கு ஒரு ஏற்புடைய தீர்வை முன்வைக்க வேண்டிய தேவையோ, அழுத்தமோ இலங்கை அரசிற்கு இருக்காது என இவ்வியக்கங்கள் நம்புவதனாலேயே அவர்கள் அந்த நிலைப்பாட்டினை எடுக்கின்றனர் எனலாம்.

சந்திரிகாவிடம் ஒரு தீர்வை முன்வைக்கும்படி வலியுறுத்துவதற்காக பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றாகச் செல்வதற்குக் கடந்த மாதம் நடந்த முயற்சிகளின் போது கலாநிதி நீலன் திருச்செல்வத்தை புளொட்டும், ஈ.பி.டி.பியும் சந்தித்தன. தீர்வை முன்வைக்கும்படி அரசை நாம் தற்போது நெருக்கக் கூடாதென்று நீலன் தெரிவித்தாராம். அதைக் கேட்ட புளொட் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நாம் இப்போது அதைப் பெறாவிட்டால், புலிகளை அரசு அடித்து ஓரங்கட்டிய பின் எப்போதுமே அரசிடமிருந்து இனப்பிரச்சினைக்கு ஒரு சரியான தீர்வை பெற்றிடவே முடியாதென்று வாதிட்டிருக்கிறார். ஏன் புலிகள் அழிக்கப்பட்டுவிட்டால் நாம் அதன்பின் எம் உரிமைகளுக்காக ஜனநாயக வழியில் போராடலாம் தானே என அதற்குப் கலாநிதி நீலன் பதிலிறுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்கள் என்போர் வரலாற்றை மறந்துவிட்ட மாங்காய் மடையர்கள் எனக் கருதுகின்றாரா கலாநிதி நீலன்?

கடந்த நாற்பது வருடங்களுக்கு மேலாக சாத்வீக, ஜனநாயக வழியில் போராடி தமிழ் அரசியலாளர் ஏதும் பெறவில்லை என்பதும், பதிலாக 58, 61 (சத்தியாக்கிரகம்) 77, 81, 83 ஆகிய வருடங்களில் தமிழர் மீது வன்முறையே கட்டவிழ்த்து விடப்பட்டது என்பதும், 83 இன் பின் வளர்ச்சி பெற்ற ஆயுதமேந்திய தமிழ் இயக்கங்களின் நடவடிக்கைகள் காரணமாக இலங்கை அரசிற்குத் தோன்றிய பயங்கர இராணுவ நெருக்கடி நிலைமையைப் பயன்படுத்தி 87இல் இந்தியா (தன் நலன்களை மட்டும் மனதில் கொண்டு), இலங்கை அரசின் கைகளை முரட்டுத்தனமாக முறுக்கியே தற்போது நடைமுறையில் ஊசலாடிக்கொண்டிருக்கும் ஒரு காயடிக்கப்பட்ட தீர்வான 13வது திருத்தச் சட்டத்தைக் கூட பெற்றுக் கொடுக்க வேண்டியதாயிற்று என்பதும் வரலாறு.

எனவே ஜனநாயகத் தன்மையற்ற, வன்முறையின் பாற்பட்ட பெரும் அழுத்தமே தன்னை ஒரு தீர்வை நோக்கி ஓரளவேனும் தள்ளிவிடக் கூடிய காரணி எனும் எண்



புகைப்படம்: பாரதி

# அரசியல் தீர்வுக்கு முட்டுக்கட்டை புலிகளின் முரட்டுப் பிடிவாதமா?

ணத்தை மிகத்தெளிவாகவே இலங்கை அரசு மேற்கண்ட தன் நடத்தை மூலம் தமிழ் மக்களின் மனதில் பதிய வைத்துள்ளது.

இது நாற்பது வருடங்களுக்கு மேலான அரசியல் நசுக்கத்தினால் கடுமையாகக் கன்றிப் போயிருக்கும் ஓர் உளவியற் பதிவு என்பதை நாம் இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

இவ்வுளப் பதிவு இல்லாதிருந்திருந்தால் தமிழ் மக்கள் 1977இல் இனித்தமிழ் ஈழம் தான் ஒரே தீர்வு என்ற கூட்டணியின் கோஷத்தின் மீது வாக்களித்திருந்திருக்க மாட்டார்கள்.

ஒரு ஜனநாயகரீதியான தீர்வின் மீது, அதை முன்வைக்கும் என அவர்கள் எதிர்பார்த்த பொதுசன ஐக்கிய முன்னணியின் மீது அவர்கள் அளவுகடந்த நம்பிக்கை வைத்து, கன்றிப்போன இவ்வுளப்பதிவைச் சற்று மறந்து, கடந்த ஜனாதிபதித் தேர்தலில் வாக்களித்தனர். நடந்தது என்ன? புலிகள் பேச்சுவார்த்தையை முறித்தார்கள் என்று ஒரு குற்றச்சாட்டை முன்வைத்து வெளிப்படையாகவே தீர்வு வழங்க பின்னடிக்கிறது அரசு.

அது மட்டுமல்ல, சிங்கள பௌத்தப் பீடாதிபதிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க பௌத்த மதத்தின் அதிமுதன்மை, சிங்கக் கொடி, தேசியகீதம் என்பன 78 யாப்பில் உள்ளது போலவே பேணப்படும் என பகிரங்கமாக உறுதிமொழி அளித்துள்ளது சந்திரிகா அரசு. வடகிழக்கில் தமிழ் முஸ்லீம் மக்களுக்கான மாநில சுயாட்சிக்கு வைக்கப்பட்ட ஆப்பு இதுவென்பதை யாப்பியல் கற்றோர் நன்கறிவர்.

பௌத்தமதம் சாராதவர் பெரும்பான்மையாகவுள்ள ஒரு பிராந்தியத்திற்கு மாநில சுயாட்சி வழங்கினால், அரசியல் யாப்பின் உள் ஊன்றிய சரத்துக்களில் (entrenched clauses) ஒன்றான பௌத்தமத அதிமுதன்மை கூறும் சரத்தை அது மீறும் எனவும் அதனால் 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காயடிக்கப்பட்ட மாகாண சபை கூடச்செல்லுபடியாகாது எனவும் சில

உச்சநீதிமன்ற நீதிபதிகள் 1987 இல் 13வது திருத்தச் சட்டத்தின் மீது வழங்கிய தீர்ப்பில் சுட்டிக்காட்டியதை இங்கே ஞாபகப்படுத்துகிறோம். புலிகளுடன் பேசிக்கொண்டிருந்த காலத்திலேயே அரசியல் யாப்பு வரைபிற்குப் பொறுப்பாக இருக்கும் ஜீ.எல்.பீரிஸ் அவர்கள் பௌத்த பீடாதிபதிகளைக் கண்டு இந்த விடயங்கள் தொடர்பாக அத்தேரர்கள் கொண்டிருந்த சஞ்சலத்தை நீக்கும் வகையில் அரசின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திய செய்தி அந்நேரம் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தது.

இதற்குச் சற்று முன்னர்தான், 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் குறைந்த பட்ச சுயாட்சி என்பது கூட சாத்தியமில்லை, எனவே அரசு நிச்சயமாக அதைவிட முன்னேற்றகரமான ஒரு தீர்வையே ஆலோசிக்கிறது என அதே ஜீ.எல்.பீரிஸ் குறிப்பிட்டிருந்தார்.

கலாநிதி நீலனின் அனுசரணையுடன் அவர் சமஷ்டி அடிப்படையில் அமைந்த வடமாகாணத்தையும், எல்லைகள் மீள்வரையப்பட்டு சில பகுதிகள் துண்டிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தையும் உள்ளடக்கிய பிராந்திய அலகைக் கொண்ட ஒரு தீர்வை தயாரிக்கவுள்ளார் என அந்நேரம் நம்பத்தகுந்த வட்டாரங்கள் ஊடாக நம்பத்தகுந்த முறையில் ஒரு

வத்தால் தற்போது அழைக்கப்படும் மணலாற்றுப்பிரதேசம். திருமலையின் வட எல்லையில் உள்ள தென்னமரவாடியிலிருந்து முல்லை மாவட்டத்தின் தெற்காக உள்ள கொக்குத்தொடுவாய் வரை தமிழ் மக்கள் தமக்குப் பாரம்பரியமாகவும் சட்ட ரீதியாகவும் உரிய காணிகளிலிருந்து இராணுவத்தாலும், சிங்களக் காடையர்களாலும் துரத்தப்பட்டு அக்காணிகளில் சிங்கள மக்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர். இப்பிரதேசத்தினுடைய நிர்வாகம் கடந்த சில வருடங்களாக அனுராதபுர மாவட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது எனவே வடகிழக்கு சம்பந்தப்பட்ட ஒரு பிராந்திய அலகைப் பற்றிப் பேசுவதானால் அரசு முதலாவதாக மணலாறு தொடர்பாக இராணுவத்திடம் விசாரித்திருக்க வேண்டும். பூநகரி விஷயத்தில் இராணுவத்தின் கருத்தை தாமதமின்றிக் கேட்டறிந்து கருத்துச் சொன்ன அரசு, மணலாற்றில் சட்டப்படி தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை மீளளித்து ஒரு பிராந்திய அலகை வரையறை செய்வதற்கு ஒத்துழைக்க இராணுவம் எந்தளவிற்குத் தயார் என்று அதிகார பூர்வமற்ற முறையிலேனும் விசாரிக்கவில்லை.

ஆகவே அரசு வெறுமனே வாய்ப்பேச்சளவி

வந்த தீர்வுத்திட்டத்தின் அடிப்படை வரைவையேனும் புலிகளின் பார்வைக்கு அனுப்பிவைக்கவில்லை. .. ரினும் பேச்சுவார்த்தைகள் நடந்த காலகட்டத்தில் புலிகள் தமது அதிகாரபூர்வ ஏடான 'விடுதலைப் புலிகள்' இதழொன்றில் தாம் எவ்வகையான அரசியல் தீர்வை எதிர்பார்க்கிறோம் என்பதை கொட்டை எழுத்துக்களின் வெளியிட்டிருந்தனர்.

அத்துடன் யாழ் சென்ற விக்டர் ஐவனூடாகவும் அவர்கள் சில விடயங்களைச் சந்திரிகாவிற்குச் சொல்லியனுப்பியிருந்தனர்.

இந்த நிலையில் புலிகள் அரசியல் பற்றியே முதலில் பேச வேண்டும். அதற்கு ஒரு தீர்வை கூடியவிரைவில் அவர்கள் அறிவிக்க வேண்டும் என வற்புறுத்திய அரசு, ஏன் அதிகாரபூர்வமற்ற முறையிலாவது தனது உத்தேசத் தீர்வினை யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கவில்லை? அப்படியொன்றை அரசு யாழ்ப்பாணம் அனுப்பி வைத்திருக்க முடிந்திருக்குமென்றால் அதை நிச்சயமாக சந்திரிகா தமிழருக்கும், ஏனைய தமிழ் இயக்கங்கள், கட்சிகள் என்பனவற்றிற்கும் சமர்ப்பிப்பதில் எந்தத் தடையுமிருந்திருக்காது.

சிங்கள மக்கள் அதற்கெதிராக அன்று பெருங்கூச்சலிட்டிருப்பார்கள் என்று யாரும் கூறமுடியாது.

இதன் சுருக்கம், அரசிடம் எந்தவிதமான உத்தேசத் தீர்வும் அந்நேரத்தில் இருக்கவில்லை என்பதுதான். ஒரு உத்தேசத் தீர்வை நாம் முன்வைக்கப்போகிறோம் என நம்பத்தகுந்த முறையில் கதை பரப்பிட வேண்டுமென முன்பு அரசிற்கு இருந்த 'நல்லெண்ணம்' கூட இன்று அதற்கு இல்லை என்பதை ஈ.பி.டி.பி, புளொட் போன்ற அமைப்புக்கள் கூடப்புரிந்து கொண்டுள்ளன. வழங்கப்பட வேண்டிய தீர்வைப் பற்றி எந்த உத்தேசமான கருத்துக்கூடக் கைவசமில்லாத நிலையில் புலிகள் அரசியல் பற்றிப் பேசப் பயந்து வஞ்சகமாகப் போர் தொடுத்து விட்டார்கள் எனக்கூக்குரலிடும் அரசின் நெஞ்சழுத்தம் மகத்தானது.

பிச்சை வாங்க வேண்டும் ஜே.ஆரும், பிரேமதாசவும்.

இந்த நிலையில் அரசும் புலிகளும் பேச முற்பட்டிருந்தால் அது பிரேமதாசாவின் சர்வ கட்சி மாநாட்டை விட மாபெரும் கேலிக்கூத்தாகவே அமைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

புலிகளுக்கு வெறும் போர்வெறிதான் உண்டு எனக்கொண்டாலும் அதைக்கூற இந்த அரசிற்கு என்ன தார்மீக உரிமை இருக்கின்றது என்பதுதான் முக்கிய கேள்வி.

அத்துடன் புலிகள் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டதிலிருந்து, இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு என்ற விஷயத்தையே அரசு கைகழுவிவிட்டுவிட்ட தோரணையில் நடந்து கொள்கிறது.

இது நாம் முற்குறிப்பிட்ட தமிழ் மக்களிடம் காணப்படும் உளவியற்பதிவை - அதாவது எவன் இந்த அரசிற்குப் பலமாக உதைக்கிறானோ அவனுடனேயே அது தீர்வைப் பற்றி பேச முன்வரும் என்பதை - மேலும் கன்றிப்போக வழிசமைக்கும் என ஐயத்திற்கிடமின்றிக் கூறலாம்.

என்னை ஓங்கி அடித்தால்தான் நான் வழிக்கு வருவதாகப் பாசாங்கு பண்ணுவேன் என்ற எண்ணத்தினை ஏனைய அரசுகள் போல இந்த அரசம் தன் நடத்தை மூலம் தமிழ் மக்கள் மனதில் மீண்டும் பதிய வைத்துள்ளது.

**டி.சிவராம்**

கதை பரப்பப்பட்டது. ஆனால் நடைமுறையில் இது எந்தளவிற்கு உண்மை எனப்பின்னர் விசாரித்த போது பின்வரும் விடயங்கள் வெளிப்பட்டன.

அ. வடமாகாணத்தையும், மீள் வரையப்பட்ட கிழக்கு மாகாணத்தையும் உள்ளடக்கிய பிராந்தியம் ஒன்றை அமைப்பது தொடர்பாக எந்தவிதமான ஆராய்வும் நடைபெறவே இல்லை.

உதாரணமாக இப்படியான ஒரு பிராந்திய அலகு உருவாக்கப்படுவதானால் தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரையில் முதலாவது முக்கிய பிரச்சினை வெலி ஓயா என இராணு

லேயே பிராந்திய அலகைப் பற்றிப் பேசிற்று என்பது தெளிவு.

ஆ, பேச்சுவார்த்தையில் எந்தப் பிரயோசனமுமில்லை. ஆகவே 95 மார்ச் 28 உடன் பேச்சுவார்த்தையை முறித்துக் கொள்ளப் போகிறோம் எனப்புலிகள் அறிவித்திருந்தனர். அதேவேளை அரசு புலிகளுடன் அரசியல் தீர்வு பற்றியே முதலில் பேச வேண்டுமென வலியுறுத்திற்று. இச்சந்தர்ப்பத்தில் சந்திரிகா அதிகார பூர்வமாகவும் அதிகார பூர்வமற்ற முறையிலும் இரு தூதுகள் அனுப்பி வைத்தார். இந்த இரு தூதுகளிலுமே அரச தான் தயாரிக்க உத்தேசித்திருந்ததாகக் கூறி

இந்நிலையில் புலிகளின் போர் வெறியே தமிழரின் இன்றைய பிரதான பிரச்சினை எனக்கூக்குரலிடும் சில தமிழ்ப்புத்திஜீவிகள் ஒன்றை மறந்துவிடுகிறார்கள். ''அடிபோல் அண்ணன் தம்பி உதவான்'' என்ற எண்ணத்தை தமிழ் மக்கள் நெஞ்சில் ஊன்றவைக்கும் வகையில் சிங்கள அரசுகள் நடந்து கொள்ளும் வரை புலிகள் போன்ற அமைப்புக்களே வடகிழக்கில் மேலோங்கிய வண்ணம் இருக்கும் என்பதே ..து.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# யுத்தம்!
## ஆம், மனிதாபிமானத்துடன்!
### — மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்கள்

சரிநிகர் 74வது இதழில் மனித உரிமைகளுக்கான யாழ் பல்கலைக்கழக ஆசிரியர்களின் பத்திரிகை அறிக்கை ஒன்று வெளியாகியிருந்தது. 'மனித உரிமைகட்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்' (யாழ்ப்பாணம்) என்ற இந்த அமைப்பு மனித உரிமைகள் மீறல் தொடர்பான தகவல்களை ஆவணவடிவில் தொகுத்து வெளியிட்டு வருகிறது. இதுகாறும் ஆவணங்களை தொகுப்பதுடன் தமது பணியை மட்டுப்படுத்திக் கொண்ட மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் (யாழ்) தமது அரசியல் சார்பு நிலையை தமிழ் வாசகர்கட்கு இவ்வறிக்கை மூலம் முதல் முதலாக வெளிப்படுத்தியுள்ளார்கள் என்று கொள்ளலாம்..

இத்தகைய தகவல்கள், ஆவணத் தயாரிப்புக்கள் தேவையானவை; மனித உரிமை மீறல்களில் எவர் ஈடுபட்டாலும் அவை தொகுக்கப்படுதல் அவசியமானது. அதைப் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் இவ்வாசிரியர்கள் செய்வது பாராட்டப்பட வேண்டிய ஒன்று ஆனால், இவ்வாறான தகவல் சேகரிப்பு மற்றும் ஆவணத் தயாரிப்பில் ஈடுபடுபவர்கள் எப்போதும் மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். முரண்பட்ட பல்வேறு அரசியல் சக்திகளிடையேயான மோதல்களின் போது, மனித உரிமைமீறல் பற்றிய ஆவணங்களை தயாரிப்பவர்கள் பக்கச்சார்பற்றவர்களாக இருக்க வேண்டும். தமது அரசியல் சார்பு நிலை நின்று விடயங்களை தொகுப்பவர்கள் உண்மைகளை சிலவேளைகளில் தமது சார்பு நிலைக்கேற்ப வியாக்கியானம் செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டு விடுகிறார்கள். மனித உரிமைகளைப் பாதுகாப்பது என்ற எல்லைக்கு அப்பால் போய், நடைபெற்றுக் கொண்டிருக்கும் அரசியல் சதுரங்கத்தில் பங்கேற்கத் தொடங்குகையில் இவர்களது அக்கறை மனித உரிமை மீறல் குறித்ததா அல்லது அரசியல் சக்திகளின் மோதலில் பக்கச்சார்பு எடுப்பதிலா என்ற சந்தேகத்தை இது ஏற்படுத்திவிடுகிறது.

சரிநிகரில் வெளியான ம.உ.ப. ஆசிரியர்களது மேற்படி பத்திரிகை அறிக்கையும் நுணுக்கமான வாசகர்களுக்கு இவ்வாறான ஒரு சந்தேகத்தையே ஏற்படுத்துகிறது. புலிவிரோதம் அரச சார்பு என்ற அரசியல் நிலைப்பாட்டில் இருந்து இவர்கள் பேசும் போது, தமது மனித உரிமை மீறல் தகவல்களுக்குரிய தார்மீக நியாயத்தை இழந்து விடுகிறார்கள்.

அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுக்களை புலிகள் முறித்துக் கொண்டு, மீளப் போரை ஆரம்பித்தது 'இந்நாட்டு மக்களதோ குறிப்பாக தமிழ் மக்களதோ நலனுக்கு உகந்ததல்ல' என்று ஆரம்பிக்கும் இவர்கள், புலிகளால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளை அரசு சாதகமாகப் பரிசீலிக்கவில்லை என்ற புலிகள் தர்ப்பு நியாயத்தை, இக்கோரிக்கைகள் 'இராணுவத்தன்மை கொண்டவை' என்றும், 'கடந்தகால அடிப்படையில் ஏற்க முடியாதவை' என்றும் கூறித்தட்டிக்கழித்து விடுகிறார்கள். கூடவே 'புலிகளின் அரசியல் வேறு தமிழ் மக்களின் நலன்வேறு' என்ற தமது கோட்பாட்டை கூறுவதுடன் 'பின்னையது அரசியல் ரீதியாக கையாளப்பட வேண்டியது' என்கிறார்கள். இதன் மூலம் முன்னையது (புலிகளின் அரசியல்) இராணுவ ரீதியாகக் கையாளப்பட வேண்டும் என்பதைக் குறிப்பால் [illegible]ர்த்துகிறார்கள். இலங்கை [illegible]கத்தின் சமீபத்திய அறிக்கையின் இ[illegible]டைக் கொள்கை (பார்க்க சரிநிகர் 72)யை அப்படியே வெளிப்படுத்தும் இந்த வாக்கியங்கள் எந்த விதத்திலும் ஒரு மனித உரிமை மீறல் ஆவணத்தொகுப்பாளர்களின் தார்மீக நேர்மைக்கு உகந்ததல்ல. மாறாக அவர்களது சார்பு நிலைப்பாட்டை தெளிவாக வெளிப்படுத்துவதாகும்.

ஏனென்றால், புலிகளுக்கும் அரசுக்குமிடையிலான முரண்பாட்டை வெறும் இராணுவ ஆதிக்கம் சம்பந்தமான விடயமாக, இது குறுக்கிவிடுகிறது, தவிரவும் இராணுவ ரீதியான கோரிக்கைகளை புலிகள் வைக்கவே கூடாது என்கிற அரசசார்பு நிலையையும் இது வலியுறுத்துகிறது. இன்னும் ஆழமாகக் கவனித்தால், இராணுவ ரீதியிலான அணுகுமுறை அரசுக்கு மட்டுமே சொந்தமானது; அரசு மட்டுமே '[illegible] பூர்வமானது' என்பதால் அதனால் [illegible]ற இராணுவ விடயங்களில் முடிவான முடிவை எடுக்கமுடியும் என்ற புளித்துப்போன கோட்பாட்டை மிகவும் அப்பாவித்தனமாக வெளிப்படுத்துகிறது. இதை விட இன்னும் ஒரு படிமேலே போய், கடந்த கால அனுபவங்கள் காரணமாக அரசினால் சில கோரிக்கைகளை இலகுவாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று கூறுவதன் மூலம், எமது மதிப்பிற்குரிய ஆசிரியர்கள் அரசின் முற்றுமுழுதான பிரச்சாரகர்களாகத் தம்மை மாற்றிக்கொண்டுவிடுகிறார்கள். கடந்தகால அனுபவம் என்பது ஏதோ அரசுக்கு மட்டுமே சொந்தமானது என்பது போலவும், வடகிழக்கு மக்கள் தரப்பிலோ, புலிகள் தரப்பிலோ அரசு குறித்த கசப்பான அனுபவங்களே இருந்ததில்லை என்பது போலவும் இவர்கள் பேசுவது வேடிக்கையாக உள்ளது.

ஆயுதப் போராட்டம் வடக்கில் வெடித்த பின், வந்த அரசாங்கங்கள் எல்லாமே ஆயுதப்போராட்டத்தை எப்படி நசுக்குவது, போராட்டத்தில் ஈடுபடுவோரை எவ்வாறு இராணுவ ரீதியாக வெற்றி கொள்வது என்பதில்தான் அதிக அக்கறை காட்டி வந்துள்ளது. வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களின் அரசியல் பிரச்சினைகளை தீர்ப்பதில் இருந்த அக்கறையை விட இவ்விடயத்திலேயே அரசாங்கங்களுக்கு அதிக அக்கறை இருந்து வந்துள்ளது. அப்படி ஏதாவது அரசியல் விடயம் குறித்து எப்போதாவது அரசாங்கங்கள் பேசினவென்றால், அவையும் ஆயுதங்களை கீழே போட வைக்கும் நோக்குடனேயே, இராணுவ ரீதியில் வெற்றி கொள்வதிலேயே குறியாக இருந்து கொண்டுதான் பேசப்பட்டன. இதற்கு திம்பு பேச்சுமுதல், சந்திரிகா அரசின் யாழ்ப்பாணம் பேச்சு வரை அனைத்திலுமே உதாரணங்களைக் காண முடியும். 1987 ஒப்பந்தம் கூட ஆயுதங்களைக் கையளிப்பதை வலியுறுத்தியது. 'போராளிகளுக்கு' (அப்போது அவர்களை அப்படித்தான் அழைத்தார்கள்) பொதுமன்னிப்பு வழங்கப்பட உள்ளதாக அந்த ஒப்பந்தம் அறிவித்தது. அரசியல் தீர்வு என்று பசப்பிய அந்த ஒப்பந்தம் எதையுமே தமிழ் முஸ்லீம் மக்களுக்கு வழங்கவில்லை என்பது வெளிப்படை. அதை நம்பி, தமது போராட்டத்தை சட்டவிரோதமான ஒன்று என்று ஒப்புக்கொண்டு, ஆயுதங்களை கையளித்து 'ஜனநாயக நீரோட்டத்தில்' கலந்து கொண்ட, பொதுமன்னிப்புப் பெற்ற தமிழ் போராளிக் குழுக்கள் இன்று எப்படி இருக்கின்றன என்பதை இங்கு எழுதி விளக்கத் தேவையில்லை. ஆக, புலிகள் இராணுவ ரீதியிலான கோரிக்கைகளை முன்வைத்தார்கள் என்றால், அதுவும் இராணுவ ரீதியில் தன்னுடைய ஆதிக்கத்தை தொடர விரும்பும் ஒரு அரசிடம் அப்படி முன்வைத்தார்கள் என்றால், அதில் நமது ஆசிரியர்கட்கு கோபப்பட என்னதான் இருக்கிறதோ தெரியவில்லை. ஒருவேளை பூநகரி முகாம் அகற்றல் கோரிக்கையை புலிகள் முன்வைக்காவிட்டால் சமாதானப் பேச்சு தொடர்ந்திருக்கும் என்று இவர்கள் நம்புகிறார்களோ என்னவோ?

சமாதானம் என்பது, பிரபாகரன் தனது துப்பாக்கிகளை வீசிவிட்டு சந்திரிகாவுடன் கைகுலுக்கி கொள்வதுதான் என்று நினைப்பவர்கள் அப்படி வேண்டுமானால் கருதலாம். ஆனால் நுண்ணறிவு படைத்த பல்கலைக்கழக ஆசிரியர்களுமா அப்படிக் கருதுகிறார்கள்? ஒரு கால் பிரபாகரன் ஆயுதச கை[illegible] போட்டிருந்தால், அரசு தனது தீர்வை அறிவித்து அதை அமுல்படுத்தி, இலங்கையின் இனச்சிக்கல் தீர்ந்துவிட்டிருக்கும் என்று அவர்கள் கருதுகிறார்கள் போலும் பாவம் பல்கலைக்கழக ஆசிரியர்கள். கனவு காண்பதற்கு அவர்களுக்கு உள்ள உரிமையை யார்தான் மறுக்கமுடியும்?

அரசியல் தீர்வு காண்பதுதான் இலங்கை அரசாங்கத்தின் நோக்கமாக இருந்திருந்தால் அது பதவிக்கு வந்ததும், ஆகக் குறைந்தது ***அரசு, அரசாங்கம்*** இரண்டினதும் தலைவராக ஜனாதிபதி சந்திரிகா பதவியேற்றதும் அரசின் தீர்வுத்திட்டம் அறிவிக்கப்பட்டிருக்கும்; ஜனாதிபதி அரசியல் தீர்வை நடைமுறைப்படுத்துவதற்கான பிற சட்ட ரீதியான வழிமுறைகளில் ஈடுபட்டிருப்பார். அது நடைமுறைக்கு வந்ததும், யுத்தம் தேவையில்லை என்ற உண்மையை நடைமுறை ரீதியாக புலிகளுக்கு உணர்த்தியிருப்பார். அவர்களது தமிழீழக் கோரிக்கைக்கு தான் வைத்த தீர்வு பதிலாக, நடைமுறை வாய்ப்புள்ள தீர்வு என்பதை இதன் மூலம் விளக்கியிருப்பார். ஆனால் நடந்தது என்ன? புலிகளை இராணுவ ரீதியிலும் அரசியல் ரீதியிலும் பலவீனப்படுத்தும் இரகசியத் திட்டத்துடன் கபடத்தனமான நடவடிக்கைகளிலேயே இந்த அரசாங்கம் இறங்கியது. பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போதே, புலிகளையும் அவர்களது தலைவர் பிரபாகரனையும் தாம் நம்பவில்லை என்றும் புலிகளை கொலைகாரர்கள் என்றும் புலிகளை



சமாதானத்தை நோக்கி இழுக்கும் 'அமுக்கத்தை' தான் பிரயோகிப்பதாகவும் அரசாங்கம் அறிவித்தது. பேச்சுவார்த்தையில் ஈடுபடும் ஒரு அரசாங்கம் இந்த மாதிரி 'அமுக்கவிதி'கள் பற்றிப் பேசுவது வெறும் ராஜதந்திரமற்ற நடவடிக்கை மட்டுமல்ல, மறுதரப்பை அவமதிக்கும் செயலுமாகும்!

அரஃபாத்தும் ரபினும் மண்டெலிவும் டீகிளார்க்கும் இவ்வகையாகப் பேசவில்லை. பதவிக்கு வர முன்பு மண்டெலிவை கிளார்க், பலஸ்தீன - இஸ்ரேல் பேச்சுக்களை உதாரணம் காட்டியவர் வேறுயாருமல்ல; ஜனாதிபதி சந்திரிகா.வேதான்.

பேச்சுவார்த்தையை இழுத்தடித்துக் கொண்டிருந்த அரசுக்கு இருதடவை புலிகள் காலக்கெடு விதித்த போதும், அக்காலக்கெடுவை விடயங்களை நடைமுறைப் படுத்துவதற்கான ஒரு நேர நிர்ணயிப்பு என்றும் அதற்குள் சொன்னவற்றை செய்வதன் மூலம் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த முடியும் என்றும் புலிகள் தரப்பில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்ட போதும், அவற்றை உதாசீனம் செய்து 'சட்டபூர்வ அரசுக்கு காலக்கெடு விதிக்க இவர்கள் யார்' என்று திமிர்த்தனமாக அறிக்கைவிட்டது ஜனாதிபதி செயலகம். யுத்தத்தை தொடங்குவதற்கான சூழலை திட்டமிட்டு உருவாக்கிவிட்டு, முதலில் கல்லெறிந்தவன் யார்? என்று விவாதிப்பது விவாதத்துக்கு வேண்டுமானால் சரியாக இருக்கலாம். ஆனால், உண்மையை தரிசிக்கவோ அல்லது அமைதியை காணவோ சரியான வழியாக அது இருக்கமுடியாது.

இவையெல்லாம் பல்கலைக்கழக ஆசிரியர்கட்கு அனுபவங்களாகப் படாமல் போனது நமது துரதிர்ஷ்டம் என்ன செய்வது? அரசாங்க சார்பையும், அரசுக்கு அனுதாபமான நிலைப்பாட்டையும் எடுத்துவிட்ட பின் இப்படியல்லாமல் வேறெப்படித்தான் பேசமுடியும்?

புலிகளின் இயக்கப்போக்கை விளங்கிக் கொள்ள, அவர்களது செயற்பாடுகளை புரிந்து கொள்ள வேண்டும் என்று கூறும் ஆசிரியர்கள், கூடவே அவர்களது செயற்பாடுகளை பகுத்தறிவு ரீதியாக விளக்குவது கடினம் என்று கூறி அதிலிருந்து நழுவிவிட்டு, புலிகளின் 'உள்ளார்ந்தமான அழிவு அரசியல்' தமிழ் சமூகத்தினை தற்கொலைக் கொப்பான நிலைக்கு தள்ளிவிட்டுள்ளதாக தமது முடிவை அறிவிக்கிறார்கள்.

எவ்வாறாயினும், புலிகளின் அரசியலை விமர்சிப்பதாக கருதிக்கொண்டு இவர்கள் சொல்வதெல்லாம் இதுதான்: புலிகள் ஒரு அரசியல் சக்தி அல்ல; வெறும் மனநோய் பிடித்த, சமூக அழிவையே இலட்சியமாகக் கொண்ட கும்பல். மனநோய் பிடித்த இவர்களால் ஏமாற்றியும், மிரட்டியும் நயவஞ்சகமாகவும் இணைக்கப்பட்ட இளஞ்சந்ததியின் அணிதான் தமிழீழ விடுதலைப் புலிகள் என்பதாகும்.

இவ்வளவு கறாரான அபிப்பிராயத்தை ஒருவர் புலிகள் மீது கொண்டிருப்பதை விளங்கிக் கொள்ள முடியும்; இந்த அபிப்பிராயம் தவறாக இருப்பினும் கூட, இவ்வாறான அபிப்பிராயத்திற்கு ஒருவர் வந்தால் அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. ஏனென்றால் புலிகளின் பேரினவாதம், ஜனநாயக விரோதம், தனிநபர் மற்றும் சிங்கள, முஸ்லீம் மக்கள் மீது நடாத்தப்பட்ட கொலைகள், முஸ்லீம் மக்களை யாழ்ப்பாணத்திலிருந்து விரட்டியமை போன்ற காரணங்களால் புலிகள் மீது ஒருவர் இவ்வளவு வெறுப்புக் கலந்த ஆத்திரம் கொள்வதில் நியாயமுண்டு எனலாம். வெறும் கோபமும் குரோதமும் மட்டும் இப்போது பிரச்சினையைத் தீர்க்க யதார்த்தத்தில் உதவாது. ஆனால் நமது பல்கலைக்கழக ஆசிரியகட்கு இந்த வெறுப்பு புலிகள் மீது மட்டும் இருப்பதுதான் ஆச்சரியத்தை ஏற்படுத்துகிறது. அரசாங்கத்தையும் அரசையும் பற்றிய அவர்களது அனுதாபத்துடனான அணுகுமுறை, அதன் பக்க தவறுகளையும் காணாமல்விடும் மனோபாவம் என்பன இவர்களது அபிப்பிராயங்களை அரசுதரப்பு நியாயவாதிகளின் நியாயங்களுடன் கூட்டுச் சேர்த்து விடுகிறது.

அரசாங்கத்தின் வேண்டுகோளின்படி புலிகளும் ஒப்புக்கொண்ட விதத்தில் நடைபெற்ற சமாதான முயற்சிகளை தொடர்ச்சியாக ஒரு புறவயமான ஆய்வுக்கு உட்படுத்தி வந்திருந்தால், இந்தப் பேச்சுவார்த்தை விடயத்தில் புலிகள் தரப்பில் நியாயமிருப்பதை விளங்கிக் கொள்ள முடியும். புலிகளுக்கு வக்காலத்துவாங்குவதோ, அவர்களை நியாயப்படுத்துவதோ இக்கட்டுரையின் நோக்கமல்ல. ஆனால் இக்குறிப்பிட்ட விடயத்தில் புலிகள் பக்கமே நியாயமிருந்தது என்பதை வலியுறுத்துவதுதான் இவ்வாறு எழுதுவதன் நோக்கமாகும். புலிகளின் அரசியலுடன் எமக்கு எவ்வித உடன்பாடுமில்லை. அவர்களின் நடவடிக்கைகளில் சில மீளத்திருத்தமுடியாத மோசமான அரசியல் தவறுகள். ஆனால் இந்தக் குறிப்பிட்ட பிரச்சினையை அவை பற்றிய முற்சாய்வுகளின் அடிப்படையில் நோக்குவது சிறந்த ஆய்வுமுறை அல்ல.

பல்கலைக்கழக ஆசிரியர்களைப் பொறுத்தவரை புலிகளும் சரி, அரசும் சரி மாறாத நிலையான நிறுவனங்கள். மாற வேண்டியதெல்லாம் மக்கள் தான். தமிழ் மக்களின் நீண்டகால நலனுக்கு புலிகள் மீது இராணுவ அணுகுமுறையை - அரசின் யுத்தத்தை தொடர்வதுதான் ஒரே வழி என்பது அவர்களது நியாயம்.

இந்த நியாயங்களுடன், எப்படி மக்கள் பாதிக்கப்படாமல் இருக்க யுத்தத்தை மனிதாபிமானமாக நடத்துவது என்று அரசுக்கு ஆலோசனை சொல்கிறார்கள் இவர்கள். சந்திரிகா அரசு மனிதாபிமான முகத்துடன் திறந்த பொருளாதார கொள்கையை அறிமுகப்படுத்தியதென்றால், இவர்கள் மனிதாபிமான முகத்துடன் யுத்தத்தை அந்த அரசுக்கே அறிமுகப்படுத்துகிறார்கள். ஒருவேளை புலிகள், புலிகளைச் சார்ந்தவர்கள் அப்பிரதேசத்தின் புலி ஆதரவு மக்கள் எல்லோரும் மிருகங்கள் என்றும் மிருகாபிமானத்தை விட மனிதாபிமானம் உயர்ந்தது என்றும் இவர்கள் கருதுகிறார்களோ என்னவோ?

'பகுத்தறிவு ரீதியில்' புலிகளை இவர்களது கட்டுரை ஆராயப்போவதாக கூறிய போதும் அறிக்கை முழுவதையும் படித்த பின்னும் அத்தகைய எந்த ஆய்வையும் இவ்வறிக்கை செய்யாததுடன், அரசாங்கத்திடம் சில 'பணிவான' வேண்டுகோள்களை சமர்ப்பித்து, தமிழ் மக்களின் 'மந்த புத்தி'யை கூர்மைப்படுத்தும் விதத்தில் ஒரு சில 'கேள்விகளை' ஞாபகப்படுத்திவிட்டு அமைந்துவிடுகிறது! போகிற போக்கில் ***சில பத்திரிகையாளர்கள், சில சமாதான விரும்பிகள்*** என்று யாரையோ சாடுவதாக எண்ணிக் கொண்டு இவ்வறிக்கை சாடியிருப்பதையும் கூட இவர்களை அறியாமலேயே இவர்களே கூறும் 'குறுகிய நலன் கொண்ட' சமாதான விரும்பிகளை விட தமக்கே அதிகப் பொருத்தமானவை என்று காணத்தவறிவிடுகிறார்கள்.

அரசியல் தீர்வின் முக்கியத்துவமோ, ***யுத்தம் நிறுத்தப்பட வேண்டியதன்*** அவசியமோ, அல்லது நாட்டில் நிலவும் இன்றைய அரசியல் யதார்த்தம் பற்றிய பொறுப்புணர்வுடன் கூடிய செயற்பாடோ வலியுறுத்தப்படாதது மட்டுமல்ல, புலிகளுடன் யுத்தம் புரிதல் அவசியம் என்றும் சூசகமாக கூறும் இந்த அறிக்கையின் சாரம், சமாதானத்திற்கு உதவப்போவதில்லை.

அரசு சமாதானம் பற்றிப் பேசிய போதெல்லாம், புலி எதிர்ப்பு கோஷத்துடன் சமாதானத்துக்காக உயிரையே விட தயாரானவர்கள் போல களத்தில் இறங்கிய பலர் யுத்தம் மீண்டும் வெடித்ததும் இப்போது போர்ப்பிரச்சாரத்தில் ஈடுபடத் தொடங்கிவிட்டனர். முன்பு பிரேமதாசாவும் தற்போது சந்திரிகா அரசாலும் கூறப்படும் புகழ்பெற்ற 'தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு, புலிகளுடன் யுத்தம்' என்ற அதே மந்திரத்தை இவர்களும் ஓதத்தொடங்கியுள்ளனர்.

இவர்கள் சமாதானத்திற்காக செய்ததெல்லாம், அரசை அரசியல் தீர்வை முன்வைக்கும்படி போராடியதோ, சிறுபான்மை இனங்களின் அரசியல் உரிமைகளை வலியுறுத்தியதோ அல்ல. காலாவதியாகிப் போன மொழிப்பிரச்சினை, உத்தியோகப் பிரச்சினை பற்றியும் புலி எதிர்ப்பு பிரச்சாரத்தை சிங்கள அரசியல்வாதிகள் மற்றும் சாதாரண மக்கள் மத்தியில் செய்து மலினத்துவ (Populist) செல்வாக்கைப் பெற்றதை தவிர வேறெதையும் இவர்களால் செய்ய முடியவில்லை. இவர்களுக்கும் நாட்டின் இனப்பிரச்சினை என்பது புலிகள் ஆயுதத்தை கீழே போட்டுவிட்டால் தீர்ந்துவிடுகிற ஒரு சாதாரண பிரச்சினைதான்!

இ[illegible]களின் குரலை இப்போது பல்கலைக்கழக ஆசிரியர்களும் எதிரொலித்திருக்கிறார்கள்.

வரலாறு ஒரு நல்ல உரைகல். அது நெருக்கடியான சந்தர்ப்பங்களில் எல்லா அரசியல் சக்திகளையும் மக்களுக்கு இனங்காட்டிவிடுகிறது.

**நாசமறுப்பான்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



**"சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்" என்னும் இயக்கத்தின் முன்னணிப் பேச்சாளர்களில் ஒருவரான எஸ்.மனோரஞ்சன், 'யுக்திய' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றின் தமிழாக்கத்தைக் கீழே பிரசுரிக்கிறோம். பேட்டி கண்டவர் 'யுக்திய' பத்திரிகையின் ஆசிரியர் சுனந்த தேசப்பிரிய.**

**"சமாதானம்! ஆம், ஜனநாயகத்துடன்" இயக்கம் தென்னிலங்கை மக்கள் மத்தியில் சமாதானம் தொடர்பாக கூட்டங்களையும், ஊர்வலங்களையும் ஒழுங்குபடுத்தி வந்துள்ளது.**

**கடந்த பெப்ரவரி மாதம் அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் மகஜரொன்றையும் இவ்வியக்கம் சமர்ப்பித்திருந்தது.**



# "தமிழ் மக்களின் தேவையும்; புலிகளின் தேவையும் ஒன்று என்பது மூடத்தனமானது"

## -மனோரஞ்சன்

***ரஞ்சன், நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டுமென மாபெரும் வேலைத் திட்டத்தில் ஈடுபட்டுள்ள ஒருவர். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் யுத்தத்தை ஆரம்பித்தது அரசாங்கத்தின் தவறு காரணமாகத்தான் என்றும் அத்தவறை அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டத்தான் தாக்குதலைத் தொடுத்துள்ளனர் எனும் கருத்துப் பற்றி என்ன சொல்கிறீர்கள்?***

அக்கருத்தைக் கொண்ட தமிழ் - சிங்களப் புத்திஜீவிகள் பலர் உள்ளனர். சிற் சில வேறுபாடுகள் இருந்தாலும் அவர்கள் அனைவருமே கூறுவது புலிகளுக்குச் சமாதானத்திற்கான உண்மைத் தேவை உள்ளது என்பதாகும். அதே போலவே தமிழ் மக்களுக்கும், எல்.ரீ.ரீ.ஈ.க்கும் இடையே "நல்ல" பிணைப்பு ஒன்று இருப்பதாகவும் அவர்கள் கூறுகின்றனர்.

இக்கனவான்கள் இவ் அறிவைப் பெற்றது எங்கிருந்து? தமிழ் மக்கள், புலிகள் பற்றி நினைப்பதைப் பற்றி இவர்கள் அறிந்தது எப்படி? தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்கும், புலிகளின் அபிலாஷைகளுக்கும் இடையே வேறுபாடு எதுவும் இல்லையென இவர்கள் கூறுவது எவ்வாறு? இவர்களின் கூற்றுப்படி எல்.ரீ.ரீ.ஈ. யுத்தத்தை நோக்கித் தள்ளப்பட்டது அரசாங்கத்தின் தவறினாலாகும். அதாவது புலிகளின் குரோதம் நியாயமானது என்கிறார்கள்.

***விடுதலைப் புலிகளுக்கு யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதுதான் வேலைத் திட்டமாக இருந்தது என்று நீங்கள் சொல்கிறீர்கள்?***

ஆம்; தெளிவாகவே. அவ்வாறு இருக்கவில்லை எனக்கூறும் சிங்களப் புத்திஜீவியொருவர் இருப்பாரானால் அது அவரது அறியாமையாலாக இருக்கலாம். ஆனால் அக்கருத்தைக் கொண்ட தமிழ்ப் புத்திஜீவிகள் பற்றிக் கூறுவதானால் அவர்கள் வஞ்சனையுள்ளவர்கள் என்பதே.

புலிகள் இயக்கத்தின் வேலைத் திட்டமானது தாம் மட்டுமே அதிகாரத்தைக் கைப்பற்றுவது என்பதை நோக்கமாகக் கொண்டது. அது தமிழ் மக்களுக்குச்சமாதானத்தையும், ஜனநாயகத்தையும் பெற்றுக் கொடுக்கும் அரசியல் வேலைத்திட்டமொன்றல்ல. ஏனைய தமிழ் இயக்கங்கள் மீது அது காட்டும் பங்கமை மனப்பாங்கே அதற்கு உதாரணமாகும். பிரபாகரனுக்குத் தேவையானவை புலிகளின் வேலைத்திட்டமாகி விடுகிறது. அவருக்குத் தேவை தமிழீழத்தின் சர்வாதிகாரியாக வருவது மட்டும்தான்.

தமிழ் மக்களின் தேவை சமாதானமாகவும், சமத்துவத்துடனும் வாழ்வதாகும். அவை இரண்டும் சமனானவை எனக்கூறுவது மூடத்தனம் அல்லது வஞ்சனையானதாகும்.

***இத்தேவைகள் இரண்டும் அப்பட்டமாகவே ஒன்றிற்கொன்று எதிரானதென்றா நீங்கள் கருகிறீர்கள். இந்த அபிலாஷைகளுக்கு பொதுக்காரணிகள் இல்லையா?***

இந்தக் கேள்விக்கு ஆம், இல்லை என நான் பதிலளிக்கிறேன்.

தமிழ் மக்கள் சமாதானமாகவும், சமத்துவமாகவும் வாழப் பிரதேச சுயாட்சியொன்று அவசியமாகும். இனப்பிரச்சினை உள்ள எல்லா நாடுகளினதும் அனுபவங்கள் அதுவாகும். இந்தியாவிலிருந்து கனடா வரையும் நிலைமை இவ்வாறாகவே உள்ளது.

அதாவது தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க இன்று தேவையான முதன்மைக்காரணி பிரதேச சுயாட்சியாகும்.

மறுபுறம், பிரபாகரனின் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வாதிகாரத் திட்டத்தை செயற்படுத்தவும் பொது அர்த்தத்தில் பிரதேச சுயாட்சி அத்தியாவசியமாகும். ஒரு பரந்த அர்த்தத்தில். (சமஷ்டி முறை போன்ற) பிரதேச சுயாட்சியினூடாகத் தமிழ் மக்களின் அபிலாஷைகளை நிறைவு செய்ய முடியும்.

ஆனாலும் பிரபாகரனுக்குத் தமிழீழத்தை நோக்கிச் செல்வது அத்தியாவசியமாக இருக்கலாம். இதனால் தமிழ் மக்களின் அபிலாஷைகளும், விடுதலைப் புலிகளின் அபிலாஷைகளும் ஒன்றாகப் பயணம் செய்தாலும், குறிக்கோள்கள் வேறுவேறானவையே.

***புலிகள் மீதான அரசாங்கத்தின் அணுகுமுறையும், தமிழ் மக்கள் மீதான அணுகுமுறையும் வேறு வேறாக இருக்க வேண்டுமென நீங்கள் சொல்கிறீர்கள். புலிகளையும், தமிழ் மக்களையும் வேறுபடுத்த எடுக்கும் முயற்சி தவறானதெனக் கூறும் தமிழ்ப் புத்திஜீவிகள் கூட்டத்தினர் சிலர் கொழும்பில் இருக்கின்றார்களே?***

புலிகள் இயக்கத்தைத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென அவர்கள் கூறுகிறார்கள்.

அவ்வாறு கூறும் அதே சமயம் அவர்கள் யாழ்ப்பாணம் செல்லாது கொழும்பில் தங்கியுள்ளனர். புலிகள் இயக்கம் தொடர்பாக விமர்சனமெதனையும் செய்யாத இக்கூட்டத்தினர், அரசாங்கத்தின் குறைபாடுகளை மட்டும் ஊளையிட்டுத் தெரிவிக்கின்றனர்.

தென்பகுதியைப் போலவே வடபகுதியிலும் தேசியவாதம், இனவாதமாகப் பிறழ்வடைந்துள்ளது. இத்தேசியவாதத்தின் ஒருபிரிவினர் கொழும்பில் இருந்து கொண்டு புலிகளின் பிரச்சாரத்துக்கு வக்காலத்து வாங்குகிறார்கள். அவர்கள் புலிகளால் மீறப்படும் மனித உரிமைகள் பற்றி வாயைத் திறந்து பேசுவதில்லை.

அதற்குப் பதிலாகக் கொழும்பில் உள்ள ஜனநாயச் சூழலைப் பயன்படுத்தி விடுதலைப் புலிகளின் சர்வாதிகாரத்துக்கு ஊக்கமளிக்கின்றனர்.

இவ்வாறான தமிழ் இனவாதப் பிரிவினரும் உள்ளதாகச் சிங்கள மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். இந்தத் தமிழ் இனவாதிகள் மாலையில் ஒருவாய் "விஸ்கி" அடித்துவிட்டு, நீச்சல் தடாகத்தில் இறங்கி நீச்சலடித்த பிறபாடு வீட்டிற்கு வந்து அறிக்கைகள் எழுதுகிறார்கள். தமிழ் மக்களைப் பாதுகாக்கவெனக் கூறி, புலிகளைப் பாதுகாக்கும் பத்திரிகை அறிக்கைகளை வெளியிடுகின்றனர்.

***அவர்கள் யாழ்ப்பாணத்திற்குச் செல்ல வேண்டுமென்றா நீங்கள் கூறுகிறீர்கள்?***

இல்லை, யாழ்ப்பாணத்திற்கு அவர்கள் ஏன் செல்ல முடியாது என்பது அவர்களுக்கும் தெரியும்; எனக்கும் தெரியும். அவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் வாழ முடியாது, அரசியல் ரீதியாகவும் சரி, சொந்தப் பாதுகாப்புக் காரணமாகவும் சரி, அவர்கள் அங்கு செல்லமுடியாது. அவர்களின் மிகச் சாதாரணமான/எளிய சுதந்திர அரசியல் கருத்துக்களுக்குக் கூடப் பிரபாகரன் இடங்கொடுப்பதில்லை.

"யாழ்ப்பாணச் சிறைச்சாலை" வாழ்க்கை அவர்களுக்குப் பிடிப்பதில்லை. ஆனாலும் இங்குள்ள பிரச்சினை அவர்கள் விடுதலைப் புலிகளின் அத்தவறை விமர்சிக்காது விடுவதாகும்.

***இதுவரை காலமும் இருந்த சிங்கள அரசாங்கங்கள் இனப்பிரச்சினைக்குத் தீர்வொன்றை வழங்குவதைத் தட்டிக் கழித்தன. தற்போதைய அரசாங்கமும் யுத்தம் முடிவுறும் வரை தீர்வொன்றை வழங்குவதைப் பின் போட வேண்டுமெனக் கூறினால் அங்கே தமிழ்த் தேசியவாத சக்திகள் சந்திரிகா அரசாங்கம் தொடர்பாகக் கூறுபவை உண்மையாகாதா?***

அரசாங்கம் அவ்வாறான கருத்தொன்றை முன்வைத்தால் கைவிடப்படுவது சமாதானம் தொடர்பாக எதிர்பார்ப்புக்களை வைத்த தமிழ் மக்களேயாவர்.

அரசாங்கம் அரசியல் தீர்வை சமர்ப்பிக்காத வரை எந்தப் பொறுப்புள்ள தமிழ் அரசியல் கட்சியும் அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது. வழங்கக் கூடாது. அரசியல் தீர்வைத் தாமதப்படுத்துவதானது யுத்தத்தை நீடிப்பதாகும்.

***தமிழ் மக்கள் மத்தியில் அரசாங்கம் தீர்வொன்றை வழங்கு முன் யாழ்ப்பாணத்திலிருந்து இராணுவ முகாம்களை அகற்ற வேண்டுமென்ற கருத்து உள்ளதெனத் தெரிகிறது. அது பற்றி நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?***

அவர்கள் முதலில் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமா? வவனியா வரையுமா? அல்லது கிழக்கு வரையுமா? இராணுவத்தை அகற்ற வேண்டுமெனத் தெளிவு படுத்த வேண்டும். உத்தேச ஈழ நிலப்பிரதேசத்திலிருந்து இலங்கை அரசாங்கப் படைகளை, அகற்ற யோசனை முன்வைப்பதனால், அதனை விளங்கிக் கொள்வது கஷ்டமானதல்ல. அதன் குறிக்கோளானது ஈழத்தை அமைப்பதற்காகவாகும். ஆனாலும் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டும் இராணுவத்தை அகற்றுமாறு கூறுவது ஏன்? அவர்கள் கூறுவது யாழ்ப்பாணம் எல்.ரீ.ரீ.ஈயின் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பதால் இராணுவத்தை அகற்ற வேண்டுமென்றதாகும். அவ்வாறெனின் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்களைக் கலைத்துள்ளதால் அதனையும் யதார்த்தம் என ஏற்றுக்கொள்ள அவர்கள் தயாரா? தமிழ், முஸ்லீம், சிங்களம் ஆகிய இனப்பிரிவினர் மூவரும் உள்ள கிழக்குப் பிரதேசத்திலிருந்து இலங்கை அரசாங்கத்தின் இராணுவத்தை அகற்றினால் என்ன நடக்கும்? அதனால் இச் சந்தர்ப்பத்தில் இராணுவ முகாம்களை அகற்றும் யோசனைகள் நேரடியாகவே புலிகளைப் பலப்படுத்தும் ஒன்றாகும். நான் அந்த யோசனைகளை எதிர்ப்பது அக்காரணத்தால் ஆகும். யுத்தவாதம் இலங்கை அரசாங்கத்திடம் மட்டுமல்ல புலிகளிமும் உள்ளது.

***தற்போது இன்னொரு தர்க்கமும் உள்ளது. புலிகள் இயக்கம் மாறி வருகிறது. இம் மாற்றங்களில் நல்ல பக்கங்களும் வளர்ச்சியும் உள்ளன. அதனால் அவை பற்றியும் கவனஞ்செலுத்த வேண்டுமெனக் கூறுவது பற்றி.......?***

அவ்வாறான தர்க்கமொன்று இருப்பதாகத் தெரிகிறது. ஆனாலும் அவர்கள் இன்னும் இந்த நல்ல அம்சங்கள் என்ன என்பதைக் கூறவில்லை. புலிகள் போன்ற கடும் மனிதாபிமானமற்ற இயக்கமொன்றைப் பற்றி அவ்வாறான பாரதூரமான அறிக்கையொன்றை விடுபவர்கள் அத்துடனேயே மேற்கூறிய நல்ல வகையிலான வளர்ச்சிகள் என்னவெனக் கூறினால் எவ்வளவு நன்றாயிருக்கும்! அப்போதுதான் அவற்றைப் பற்றி ஒவ்வொன்றாகக் கலந்துரையாட முடியும். எந்த இயக்கமுமே எல்லாக் காலமும் ஒரே மாதிரி இருக்காது, மாறுபடும். அது உண்மையே. ஆனாலும் இம்மாற்றம் கூடாத பக்கமானதாகவும் இருக்கலாம், ஹிட்லரின் இயக்கம் 1930களிலிருந்து 1940கள் வரை வளர்ச்சியுற்றது இனப்படுகொலை என்ற திசையிலாகும். கம்போடியாவில் பொல்பொட்டின் அரசியல் 30,40 வருடங்களாகியும் இன்னும் மக்கள் - விரோத அரசியலே நடக்கிறது. அவ்வாறான உதாரணங்கள் வேண்டியளவு கொடுக்கலாம்.

நான் கூறுவது இதனைத்தான். புலிகள் இயக்கம் மாறியுள்ளது. ஆனாலும் ஜனநாயகத்தை நோக்கியல்ல.

***உங்களால் உதாரணங்கள் வழங்க முடியுமா? நீங்களும் கருத்தியலை மட்டும் முன்வைப்பது தவறுதானே?***

ஆம். தற்போது கிழக்கை எடுப்போம். சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்ற காலத்தில் புலிகள் கிழக்கிலிருந்து வயது குறைந்த இளைஞர்கள் 3000 பேரைச் சேர்த்துக் கொண்டது எமக்குத் தெரியும். இவ் இளைஞர்களை சேர்த்துக் கொண்டது எப்படி? வஞ்சனையாகவும், பலாத்காரமாகவும் சிறுபிள்ளைகளை ஏமாற்றினர்

தாய், தந்தையரைப் பயமுறுத்தினர். அதனை நல்ல வகையிலான வளர்ச்சியா அல்லது, கூடாத வகையிலான வளர்ச்சியா என நீங்கள் தீர்மானியுங்கள்.

புலிகளுக்குள்ளேயே அடக்குமுறை நிலைமை மேலோங்கிக் காணப்படுகின்றது. எதிர்ப்புத் தெரிவிக்க மட்டுமல்ல, விமர்சிக்கவும் அதனுள் உரிமை இல்லை.

புலிகளின் சிறைச்சாலைகளைப் பார்க்க இன்னும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திற்குக் கூட அனுமதி இல்லை. அப்பாவிச் சிங்கள மக்களைக் கொல்வதும், வேறு கருத்துள்ள தமிழ் மக்களைக் கொல்வதும் தொடர்ந்து நடைபெறுகிறது.

கொழும்பில் விநோதனைக் கொலை செய்தார்கள். மட்டக்களப்பிலும், வவுனியாவிலும் தமிழ்ப் பொதுமக்கள் பலரையும் கொன்றுள்ளனர்.

புலிகள் இயக்கம் நல்ல பக்கத்திற்கு மாறியுள்ளது எங்கு என எமக்குச் சொல்லுமாறு அவ்வாறு கூறிய புத்திஜீவிகளிடம் தயவு செய்து கூறுங்கள்.

புலிகள் இயக்கம் இன்று செயற்பட்டுச் செல்வது தமக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் தமிழ் ஆண்கள், பெண்கள் மட்டுமுள்ள போர் நாட்டங்கொண்ட தமிழீழமொன்றை அமைக்கவாகும்.

***புலிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தமிழ்ப் பிரச்சினையொன்றாகச் சிலர் நோக்குகின்றனர். அதனாலேயே அதனைத் தீர்ப்பது தமிழ் மக்களின் பிரச்சினையென்றும் அவர்களிற்குத் தேவையானால் அவர்கள் புலிகளை தோற்கடிப்பார்கள் என்றும் கூறுபவர்கள் உள்ளனரே?***

இந்தக் கண்ணோட்டம் முழுமையாகத் தவறானது. புலியானது தமிழ்ப் பிரச்சினையைப் போலவே இலங்கையின் பிரச்சினையும் ஆகும். 1987 - 90 காலத்தில் ஜே.வி.பி (மக்கள் விடுதலை முன்னணி) சிங்களப் பிரச்சினையானதா? இல்லை.... அது தேசியப் பிரச்சினையொன்றாகியது. அதனைத் தீர்க்கச் சிங்கள மக்களிடம் கையளித்திருந்தால் ஜே.வி.பி. ஆட்சியொன்றைச் சில பகுதிகளில் நிறுவவும் முடிந்திருக்கும்.

புலிகளின் பிரச்சினையைத் தீர்ப்பது இந்நாட்டைப் போலவே சார்க் பிராந்தியத்தினதும் எதிர்கால ஜனநாயகம், சமாதானம் தொடர்பான பிரச்சினையொன்றாகும். அதில் யுத்தவாதத்தைத் தோற்கடிக்காது, சமாதானத்தை ஏற்படுத்துவது பற்றிச் சிந்திக்க முடியாது. ஆனாலும் அவ்யுத்தவாதத்தைத் தோற்கடிக்க எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் வேறு கதையாகும்.

தற்போது அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் நடைமுறைகள் அவ்யுத்தவாதத்தைப் பலப்படுத்துமேயன்றி பலவீனப்படுத்தாது.

**தமிழில்: சி.வி.வினோத்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





**விக்டர் ஐவன்:**
சிங்களத்தில் வெளியாகும் 'ராவய' என்கிற வாராந்தர மாற்றுப் பத்திரிகையின் ஆசிரியர்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக வெளிவந்து கொண்டிருக்கும் ராவய, தமிழ் மக்களுடைய பிரச்சினைகள் குறித்து தொடர்ச்சியாக அக்கறையுடன் எழுதி வந்திருக்கிறது: வருகிறது. ஆனையிறவுச் சமரின் போது ராவய பத்திரிகையாளர்கள் ஆனையிறவிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பி வைத்த கள அறிக்கைகள், யுத்தத்தின் கொடூரத்தை சிங்கள மக்களுக்கு வெளிப்படுத்துவனவாக இருந்தன.

விக்டர் ஐவன் '71இல் நடைபெற்ற ஜே.வி.பி கிளர்ச்சியின் போது ஜே.வி.பியின் முக்கியமான தலைவர்களுள் ஒருவராக இருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.
அவரை ஒரு காலை வேளையில் அவரது அலுவலகத்தில் சந்தித்து பேச்சுவார்த்தை முறிவு, மூன்றாவது ஈழ யுத்தம், இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பன குறித்து நீண்ட உரையாடலை நடாத்தியது சரிநிகர். அவருடனான உரையாடலிலிருந்து சில பகுதிகள் சென்ற இதழில் பிரசுரமாகியிருந்தது. இந்த இதழில் அதன் மிகுதி இங்கு பிரசுரமாகிறது. சரிநிகர் சார்பில் விக்டர் ஐவனுடன் உரையாடியவர்கள்: சிவகுமார், எஸ்.செல்வன்.

# “சமாதானத்துக்கு குந்தகம் விளைவிப்பவர்கள் யார்?”

**-விக்டர் ஐவன்**

***தெற்கில் இடம்பெற்ற சமாதான முயற்சிகள் பற்றி:***

புலிகளைத் தோல்வியுறச் செய்து இதன் பின்பு ஒன்றுமையொன்றிற்குக் கொண்டு வருவது பற்றியே இப்போது தெற்கில் பலரும் பேசுகின்றனர். உங்களுடைய நிறுவனமான 'மோர்ஜ்' சார்பாகப் பேசுபவர்களை எடுத்துக்கொள்வோம். சிங்களத்தில் சமாதானம் தொடர்பாகப் பேசிவருகிற தமிழரான மனோரஞ்சன் புலிகள் பற்றிச் செய்யும் விமர்சனங்கள் சரியானவையாக இருக்கலாம். ஆனாலும் அவர் இப்போது செய்யும் விமர்சனங்கள் முழுச்சமாதான செயற்பாட்டுக்கும் குந்தகம் விளைவிக்கின்றது என்றே நான் கருதுகிறேன்.

புலிகள் மீது குரோதம் பாராட்டுவதனூடாகப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்று நான் கருதவில்லை.

அவர்கள் கொலைகாரர்கள், அவர்களை என்றென்றும் நம்பக்கூடாது என நினைத்து அவர்களுடன் எதுவித உடன்பாடும் சரிவராது எனக்கூறுவோமானால் புலிகளைத் தோல்வியுறச் செய்யம் வரையில் நாம் காத்துக் கொண்டிருக்க வேண்டி ஏற்படும். ஆனால் அது நடக்காது என்பதே எனது கருத்து. ஹோ -சி- மின் - வியட்நாமில் அனைத்து ட்ரொட்சியவாதிகளைக் கொன்றார். இது உண்மையானதாகும். ட்ரொட்சியவாதிகள் எப்பொழுதும் நினைத்தது ஹோ-சி-மின் ஐ வெற்றி பெற இடமளிக்க முடியாதென, ஆனாலும் ஹோ-சி-மின் வென்றார். அதுதான் தளத்திலுள்ள நிலைமையாகும் (Ground reality) . காஸ்ட்ரோ அதிகாரத்திற்கு வரும்போது உத்தியோக பூர்வ கொம்யூனிஸ்ட் கட்சித்தலைவரை உடனடியாகக் கைது செய்து சிறையிலடைத்தார். எல்லாக் கொம்யூனிஸ்ட் மாணவர் சங்கத் தலைவர்களையும் சிறைப்படுத்தினார். அவர்களை வைத்துக் கொண்டு அவர் அதிகாரத்திற்கு வரவில்லை. அவர்களுக்குக் காஸ்ட்ரோ மிகவும் மோசமான ஒரு மனிதராகவே படுவார். காஸ்ட்ரோ செய்தது நல்லது என நான் கூறவில்லை. ஆனாலும் அவற்றின் மீதே அனைத்தும் தீர்மானிக்கப்படுவதில்லை. அதனாலேயே இப்பிரச்சினை Sensitive ஆனது என நான் கூறுகிறேன். புலிகள் அதிகாரத்தில் உள்ளனர். அது மிகக் கூடாததாக இருக்கலாம், கொலை செய்வதாக இருக்கலாம். இவை அனைத்தும் உண்மை. ஆனாலும் அதுதான் அதிகாரக் கேந்திரமாகும். அதனால்தான் அவர்களுடன் பேச வேண்டி இருக்கிறது.

***சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்குக் குந்தகம் விளைவித்த தென்னிலங்கைப் பத்திரிகைகள் பற்றி:***

ஆம். அவர்கள் பாரிய பங்காற்றினர். ஒன்று இவ்வாறான ஒரு நேரத்தில் சந்திரிகா இந்தியா செல்லாதிருந்திருக்க வேண்டும் என நான் தனிப்பட்ட முறையில் கருதுகிறேன். அவர் இந்தியா செல்லுமுன் ''திவயினவும்'', ''தி ஐலன்டும்'' ஏற்படுத்திய பாதிப்பு (damage) பாரிய அளவிலானதாகும். சந்திரிகா இந்தியா செல்வது பிரபாகரன் பற்றிப் பேசவே எனப்பிரச்சாரம் செய்தார்கள். இந்தியா பற்றிய விஷயம் புலிகளுக்கு Sensitive issue. சிங்கள சமூகத்தில் பாரிய தொகையினர் சமாதானத்திற்காகப் பேச இருந்தனர். இன்று யார் பேசுகின்றனர்? ஆனால் யுத்தம் ஆரம்பித்த பின்னர் நான் பேசுகிறேன். இதனாலேயே தற்போது என் மீது விடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு நான் பிரபாகரனின் ஆள் என்பது. பிரபாகரன் வெள்ளையா, கறுப்பா என எனக்குத் தெரியாது. ஆனால் நான் அவரின் அரசியலை அறிவேன். அவரின் அரசியலுடன் நான் உடன்படவில்லை. அவரின் அரசியல் தொடர்பாக நான் இங்கிருந்து விமர்சனம் செய்வதில் அர்த்தமில்லை. நான் எடுக்கக்கூடிய நிலைப்பாடு கடுமையாக விடுதலைப் புலிகளைச் சாடுவது என்றால் அதற்காகச் சிங்கள மக்கள் சந்தோஷப்படுவர். அதனை நான் செய்ய மாட்டேன். ஆனாலும் நான் யாழ்ப்பாணம் சென்றால் புலிகளை விமர்சிப்பேன், அதனை நான் செய்தேன். மக்களை வெறுமனே சந்தோஷப்படுத்த என்னால் முடியாது. நான் இப்போது கூறியதைச் சிங்கள சமூகத்திற்கும் கூறுவேன்.

எவர் கொலைகள் செய்யவில்லை? பிரேமதாசா கொலைகள் செய்யவில்லையா? எமது சமூகத்தின் தலைவர்கள் கொலைகள் புரியவில்லையா? எமது இராணுவம் கொலை செய்யவில்லையா? எனவே இம் முறையில் பிரச்சினைகளைத் தீர்க்க இயலாது.

சந்திரிகாவிற்குச் சமாதானம் பற்றிய கருத்தொன்று உள்ளது. அது நல்லதே. கருத்து மட்டும் இருந்தால் போதாது அதனை செயற்படுத்த வேண்டும். இது ஒரு சதுரங்க ஆட்டமாகும். மிகுந்த நுணுக்கமான முறையிலேயே இவ்வாட்டம் நிகழ்த்தப்பட வேண்டும். அதற்குத் தேவையான நுண்ணறிவு சந்திரிகாவிற்கு இல்லை.

ஆனால் ஏனையவர்களைப் (ஏனைய தலைவர்களை) பார்த்தால் அப்படியும் இல்லை. சந்திரிகா பற்றி மிகைப்படுத்தல் செய்யப்பட்டது குறிப்பிட்டளவு தூரம் உண்மை. நான் விமர்சிப்பது எமது புத்திஜீவிகளையே ஆகும்.

எமது புத்திஜீவிகளுக்கு முதுகெலும்பு இல்லை. இவ்வாறானவர்களே இலங்கையிலுள்ளனர். சமாதான யாத்திரை, ஊர்வலமொன்றாகும் (பெரஹர) போது எல்லையில்லாது சத்தம் போடுவர். எதனையும் தெரிந்து கொண்டல்ல சத்தம் போடுவது. அது முடிவடைந்ததும் எவரையும் தேடிப்பிடிக்க இயலாது.

***சந்திரிகா அரசு தொடர்பாக புத்திஜீவிகளும், ஜனநாயகவாதிகளும், இடதுசாரிகளும் கொடுத்த மிகை அபிப்பிராயம் பற்றி:***

ஆம். அவ்வாறு ஒன்றைக் கொடுத்துள்ளனர் அப்படித்தான் நடந்திருக்கிறது. நான் கூறுவது பிரபாகரனைப் பார்ப்பதைப் போலவே சந்திரிகாவையும் பார்க்க வேண்டும். நல்லவரானாலும், கெட்டவரானாலும் சந்திரிகா தான் தற்போது நாட்டிலுள்ள தலைவர்.

அவருக்கு நிறைய விளக்கக்குறைவு உள்ளது. ஆனால் சமாதானம் பற்றி அவருக்கு உணர்வு இருந்தது. இவ்வுணர்வு இன்னும் அவரிடம் உள்ளதென நான் கருதுகிறேன். அவரது உரைகளில் முரண்பாடொன்று உள்ளது. யுத்தம் பற்றியும் பேசுகிறார். ஒரேயடியாய் சமாதானம் பற்றியும் பேசுகிறார். அதாவது இருபுறமும் தொட்டபடி உள்ளார். அனைத்துக்குறைகள் இருந்த போதும் இச்சமூகத்தில் இப்போது உள்ள தலைவர்கள் மத்தியில் நமக்கான தெரிவு சந்திரிகாதான். ஆனாலும் சந்திரிகா திறமையானவர் அல்ல. சந்திரிகாவிற்கு கெரில்லா இயக்கத்தின் அரிச்சுவடியான ''அ''வைக் கூடத்தெரிந்து கொள்ளமுடியவில்லை.

எல்லாம் பேசும் நேரமல்ல இது. அதைவிட வாயை மூடிக்கொண்டிருப்பது நல்லதென நினைக்கிறார்கள்.

***இனப்பிரச்சினைக்கான தீர்வை இழுத்தடிப்பது பற்றி:***

உண்மையிலேயே இந்த அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு மட்டுமல்ல வேறு எந்தப்பிரச்சினைக்குமே இன்னும் தீர்வு வழங்கவில்லை. அதாவது இவர்களுக்கு இந்நாட்டின் சமூகத்திலுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆழ்ந்த புரிதல் எதுவும் கிடையாது.

உண்மையிலேயே எனது கருத்தானது முழு அரசியலுமே தேசிய மட்டத்தில் மீள் புனருத்தாரணம் செய்யப்பட வேண்டிய நேரம் இது என்பதே ஆகும். எமது கல்வி முறை என்ன? எமது இலக்குகள் எவை? எம்மால் அவற்றை நிறைவு செய்ய முடியுமா? இன்றும் எம்மிடம் இருப்பது பழைய Agenda ஒன்றாகும். எமது அரச வியூகம், அரச அமைப்பில் தமிழ் மக்களின் துன்ப துயரங்

→ 19

## நஜீபாவின் கவிதையொன்று



என்னையே பார்க்கும் நெல்லிமரம்
என்னவடிவாய்த்தான் உள்ளது:
என் முகத்தை விட!
மழைக்காலங்களில் அடுப்பில் வைத்துக் கறுத்த
சட்டியின் நிறம் போன்ற
அதன் தண்டு அதிலிருந்து
கிளைகளாய்ப்பிரிந்து நிற்கும் அதன்
இளம் பச்சை இலைகள்.
மழைத்துளி பட்டு நிற்கும் போது
என்னவோ செய்கிறது எனை.

மாலை நேரங்களில் நான்
மிகுந்த துக்கத்துடன் இருக்கும் வேளைகளில்
அதனுடன்தான் பேசியும்
அழுதும் தீர்ப்பேன்.
வஞ்சகமும் பொறாமையும் நிறைந்த மனிதர்களது
முகத்தைவிட அந்த
நெல்லிமரத்தின் உடல் முழுக்க
அழகாகவே உள்ளது.
என் நேசத்திற்குரிய நெல்லிமரம்!

ஒரு உருண்டையின்
நுனியில் தொங்கிக் கொண்டிருக்கிறேன்.
இனிமையான ஆலமரம் அதிலேயே
எப்பொழுதும் இருக்கும் குட்டி ஊஞ்சல்
மனிதர்கள் இல்லாத இடங்கள் இவை
அனைத்துமே மனதிற்கு இதம் தருபவை.

கேவலமான கௌரவ வெறியுடன்
அலையும் சிவந்த கண் மனிதர்
இவர்களை நினைத்து மிகவும்
நடுங்குகிறேன் இரவில்

மனிதனாகப் பிறந்து விட்டோமே என்கின்ற
கவலையை விடவும்
பெண்ணாகப் பிறந்துவிட்டோமே என்கின்ற
சோகம் அதிகரிக்கிறது வர வர
இருள் பரவி நிரம்பிவிட்ட என் வாழ்வில்
என்றாவது ஒரு சூரியன்
வருமா என்பது
அசாத்தியமானதொரு கேள்வி.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "அரசை முற்றாக மீளமைப்பு செய்வதில் தான் தீர்வு மையம் தங்கியுள்ளது!"



~சுனில் விஜேசிறிவர்த்தன

**விபவி - மாற்றுக்கலாசார மையத்தின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி சுனில் விஜேசிறிவர்த்தனவுடன் 'சரிநிகர்' நிகழ்த்திய உரையாடலின் சாராம்சத்தைக் கீழே தருகிறோம்.**

**எழுபதுகளின் ஆரம்பத்தில் 'மாவத்த' எனும் கலை, இலக்கியச் சஞ்சிகையை வெளியிட ஆரம்பித்தவர் சுனில். தமிழிலக்கியங்களைக் கணிசமான அளவுக்குச் சிங்கள மொழியில் அறிமுகப்படுத்தியது மாவத்த. இப்பொழுது 'தீர்த்த' எனும் நவீன கலைகளுக்கான சஞ்சிகைக்கு ஆசிரியராக இருக்கும் சுனில், கவிஞரும் பாடகரும் நாடகாசிரியருமாவார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கல்விச்சேவையிலும் சஹி சந்த எனும் வானொலி நிகழ்ச்சியிலும் முக்கிய பங்காற்றியுள்ளார் சுனில்.**

**ஊழல், அரசு விசுவாசம், வால் பிடித்தல் போன்றவையே பாரம்பரிய விழுமியங்களாக வாய்க்கப்பெற்ற இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில், கல்விச்சேவை முற்றிலும் வித்தியாசமானது எனக்கருதும் சுனில் 'சஹி சந்த' எனும் விமர்சன நிகழ்ச்சியொன்றையும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் சிறிதுகாலம் நடாத்தியுள்ளார். விமர்சனத்தின் காரம் தாங்க முடியாமல் அரசு இந்த நிகழ்ச்சியை நிறுத்திவிட்டது.**

***0 பேச்சுவார்த்தைகள் முறிந்து யுத்தம் மீண்டும் ஆரம்பமாகிவிட்டது. இந்தச் சூழலில் தீர்வு முயற்சிகள், சமாதானத்திற்கான சாத்தியப்பாடுகள் பற்றி என்ன கருதுகிறீர்கள்?***

✱ கடந்த தேர்தல் காலங்களின் போது சமாதானத்தைக் கொண்டு வரக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏராளமாகவே இருந்தன. விபவி சார்பிலும் வேறு நிறுவனங்கள் சார்பிலும் காலி, மாத்தறை, களுத்துறை போன்ற பல இடங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்களில் கலந்து கொண்ட போது என்னுடைய எண்ணம் மேலும் வலுப்பட்டது. உண்மையான சமாதானம் தேவையென்றால் இப்போதுள்ள அரச அமைப்பு (State stracture) முற்றாக மீளமைக்கப்பட வேண்டும் என்பதே என்னுடைய கருத்து. ஒருவகையில் ஜாதிகச் சிந்தனையாளர்களும் இதைத்தான் சொல்கிறார்கள். வித்தியாசம் என்னவெனில் அவர்கள் முற்று முழுதாகச் சிங்கள பௌத்த மையம் கொண்டதாக அரசு மீளமைப்புச் செய்யப்பட வேண்டும் என்கிறார்கள். திரிக்கப்பட்ட வரலாற்றிலும் ஐதீகங்களிலும் அவர்கள் தங்களது வாதங்களுக்கு ஆதாரம் கண்டுபிடிக்கிறார்கள். நாங்கள் சொல்லும் அரசமீளமைப்பு முற்றிலும் வேறுபட்டது. இப்போதைய அரசஅமைப்பு காலங்காலமாக எங்களுக்கு இருந்து வந்த ஒன்றல்ல. பிரித்தானியர்கள் விட்டுச் சென்ற எச்சசொச்சம்தான் இன்றைய அரச அமைப்பு. இந்த அரச அமைப்பு இலங்கையின் பன்முகத்தன்மையையும், பன்முகப்பட்ட இனத்துவ, கலாசார இயல்பையும் பிரதிநிதித்துவப்படுத்துவதாக இல்லை. எனவே இந்த அரசு அமைப்பு இலங்கையின் பன்முகப்பாட்டைப் பிரதிபலிப்பதாக முற்றாக மீளமைப்புச் செய்யப்பட வேண்டுவது ஒரு பிரதானமான விடயமாகும்.

சமாதானம் பற்றிப் பேசும் போது யுத்தம் புரிபவர்களைப் பற்றிப் பேச வேண்டி இருக்கிறது. இலங்கை அரசைப்பற்றிப் பேசாமல் விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேச முடியாது. விடுதலைப் புலிகள் தான் பெரும்பிரச்சினை என்று சொல்வது யதார்த்தமில்லை. உண்மையில் இலங்கையில் உள்ளார்ந்து காணப்படும் ஒரு பிரச்சினையின் விளைவுதான் அவர்கள். மேலும் அரச ஒடுக்குமுறைக்கு எதிரான தமிழ் மக்களின் போராட்டம் ஒருமுகங்கொண்டதாக (Monolithic) இருக்கவில்லை. தமிழ் மக்களுடைய எதிர்ப்புப் பல தளங்களிலும் பல தரங்களிலும் வெளிப்பட்டிருக்கிறது என்பதை நாம் கவனிக்க வேண்டும். இப்படிக் கவனிக்கத் தவறுவது அவர்களுடைய எதிர்ப்புக் குரலின் பன்முகத்தன்மையை மறுதலிப்பதாகும்.

தேர்தல் காலத்தில் யுத்தம் செய்யும் இரண்டு பிரிவினருக்கும் அப்பால் மூன்றாவது சக்தியாக - சமாதானத்தின் குரலாகவே பொ.ஐ. முன்னணி எழுந்தது. தொடர்ந்தும் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்துக்கும் அப்பால் தன்னுடைய சமாதான நிலைப்பாட்டை அது மேல்மட்டத்திலிருந்து கீழ்மட்டம் வரை பேணியிருக்க வேண்டும். யுத்தம் செய்யும் ஒரு பிரிவாகப் பொ.ஐ.முன்னணி மாற நேர்ந்தமை தான் அவலம்.

***0 யுத்தத்தை ஆரம்பித்தது புலிகள்தான் எனவும் இறுதிவரையும் தாமே சமாதானத்தை வலியுறுத்தி வந்தவர்கள் என்பதுதானே பொ.ஐ.மு அரசின் நிலைப்பாடு?***

✱ புலிகள் தான் யுத்தத்தை ஆரம்பித்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் அடிப்படைப் பிரச்சினை அதுவல்ல: இந்த யுத்தத்தை ஒரு பரந்த பின்னணியிலேயே நாம் பார்க்க வேண்டும். யுத்தத்தினால் பயனும் பலமும் பெறும் நிறைய சக்திகள் உள்ளன. யுத்தங்களுக்குத் தனியான இயக்கவியலே உள்ளது! உதாரணமாக, இலங்கைப் படையினரை எடுத்துக் கொள்ளுங்கள். மொத்தம் ஒரு லட்சம் பேர் உள்ளனர். அவர்களுக்கு ஒரு தலைமை உள்ளது. அவர்களுக்கென ஒரு கருத்தியல் உள்ளது. அவர்களுடைய மேலோங்கித் தலைமைகள் இன்று அரசியலிலும் உள்நாட்டு வர்த்தகத்திலும் நன்றாக ஊடுருவியுள்ளனர். பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், கம்பூச்சியா நாடுகளில் இராணுவத்தின் பங்கு போலவே இலங்கையிலும் படையினர் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாகி விட்டனர்.

பிரேமதாச காலத்தின் போது மக்கள் விடுதலை முன்னணியை (JVP) அரசியல் ரீதியிலும் இராணுவ ரீதியிலும் எதிர்கொண்டது படையினரே ஆகும். இதுபோலவே ஈழயுத்தத்திலும் இன்று படையினர் அரசியல் ரீதியானதும் இராணுவ ரீதியானதுமான முக்கிய பங்கை எடுக்கிறார்கள். இப்போக்குத்தான் ஜனநாயக அரசியலுக்கு ஆபத்தானது.

விடுதலைப் புலிகளை சமாதானத்துக்குக் கொண்டு வருவது பற்றியே 'எல்லோரும் பேசுகிறார்கள். படையினரைச் சமாதானத்துக்குக் கொண்டு வருவது பற்றி எவருமே பேசுவதில்லை. இதுதான் பிரச்சினை.

**விடுதலைப் புலிகளை சமாதானத்துக்குக் கொண்டு வருவது பற்றியே எல்லோரும் பேசுகிறார்கள். படையினரைச் சமாதானத்துக்குக் கொண்டு வருவது பற்றி எவருமே பேசுவதில்லை. இதுதான் பிரச்சினை.**

**யுத்தம் பற்றியும் இனப்பிரச்சினை பற்றியும் எடுக்கப்பட்ட பல தகவல் திரைப்படங்களை ரூபவாஹினி ஒளிபரப்ப மறுத்துவிட்டது.**

**இந்த அரசு வந்த பிற்பாடு சுதந்திரமான இடதுசாரிகள் (Indont left) என்ற தளத்தையே காணவில்லை. இது நல்ல அறிகுறியல்ல. சேர்ந்து அரசமைப்பை மாற்றலாம் என்று நினைப்பவர்களுக்கு வசந்தராஜாவின் கதையே நல்ல உதாரணம். தேர்தல்களுக்கு முன்பாக வீறுடன் உழைத்த விடுதலைக் கலைஞர்கள் அமைப்பு, மற்றும் பல இடதுசாரிகள் இன்று எங்கே? ஒன்றில் அவர்கள் புதிய அரசில் வளமான பதவிகளில் உள்ளனர். அல்லது அப்படி ஒரு பதவிக்காகக் காத்துக்கொண்டுள்ளனர். சமூக மாற்றம் அத்துடன் முடிகிறது!**

***0 பொ.ஐ.மு. சமாதானத்துக்கான வாய்ப்பை இழந்துவிட்டது என்று கருதுகிறீர்களா?***

✱ நாங்கள் அரசாங்கத்தைத்தான் (Government) மாற்றியுள்ளோம். அரசை (State) அல்ல. அரசை முற்றாக மீளமைப்புச் செய்வதில்தான் தீர்வு மையம் தங்கியிருக்கிறது. பொ.ஐ.மு. பதவிக்கு வரும் போது யுத்தத்தை ஒழிப்பது என்பதே அதன் இலக்காக இருந்தது. எமது மக்களுக்கெதிரான 'கிறிமினல்' யுத்தம் இது என்பது அதனுடைய கருத்தாக இருந்தது. ஊழல் மிக்க மோசமான ஒரு அரசியலின் விளைவுதான் யுத்தம் என்று அவர்கள் சரியாகவே கூறினார்கள். பதவிக்கு வந்த பிற்பாடும் யுத்தம் புரியும் இரு தரப்பினரிலிருந்தும் (படையினர் - புலிகள்) அவர்கள் வேறுபட்டு நின்றிருக்க வேண்டும். தேர்தல்கள் முடிந்த உடனேயே பரந்தளவிலான சமாதான முயற்சிகளை அவர்கள் ஆரம்பித்திருக்க வேண்டும். இராணுவமயப்படுத்தலை (Militarization) நீக்க முயன்றிருக்க வேண்டும். இத்தகைய ஒரு நல்ல சந்தர்ப்பம் அவர்களுக்கு இருந்தது. அதை அவர்கள் தவறவிட்டு விட்டார்கள்.

ஒரு அரசியல் சக்தி என்ற வகையில் பொ.ஐ.மு. முற்றிலும் இணக்கம் வாய்ந்ததாக இருக்கவில்லை. அவர்களுடைய அரசாங்கமும் பலவீனமான அரசாங்கம்தான். ஜனாதிபதி சந்திரிகாவின் சமாதான முயற்சிகளோ ஜனநாயகத் திட்டங்களோ சேதனா பூர்வமான முறையில் பொ.ஐ.முன்னணிக்குள் உள்வாங்கப்படவில்லை.

சமாதானம் நோக்கியும் ஜனநாயக வழிமுறைகளை நோக்கியும் அரசையும் சமூகத்தையும் திருப்புவதற்குப் பொதுசனத் தொடர்பு ஊடகங்களைப் பயன்படுத்தவே இல்லை. யுத்தம் பற்றியும் இனப்பிரச்சினை பற்றியும் எடுக்கப்பட்ட பல தகவல் திரைப்படங்களை ரூபவாஹினி ஒளிபரப்ப மறுத்துவிட்டது.

ஒரு தீட்சண்யமான அரசியல் பார்வை பொ.ஐ.முன்னணிக்கு இருக்கவில்லை. இது ஒரு முக்கியமான பிரச்சினை. இடதுசாரிகளிலும் பெரும்பாலானவர்கள் இந்த அரசோடு சேர்ந்துவிட்டார்கள் அல்லது அரசுடன் ஒத்தோடிகளாக இருக்கிறார்கள். இவர்கள் வரலாற்றிலிருந்து பாடம் கற்றுக்கொள்வதேயில்லை.

***0 அரசமைப்பு மீளமைக்கப்பட வேண்டும் என்று சொல்கிறார்கள். அப்படியானால் அரச அதிகாரம் இல்லாமல் அது எப்படிச் சாத்தியமாகும்? பொ.ஐ.முன்னணியில் உள்ள இடதுசாரிகள் உள்ளிருந்துதானே அதனைச் செய்யலாம் என்று சொல்கிறார்கள்?***

இந்தக் கேள்வியில் நியாயம் இருக்கிறது. ஆனால் அது முற்றான நியாயம் அல்ல. அரசில் பங்கேற்பது என்பது குறித்து நமது கடந்தகால வரலாறும் இப்போதைய குறிப்பான சமூக யதார்த்தமும் பற்றி நாம் அவதானமாக இருக்க வேண்டும். இந்த அரசு வந்த பிற்பாடு சுதந்திரமான இடதுசாரிகள் (Indont left) என்ற தளத்தையே காணவில்லை. இது நல்ல அறிகுறியல்ல. சேர்ந்து அரசமைப்பை மாற்றலாம் என்று நினைப்பவர்களுக்கு வசந்தராஜாவின் கதையே நல்ல உதாரணம். தேர்தல்களுக்கு முன்பாக வீறுடன் உழைத்த விடுதலைக் கலைஞர்கள் அமைப்பு, மற்றும் பல இடதுசாரிகள் இன்று எங்கே? ஒன்றில் அவர்கள் புதிய அரசில் வளமான பதவிகளில் உள்ளனர். அல்லது அப்படி ஒரு பதவிக்காகக் காத்துக்கொண்டுள்ளனர். சமூக மாற்றம் அத்துடன் முடிகிறது!

— சுப்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "புலிகள் பேச்சுவார்த்தையைக் குழப்பியது நியாயமானதல்ல"

ஏப்பிரல் 19ம் திகதி அதிகாலையில் இரண்டு ரோந்துப்படகுகள் சிதறபடிக்கப்பட்டதை அடுத்து, புலிகளுடனான பேச்சுக்கள் முடிவுக்கு வந்தன. சமாதான முயற்சி தோல்வியுறுவதற்கு ஏதுவான அரசதரப்பு காரணங்களென மூன்று அடிப்படையான முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. பொருளாதாரத் தடை நீக்கப்படவில்லை என்பது, பேச்சுவார்த்தையில் ஈடுபடவென அனுப்பப்பட்ட நபர்கள் குறைந்த தரத்தினர்களாக (Low - level Negotiators) இருந்தது, எந்தவிதமான அரசியல் தீர்வையும் முன்வைக்காதது என்பவையே அம்முறைப்பாடுகள் ஆகும். இவை ஒவ்வொன்றையும் ஒவ்வொன்றாகக் கவனிப்போம்.

***பொருளாதாரத் தடை நீக்கப்படவில்லை:*** இதிலுள்ள முறைப்பாடு என்னவென்றால், பொருளாதார தடைநீக்கம் வெறும் சொல்லளவில் அறிவிக்கப்பட்டதே ஒழிய நடைமுறையில் நடக்கவில்லை என்பதாகும். வட - கிழக்குக்கு பொருட்கள் எடுத்துச் செல்ல இரண்டு வழிகள் இருக்கின்றன. ஒன்று கப்பல் மூலம். இதன் மூலம் கொழும்பிலிருந்து யாழ் குடாநாட்டுக்கு நேரடியாகப் பொருட்கள் அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்த வகையான போக்குவரத்து அடிப்படைப் பொருட்களான மா, பருப்பு, பால்மா போன்றவற்றிற்காக பயன்படுத்தப்பட்டு வந்தது. இரண்டாவது வழி தரை மார்க்கமானது; இதில் , தாண்டிக்குளம் ஊடாக யாழ்ப்பாணத்திற்கு பொருட்களை எடுத்துச் செல்ல லொறிகள் பயன்படுத்தப்பட்டன. இந்த மார்க்கம் வழமையாக தனிப்பட்ட வியாபாரிகளாலும், பயணிகளாலும் பயன்படுத்தப்படுகிறது. தாண்டிகுளத்தில், தடை நீக்க அறிவிப்பு நடைமுறைப்படுத்தப்படுவதில் சில தாமதங்கள் இருந்திருக்கின்றன. தனிப்பட்ட இராணுவ வீரர்கள் தமது சொந்தத் தடைகளை விதிப்பதும், அதிகார வர்க்கத்தின் இறுகிப் போன நடைமுறைகளும் கூட மேலதிக தாமதங்களுக்குக் காரணம் எனலாம். வடக்கில் வேலை செய்யும் நிறுவனங்கள், மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் அபிப்பிராயத்தின்படி தனிநபர்களது கட்டுப்பாடுகளை மீறிய நிறுவனமயப்பட்ட தாமதப்படுத்தல் ஒன்று நிலவவே செய்துள்ளது. காரணங்கள் எதுவாயிருந்த போதும், தாண்டிக்குளத் தாமதப்படுத்தல்களை மீறிய நிறுவன மயப்பட்ட தாமதப்படுத்தல் ஒன்று நிலவவே செய்துள்ளது. , எவ்வாறெனினும் தாண்டிக்குள தாமதப்படுத்தலகளை யாரும மறுகக முடியாது. பலர் திரும்பத்திரும்ப முறைப்பாடு செய்ததை தொடர்ந்து, பொருட்கள் செல்வதை கண்காணிக்கவென பொதுமக்கள் குழுக்கள் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டன.



புகைப்படம்: அனுருத்த லொக்கு ஹப்பு ஆரச்சி

அரசாங்கமும் தொன்கணக்கில் உணவுப் பொருட்களை யாழ்ப்பாணத்திற்கு அனுப்பியது. வடக்கை நிர்மாணிக்கவென அனுப்பப்பட்ட சீமெந்து மற்றும் கட்டிடப் பொருட்கள் உள்ளிட்ட உணவுப் பொருட்கள் புலிகளின் பாதுகாப்புப் பிரதேசங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதற்காக அவர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டன. இவ்வுணப் பொருட்கள் அனுப்பப்பட்ட போதும், அங்கு விலை வீழ்ச்சி ஏற்படவில்லை என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. அத்தியாவசியப் பொருட்களின் வியாபாரம் மீதான புலிகளின் தனிக்கட்டுப்பாடு (Monopoly) காரணமாக பொருட்களுக்கு செயற்கையான தட்டுப்பாடு நிலவியது. யாழ் நோக்கி பெருந்தொகை உணவுப் பொருட்கள் போன போதும் அங்குள்ள மக்கள் அவற்றில் பெருமளவு பகுதியை காணக்கூடவில்லை. எனவே தட்டுப்பாடு நிலவியதற்கான பொறுப்பு புலிகளையே சாரும்.

> "பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலிலுள்ள வேறுபாடும், பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டோர் தொடர்பான குற்றச்சாட்டும், பொருளாதாரத் தடை விவகாரமும் தமிழ் மக்கள் அதிக நம்பிக்கை கொண்டிருந்த சமாதான முயற்சியைக் குழப்ப போதுமான, நியாயமான காரணங்கள் அல்ல."

வடக்குக்கான பெருமளவு பொருட்கள் கப்பல் மூலமாக அனுப்பப்பட்டாலும், தரை மார்க்கமான போக்குவரத்தே பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது. இதற்கான காரணம் பெருமளவு பயணிகளும் வியாபாரிகளும் தாண்டிக்குளம் பாதையை பாவித்தே யாழ் போய் வந்து கொண்டிருந்ததாகும். இதனால், பொருட்களை யாழ் போக விடாமல் தடுக்கும் ஒரு அரசாங்கம் இது என்ற குற்றச்சாட்டை அரசாங்கம் சுமக்க வேண்டிய நிலையை இது தோற்றுவித்தது. ஆனால், யாழ் நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் பொருட்களில் பெரும் பகுதியை அமுக்கி வைத்திருக்கும் புலிகள் மீது அதற்காக எத்தகைய குற்றச்சாட்டும் சுமத்தப்பட்டதில்லை!

***குறைந்த தரத்தினரது (Low - level Negotiators) சமசரப் பேச்சுவார்த்தைகள்:***

அடுத்த குற்றச்சாட்டு அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கு அனுப்பியவர்கள் குறைந்த தரத்தினர்கள் என்பதாகும். ஜனாதிபதி, வங்கியாளர்கள், கட்டிடக்கலைஞர்கள் , மதகுருமார், மற்றும் கல்வியாளர்களை அனுப்பியதற்குப் பதில் மந்திரிகளை அனுப்பியிருக்க வேண்டும் என்று கூறப்படுகிறது.

இவ்விடயத்தில் இரண்டு விடயங்களை நாம் கவனிக்க வேண்டும். ஒன்று ஜனாதிபதியின் தலைமைத்துவமுறை. இரண்டாவது பேச்சுவார்த்தையின் கட்டங்கள். முதலாவதாக, அவர் உயர்மட்ட அரசியல்வாதிகளை அனுப்பாவிட்டாலும், பல அவதானிகள் குறிப்பிடுவது போல, தனது நம்பிக்கைக்கு பாத்திரமான நபர்களை அனுப்பியிருந்தார். இரண்டாவதாகப் பேச்சுவார்த்தை இன்னமும் ஆரம்பக்கட்டத்திலேயே இருந்தது. அர

→19

**-ராம் மாணிக்கலிங்கம்**

நன்றி-The Sunday Times

# "புலிகளுக்கு நம்பிக்கை தரக்கூடியதாக ஜனாதிபதி எதையுமே தெரிவிக்கவில்லை"



புகைப்படம்: அனுருத்த லொக்கு ஹப்பு ஆரச்சி

மார்க் செனிவிரத்ன, இலங்கைப் பாதுகாப்பு அமைச்சில் நாலரை வருடங்கள் பணிபுரிந்த உயர்படை அதிகாரி PSY - OPS என்றழைக்கப்படும் உளவியல் சார்ந்த யுத்த தந்திரோபாயங்களுக்குப் பொறுப்பாக இருந்தவர். ஜூன் 16, Frot line இதழில் அவர் எழுதிய கட்டுரையின் சுருக்கிய மொழிபெயர்ப்பு இது.

பிரேமதாச அரசுக்கும் புலிகளுக்கும் இடையிலான பேச்சுவார்த்தைகள் அவற்றின் ஒழுங்கமைப்பிலும், திட்டமிடலிலும் கால அட்டவணையிலும் மிகவும் உயர்ந்த நிலையில் தொழில் முறை சார்ந்ததாக (Profissional) இருந்தது. பேச்சுவார்த்தைகள் தொடங்கி 100வது நாளில் ஒப்பந்தம் கையெழுத்தாவதாக இருந்தது. தனிப்பட்ட உணர்வுகளுக்கும் உணர்ச்சிகளுக்கும் எவ்வித இடமும் இருக்கவில்லை.

இப்போது குழம்பிப்போயுள்ள சமாதான முயற்சிகளைப் பொறுத்தவரை அவற்றின் பிரதானமான காரணியாக இருந்தது உணர்வுகளும் உணர்ச்சிகளும் தவிரத் தொழில் முறை சார்ந்த அணுகுமுறை அல்ல. பத்திரிகைத் தலையங்கங்களை எப்படிக் கைப்பற்றுவது என்ற விஷயமும் சிறிதளவு பங்களித்துள்ளது.

சமாதான முயற்சிகள் உடைந்து போன பின்னரும் கூட வெளியான அரசு அறிக்கைகள் அரசின் உளப்பூர்வமான விருப்புப் பற்றியும் நேர்மை பற்றியுமே பேசின. துரதிர்ஷ்டவசமாக இந்த எட்டுமாதச் சமாதான வழிமுறைகளின் போது நாம் காணக்கிடைத்ததெல்லாம் அரசாங்கத்தின் நேர்மையான, உளப்பூர்வமான சமாதான விருப்பு மட்டும்தான். வேறு எதுவும் சாதிக்கப்படவில்லை. அரசின் வார்த்தைகளிலே சொல்வதானால்,

> முன்னைய அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட பொருளாதாரத் தடையை நீக்குவதும் உணவு விநியோகத்தை ஏற்படுத்துவதும் மீன்பிடித் தடையை நீக்குவதும் சாதிக்கப்பட்டன.

> "தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டு, கொல்லப்பட்டு, அவர்களுடைய உடைமைகள் அழிக்கப்பட்டு வந்தமைக்கான பொறுப்பு தொடர்ந்து வந்த சிங்கள அரசாங்கங்களையே சார்ந்தது என்பதை வடபுலத்தவர் நன்கறிவர்... பொருளாதாரத் தடையை நீக்கிவிடுவதால் மட்டும் தமிழ் மக்கள் புலிகளை வீசியெறிந்து விட்டு அரசின் பக்கம் வந்து சேர்ந்து விடுவார்கள் என்று அரசாங்கம் உண்மையாகவே நம்பமுடியுமா?"

தேர்தல்களில் பெருமளவு வாக்குகளைக் கைப்பற்றுவதே ஆரம்பத்தில் இந்த அரசின் குறிக்கோளாக இருந்தது. ஜனாதிபதித் தேர்தல்களில் சந்திரிகாவுக்குக் கிடைத்த எக்கச்சக்கமான பெரும்பான்மையும், அவரே தனிப்பட்ட முறையில் தெரிவு செய்து யாழ் அனுப்பிய சமாதானக் குழுவுக்கு அங்கு மக்கள் வழங்கிய வரவேற்பும் சந்திரிகாவை மேலும் உணர்வு பூர்வமாகச் சமாதான முயற்சிகளில் அவரை இழுத்துவிட்டது என்று கருதலாம். கெரில்லா அல்லது விடுதலை இயக்கங்களுடன் பேசுகிறபோது உணர்வுகளால் இழுத்துச் செல்லப்படுவது புத்திசாலித்தனமல்ல என்பதை அவர் உணர்ந்திருக்க வேண்டும்.

சந்திரிகாவின் உணர்வு பூர்வமான ஈடுபாட்டைப் புலிகள் நன்றாகவே பயன்படுத்தினார்கள். சமாதான வழிமுறைகள் தோல்வியில் முடிவடைந்ததும் புலிகளால் லண்டனில் இருந்து வெளியிடப்பட்ட அறிக்கை இதற்கு ஒரு நல்ல சாட்சியாகும்.

> "சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமான போது வடபுலத்து மக்களது அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதே முன்னுரிமை வாய்ந்த ஒன்றாக இருக்க வேண்டும் என்ற புரிந்துணர்வு இருந்தது. ***உண்மையில் அரசுதான் இத்தகைய வேலைத்திட்டத்தை முன் வைத்தது."***

சமாதானப் பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தமைக்கான முக்கியமான காரணங்களில் இதுவுமொன்றாகும்.

ஜனாதிபதி வெளியிட்ட அறிக்கைகளைப் பார்க்கிற போது புலிகளுக்குப் போதுமானளவு நம்பிக்கை தரக்கூடியதாக எதையுமே அவர் தெரிவிக்கவில்லை என்பது தெரியவரும். உதாரணமாக ஹிந்து பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியொன்றில் பிரபாகரனை இந்தியாவுக்கு நாடு கடத்தமுடியாமல் இருப்பதற்குக் காரணம் அவரைப் பிடிக்க முடியாமல் இருப்பதுதான் என்று தெரிவித்திருந்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் வெற்றியளித்திருந்தால் பிரபாகரனுடன் நேரடியாகப் பேச வேண்டிய தேவை ஏற்பட்டிருக்கும். ஜனாதிபதியின் இந்தக்கூற்று எவ்வகையிலும் புலிகளுக்கு நம்பிக்கை தருவதாக இருப்பதிருக்க நியாயமில்லை. அதே பேட்டியில் தான் புலிகளையும் பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் ஒப்பிட்டுச் சமாதானம் வெற்றியளிக்கும் என்று வேறு குறிப்பிட்டிருந்தார். பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஜனாதிபதி எவ்வளவு குழப்பமாக இருந்தார் என்பதைப் புலிகள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று சொல்லத் தேவையில்லை! பேச்சுவார்த்தைக்கு உரிய முறையில் ஜனாதிபதி தயார்படுத்திக் கொள்ளவில்லை என்பதை இன்னொரு உதாரணம் தெளிவாக விளக்குகிறது.

மிகச்சிறந்த முறையிலான அதிகாரப்பரவலாக்கம் ஏற்படுமெனில் ஈழக்கோரிக்கையை புலிகள் கைவிடத்தயாராக உள்ளதாக அன்ரன் பாலசிங்கம் அறிவித்தமை தனது அரசுக்குக் கிடைத்த பெரும் வெற்றி என்று ஜனாதிபதி குறிப்பிட்டார். இது திட்ட

→19

**-ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி**
**மார்க் செனிவீரத்ன**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஜனநாயக அரசியல் கட்டமைப்பிற்குத் தேவையான அம்சங்கள்

**1. அரசு மத சார்பற்ற ஒன்றாக இருத்தல் வேண்டும்.**

ஒவ்வொருவரினதும் தெரிவுக்கமைய, மதங்களைப் பின்பற்றுவதற்கான எல்லாப் பிரசைகளினதும் சுதந்திரங்களை மட்டும் அரசு உறுதி செய்தல் வேண்டும்.

**2. அடிப்படை உரிமைகளும், மனிதஉரிமைகளும் பலப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படல் வேண்டும்.**

சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள மனித உரிமைகளுக்கு சமமாக இலங்கையின் எல்லைக்கு உட்பட்டு வாழ்கின்ற எல்லா நபர்களினதும் அடிப்படை மற்றும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுவது யாப்பு ரீதியாக உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும். தேசிய பாதுகாப்பு என்னும் போர்வையில் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்களினாலோ அல்லது விதிமுறைகளினாலோ இந்த உரிமைகள் மீறப்படுவது தடுக்கப்படல் வேண்டும். ஏதேனும் உரிமைகள் எப்போதாவது கட்டுப்படுத்தப்படுவது அவசியமாகுமேயானால், அத்தகைய நடைமுறைகள் அந்தக் குறிப்பிட்ட தேவையினதும், சூழ்நிலைகளினதும் அடிப்படையிலும், சட்டத்தின் வரையறைக்குட்பட்டதாகவும் மேற்கொள்ளப்படல் வேண்டும். அத்தகைய கட்டுப்பாடுகள் அக்குறிப்பிட்ட சூழ்நிலையைச் சமாளிப்பதற்கு மட்டும் மேற்கொள்ளக் கூடிய வரையறைகளையும், கால எல்லைகளையும் கொண்டதாக அமைதல் வேண்டும். ஏற்கனவே நடைமுறையிலுள்ள சட்ட மூலங்களும், எதிர்காலத்தில் நிறைவேற்றப்பட வேண்டிய சட்ட மூலங்களும் மேற் கூறப்பட்டுள்ள நிலைப்பாடுகளுக்கு அனுகூலமாக அமைதல் வேண்டும்.

எல்லா அடிப்படை உரிமைகளும் சட்டரீதியாக உத்தரவாதப்படுத்தப்படல் வேண்டும். எந்தவொரு நபரினதும் அடிப்படை உரிமைகள் மீறப்படுமிடத்து அந்த அடிப்படை உரிமை மீறல் தொடர்பாக பிரதேச, தேசிய, சர்வதேசிய மட்டங்களிலான சட்ட நடவடிக்கைகள் மூலமாக அந்நபர் தனது மனித உரிமை மீறல்கள் தொடர்பாக நிவாரணம் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**3. பிரசாவுரிமை**

1948 பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையில் சாதாரணமாக வசித்தவர்களும், அவர்களின் வழிவந்தவர்களும் இலங்கைப் பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

இந்த நடைமுறையானது இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபொழுது இலங்கையைத் தாயகமாக கொண்டு வாழ்ந்து வந்த எல்லோருக்கும் இலங்கைப் பிரஜாவுரிமையைப் பெற்றுக் கொள்வதற்கு வழிவகுக்கும். அத்தோடு, மலையகத் தமிழ் மக்களுக்கு பிரஜாவுரிமை ரீதியாக இழைக்கப்பட்ட அநீதிகளை இல்லாதொழிக்க கூடியதாக அமையும்.

இலங்கை இந்திய ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்தியப் பிரஜாவுரிமை யைப் பெற்றுக் கொள்வதற்கு பலவந்தப்படுத்தப்பட்டவர்கள் தமது முடிவை மாற்றி இலங்கைப் பிரஜாவுரிமைக்காக விண்ணப்பிக்கக்கூடிய தகுதியுடையவர்களாக்குதல் வேண்டும்.

**4. சமஷ்டி அரசு**

இலங்கை அரசானது பிரதேச அதிகார அலகுகளைக் கொண்ட சமஷ்டி அரசாக அமைதல் வேண்டும்

**5. தேசிய மொழிகள்**

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளும் தேசிய மொழிகளாக ஆக்கப்படுதல் வேண்டும். இந்த நடைமுறையானது தற்கால தேவைகளையும், கோரிக்கைகளையும், பூர்த்தி செய்யக்கூடிய மொழிக் கொள்கையை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒன்றாகும்.

மொழி நடைமுறைகளைப் பொறுத்தளவில் சிங்களமும், தமிழும் நிர்வாக மொழியாகவும், நீதித்துறை மொழியாகவும் அமையும். ஒவ்வொரு பிராந்திய அதிகார அலகும் அதனுடைய ஆவணங்களையும், பதிவுகளையும் வைத்துக்கொள்வதற்கான மொழியை அந்தந்த பிராந்திய மக்களுடைய மொழி விகிதாசாரத்தின் அடிப்படையில் தெரிவு செய்து கொள்ளும். எவ்வாறெனினும், தேசிய, பிராந்திய நிர்வாகங்கள் ஒரு பிரஜை தான் விரும்பும் ஒரு தேசிய மொழியில் கருமமாற்றுவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.

**6. சமப்பாட்டு, மட்டுப்பாட்டு நடைமுறைகள்.**

பாராளுமன்றம், நிறைவேற்றுத்துறை, நீதித்துறை ஆகிய மூன்றுக்குமிடையில் சமப்பாட்டையும், மட்டுப்பாட்டையும் உறுதி செய்யக்கூடிய நடைமுறைகள் மிகத் தெளிவாக வரையறை செய்யப்படுதல் வேண்டும்.

இலங்கையின் சமூகக் கூறுகளையும், அவற்றின் யாப்பியல் ஏற்பாடுகள் தொடர்பான கடந்த கால அனுபவங்களையும் நோக்கும் போது இலங்கையில் ஜனநாயக நடைமுறைகளை வலுப்படுத்துவதற்கு நிறைவேற்றுத் துறைக்கும், பாராளுமன்ற த்திற்கும், நீதித்துறைக்கும் இடையில் உறுதியான மட்டுப்பாட்டு, சமப்பாட்டு நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவது அவசியமென நாம் நம்புகின்றோம்.

**7. சட்டவாக்கல் அதிகாரம்**

மக்களின் சட்டவாக்கல் அதிகாரம் பரவலாக்கப்பட்டு, அவை மத்தியில் ஈரவை கொண்ட பாராளுமன்றத்தின் மூலமாகவும், சமஷ்டி அலகுகளில் செயற்படுகின்ற சட்டவாக்க சபைகளின் மூலமாகவும் பிர[illegible]கிக்கப்படுதல் வேண்டும்.

வெவ்வேறு இனங்களினதும், பிராந்தியங்களினதும் பிரதிநிதிகள் தேசிய கொள்கைகளை நிர்ணயிப்பது தொடர்பாக முறையான பங்களிப்பை மேற்கொள்வதை நோக்கமாகக் கொண்டு மத்தியில் ஈரவை கொண்ட பாராளுமன்ற அமைப்பு முறை உருவாக்கப்படல் வேண்டும். இனக்குழுக்களின் முறையான அதிகாரப் பங்கீட்டின் தேவையை, பிராந்திய ரீதியாக அதிகாரங்களைப் பங்கிடுவதன் மூலம் மட்டும் பூர்த்தி செய்து கொள்ள முடியாது. எனவே, பிரதிநிதிகள் சபையானது அதன் அரைவாசி உறுப்பினர்கள் ஒவ்வொரு சமஷ்டி பிரதேசத்திற்குமான பட்டியலிலிருந்து விகிதாசார பிரதிநிதித்துவ அடிப்படையிலும், எஞ்சிய அரைவாசிப்பேர் தேர்தல் தொகுதிகளில் நேரடிப்போட்டியின் மூலமும் தெரிவு செய்யப்படுவார்கள்.

செனட் (மேல்) சபையானது சமஷ்டி அலகுகளிலிருந்து சமமான பிரதிநிதிகளையும் செனட் சபையில் பிரதிநிதித்துவம் செய்யாத குழுக்களின் பிரதிநிதிகளாக ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையுடையவர்களை நியமனப் பிரதிநிதிகளாகவும் கொண்டதாக அமையும். இவ்விரு சபைகளும், ஏறக்குறைய சமமான அதிகாரங்களைக் கொண்டதாக இருக்கும். எல்லாச் சட்ட மூலங்களும் இந்த இரு சபைகளினாலும் நிறைவேற்றப்படுதல் வேண்டும். அரசியல் யாப்பிற்கான திருத்தப் பிரேரணைகள் யாவும் இவ்விரு சபைகளினாலும் மூன்றின் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படுதல் வேண்டும். பிராந்திய சபைக்கு கூடுதலான அதிகாரங்களை வழங்குவது தொடர்பான பிரேரணைகள், அவை எல்லா பிராந்திய சபைகளினாலும் அங்கீகாரம் பெற்றவைகளாயிருக்குமிடத்து பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் நிறைவேற்றப்படுவதன் மூலம் ஏற்றுக்கொள்ளப்படல் வேண்டும். பின்குறிப்பிட்டுள்ளபடி வெவ்வேறாக்கப்பட்டுள்ள செயற்பாடுகளின் அடிப்படையில் ஒரு சிறிய பாராளுமன்றம் அமைக்கப்படுவது முன்மொழியப்படுகின்றது. இந்தப் பிரதிநிதிகள் சபையானது 120 அங்கத்தினர்களைக் கொண்டதாகவும், அவற்றில் அரைவாசி அங்கத்தவர்கள் தேர்தல் தொகுதி வாரியாக நடைபெறுகின்ற பெரும் பான்மையான வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களாகவும், மிகுதி அரைவாசி அங்கத்தினர்கள் பிராந்திய சமஷ்டி அலகுகளுக்காகத் தயாரிக்கப்பட்டு முன் வைக்கப்படும் அங்கத்தினர் பட்டியலின் மூலமாக விகிதாசாரப் பிரதிநிதித்துவ அடிப்படையில் தெரிவு செய்யப்படுபவர்களாகவும் இருப்பர்.

செனட் சபையானது 60 அங்கத்தினர்களை கொண்டதாகவும், அவற்றில் 48 அங்கத்தினர் ஒரு பிராந்திய சபைக்கு எட்டு உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் ஆறு பிராந்திய சபைகளுக்குமான சமமான பிரதிநிதித்துவ அடிப்படையிலும், எஞ்சிய உறுப்பினர்கள் சமஷ்டி சபையின் சிபாரிசின் அடிப்படையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுபவர்களாகவும் இருப்பர்.

பாராளுமன்ற உறுப்பினர்கள் சுதந்திரமாகவும், தத்தமது மனச்சாட்சியின் அடிப்படையிலும் நடந்து கொள்வது உறுதிசெய்யப்படுதல் வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களை கட்சியின் அங்கத்துவத்திலிருந்தும், பாராளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்தும் விலக்கும் அதிகாரங்கள் இல்லாதொழிக்கப்படல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் ஆசனங்கள் காலியாகும் பொழுதும், செனட் சபையின் பிராந்தியரீதியாக தெரிவு செய்யப்பட்ட ஆசனங்கள் காலியாகும் பொழுதும் அவற்றிற்குத் தேவையான அங்கத்தவர்களை இடைத்தேர்தல்கள் மூலம் தெரிவு செய்தல் வேண்டும்.

பாராளுமன்றமானது அதனுடைய நடைமுறைகளுக்குத் தேவையான விதிமுறைகளை வரையறை செய்து கொள்வதற்கும், உள்ளக ஒழுக்கக்கட்டுப்பாடுகளை தீர்மானிப்பதற்கும் அதிகாரம் கொண்டதாக இருக்கும்.

பாராளுமன்றத்திற்கான விசேட வரப்பிரசாதங்களை மீறுதல் என்ற ஒரு கோட்பாடு இருத்தல் ஆகாது. நாட்டினுடைய சாதாரண சட்டத்திற்கும், நீதித்துறைக்கும் உட்பட்ட அடிப்படையில் பாராளுமன்ற உறுப்பினர்களின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்கின்ற உரிமை எல்லாப் பிரஜைகளுக்கும் இருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு சமஷ்டி அலகும் ஒவ்வொரு பிராந்திய சபையைக் கொண்டதாகவும் அப்பிராந்திய சபைகளானது அவற்றினுடைய அதிகார வரம்புகளுக்குட்பட்ட அடிப்[illegible]யில் சட்டவாக்கல் அதிகாரங்களைக் கொண்டவை[illegible]வும் செயற்படும். இந்த சட்டவாக்கல் அதிகாரமானது பிரதேச அலகுகளுக்கு அதிகாரங்கள் பங்கிடப்பட்ட விடயங்களுடன் தொடர்புடையனவாக அமையும்.

பிராந்திய சபைகளுக்கான அங்கத்தினர்களில் அரைவாசி அங்கத்தினர்கள் தேர்தல் தொகுதிகள் வாரியாக நடைபெறுகின்ற தேர்தலின் நேரடிப் போட்டியின் மூலம் பெறப்படுகின்ற பெரும்பான்மை வாக்குகளினடிப்படையில் தெரிவு செய்யப்படுவர். எஞ்சிய அரைவாசிப்பேர் அப்பிராந்திய அங்கத்தினர் பட்டியலில் இருந்து பெறப்பட்ட வாக்குகளின் விகிதாசார அடிப்படையில் தெரிவு செய்யப்படுவர்.

**8. தேர்தல் நடைமுறைகள்மாற்றியமைக்கப்படல் வேண்டும்**

தேர்தலில் மக்களின் (வாக்காளர்களின்) அபிப்பிராயங்கள் சரியான முறையில் பிரதிபலிக்கக்கூடியதான விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை தொடர்ந்தும் இருத்தல் வேண்டும். ஆனால், தற்போதைய அதன் நடைமுறையில் காணப்படுகின்ற குறைபாடுகளான வெட்டுப்புள்ளிகளை நிர்ணயித்தல், போனஸ் ஆசனங்களை வழங்குதல் போன்றவை நீக்கப்பட்டு விகிதாசாரப் பிரதிநிதித்துவம் பூரணமாகப் பிரதிபலிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

மக்கள் பிரதிநிதிகள் சபையின் அரைவாசி அங்கத்தினர்களும், ஒவ்வொரு பிராந்திய சபைகளுக்குமான அரைவாசி அங்கத்தினர்களும் தேர்தல் தொகுதி அடிப்படையில் நடைபெறும் நேரடிப் போட்டியின் மூலம் தெரிவு செய்யப்படக்கூடிய விதத்தில் தேர்தல் தொகுதிகள் மீள் நிர்ணயம் செய்யப்படுதல் வேண்டும் எனவும் இவ்வாறு தேர்தல் தொகுதிகள் மீள் நிர்ணயம் செய்யப்படும் போது சிறுபான்மையினர் போதியளவு பிரதிநிதித்துவம் பெறுவதை உறுதி செய்யக்கூடிய வகையில் தேர்தல் தொகுதிகள் நிர்ணயம் செய்யப்படுதல் வேண்டும் எனவும் நாம் கூறுகின்றோம்.

**9. சட்ட மூலங்களுக்கான நீதித்துறை விமர்சனம்.**

பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுகின்ற எல்லா சட்ட மூலங்களும் பிராந்திய சபைகளினால் நிறைவேற்றப்படுகின்ற சட்ட மூலங்களும் சட்ட விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.

தற்பொழுது மசோதாக்களானது சட்டமூலமாக பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படுவதற்கு முன்பு மட்டும் தான் நீதித்துறையின் சட்ட விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படுகின்றது. தேசிய தேவைகளையும், அவசர தேவைகளையும் அடிப்படையாகக் கொண்டு 24 மணித்தியாலங்களுக்கு இடைப்பட்ட கால எல்லைக்குள் மசோதாக்களுக்கான உயர்நீதி மன்றத்தின் அங்கீகாரங்களைப் பெற்றுக் கொண்ட பதவியிலிருந்த அரசாங்கங்கள், பல்வேறு விதத்திலும் அந்த மசோதாக்களின் வரம்புகளை மீறி செயற்பட்டுள்ளன.

சட்ட மூலங்களில் காணப்படும் பல்வேறு குறைபாடுகள் அச்சட்ட மூலங்களை நடைமுறைப்படுத்தும் போது தான் வெளிப்படுகின்றன என்பது பல சந்தர்ப்பங்களில் நிரூபிக்கப்பட்ட விடயம் ஆகும். எனவே, எல்லா சட்ட மூலங்களும் எக்கால கட்டத்திலும் நீதித்துறையின் சட்ட விமர்சனங்களுக்கு உட்படுத்தப்படக் கூடியதாக அமைய வேண்டும் என நாம் முன்மொழிகின்றோம்.

**10. நிறைவேற்று அதிகாரமும் அதன் சமப்பாட்டு, மட்டுப்பாட்டு நடைமுறைகளும் (Check and Balance procedures)**

நிறைவேற்று அதிகாரமானது அதற்கான மட்டுப்பாட்டு, சமப்பாட்டு நடைமுறைகளுடன் அரசாங்கத்தின் ஏனைய அங்கங்களுடன் தொடர்புபடுத்தப்படுவது பற்றிய பிரச்சினையை பல்வேறு வழிமுறைகளில் அணுக முடியும்.

ஜனாதிபதி என்னும் பிரதான அரசியல் பிரமுகர் முழுநாட்டிலுமுள்ள எல்லா மக்களினதும் வாக்குகளினால் தெரிவு செய்யப்படுவதை இந்நாட்டினுடைய இன விகிதாசார அடிப்படையில் நோக்கும் போது அவர் சிறுபான்மையினரின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படும் என்பதே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிமுறை சார்பாக முன்வைக்கப்படுகின்ற பலமான தர்க்கமாக அமைகின்றது. ஜனாதிபதித் தேர்தல் நடைமுறையில் சிறுபான்மையினர் அரசியல் ரீதியாக முக்கியத்துவம் பெறுவதோடு அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்கான சந்தர்ப்பங்களும் கிடைக்கின்றன. எவ்வாறெனினும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையானது ஒரு தனிநபரின் கைகளுக்குள் அதிகாரங்களை ஒரு முகப்படுத்துவதோடு, அளவுக்கதிகமான அதிகாரங்கள் ஒன்று சேரவும் வழிவகுக்கின்றது. ஜனாதிபதியின் தேர்தல் தொகுதியாக முழுநாடும் இருப்பதன் காரணமாக வெற்றி பெறும் ஜனாதிபதியின் அதிகாரம் பாராளுமன்ற அதிகாரங்களை விட மேலானது என்றோ அல்லது தனக்கு அத்தகைய பொறுப்புக்கள் உண்டு என்றோ எண்ணக்கூடிய நிலைமைகள் ஏற்படலாம். இது எமது அரசியல் அமைப்பில் காணப்படுகின்ற அதிகாரவாதப் போக்குகளை வலுப்படுத்த வழிவகுக்கும். மேலும், இந்நிலைமைகள் எதிரணி அரசியல் சக்திகளைப் பலமிழக்கச் செய்யக்கூடிய நிலைமையையும் ஏற்படுத்தும். ஜனாதிபதியின் செயற்பாடுகள் பற்றிய கேள்விகளையோ, விளக்கங்களையோ கேட்கக்கூடிய அதிகாரம் பாராளுமன்றத்திற்கும் இல்லை. ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டால் அவரின் பதவிக்காலம் முடியும் வரை அவரை பதவியிலிருந்து நீக்க முடியாத நிலைமையே பெரும்பாலும் நிலவுகின்றது. இந்த ஜனாதிபதி முறையின் குறைபாடுகள் 1978ம் ஆண்டு முதல் கிடைத்த அனுபவங்களின் மூலம் மிகத் தெளிவாகப் பிரதிபலிக்கின்றது.

தற்போதைய அரசியல் சூழ்நிலையில் மேலே குறிப்பிட்டுள்ள ஜனாதிபதி முறையின் சாதகமான அம்சங்களை அதன் நடைமுறைப் பிரச்சினைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும் போது அது மிகவும் பிரபல்யமானதாகத் தோன்றவில்லை. எனவே, அவை பாராளுமன்ற நிறைவேற்று அதிகார முறைக்குத் திரும்பிச் செல்லுதல் நல்லது என்றே நாங்கள் கருதுகிறோம். இந்தக் கட்டமைப்பில் நிறைவேற்றுத்துறையானது எப்பொழுதும் பாராளுமன்றத்தின் பொறுப்பிலும், பாராளுமன்றத்திற்குப் பொறுப்பாகவும் செயற்படும். நிறைவேற்று அதிகாரம் ஒரு குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டு மட்டுப்பாட்டு, சமப்பாட்டு நடைமுறைகள் விதிக்கப்படுவதனூடாக அதிகாரங்கள் ஒரு தனிநபரிடம் செறிவாவது தவிர்க்கப்படவும் வழிவகுக்கின்றது.

அதிகாரங்கள் பிரதம அமைச்சர், அமைச்சரவை, பிராந்திய அமைச்சர்கள் பொறுப்பில் விடப்படும். ஒரு சில முக்கியமான சந்தர்ப்பங்களைத் தவிர்ந்த சாதாரண நிலைமைகளில், ஜனாதிபதியும், பிராந்திய ஆளுநர்களும் அவ்வவ் அமைச்சரவையின் ஆலோசனையின் படி தமது நடவடிக்கைகளை மேற்கொள்வர். விசேட சந்தர்ப்பங்களின் போது நிறைவேற்று நடவடிக்கைகள் சமஷ்டிப் பேரவையினதோ அல்லது வேறு தகுதி பெற்ற நிறுவனத்தினதோ சிபாரிசின் அடிப்படையில் மேற்

# இலங்கைக்கான
# சமஷ்டி
# அரசியலமைப்பு

இலங்கையின் அரசியல் யாப்பை மீளமைக்க வேண
நோக்கில் இயங்கி வருகிற அரசியல் யாப்பு சீர்திருத்த இ
வரையப்பட்ட இலங்கைக்கான சமஷ்டி ஜனநாய
கட்டமைப்பின் சாராம்சத்தை இங்கு பிரசுரிக்கிறோம்.

"அரசியல் யாப்பினதும் ஜனநாயக விழு
முக்கியத்துவத்தை மக்களுக்கு விளங்கப்படுத்துவது
அரசியல் யாப்பில் நிலவி வரும் முரண்பாடுகளை
எடுத்துச் சொல்வது, இலங்கைக்கான ஒரு
அரசியலமைப்பின் அவசியம் என்பன பற்றிய பிரச்சார
மத்தியில் மேற்கொள்வது ஆகியனவே இந்த
குறிக்கோள்" என்று அமைப்பாளர் ச.பாலகிருஷ்ணன்
தென்னிலங்கையின் பல பாகங்களிலும் பரவலாக அ
சீர்திருத்த இயக்கம், கூட்டங்களையும், [illegible] கருத்தர
நடாத்தி வருகிறது.

இலங்கைக்கான இச் சமஷ்டி அரசியல் யாப்பின்
கீழ்வரும் கல்வியாளர்கள், மனித உரிமைவாதிகள், அ
என்போர் முன்மொழிகின்றனர்.

இவ்வரைபு பற்றிய கருத்துகள் விமர்சனங்களை
சரிநிகருக்கு எழுதலாம். மேலதிக விபரங்களுக்கு
முகவரியோடு தொடர்பு கொள்ளலாம்

அரசியல் யாப்பு சீர்தி
18/2.

திரு.சார்ல்ஸ் அபேசேகர ~ தலைவர், மேர்ஜ்
திரு.சீ.ஜே.அமரதுங்க ~ பத்திரிகையாளர்
திரு.கே.பீ.அரவிந்தன் ~ சட்டத்தரணி
பேராசிரியர் பேட்ரம் பஸ்தியாம்பிள்ளை ~ கொழும்பு பல்கலைக்கழகம்
திரு.எஸ்.பாலகிருஷ்ணன் ~ செயலாளர், மேர்ஜ்
திரு.சுனந்த தேசப்பிரிய ~ ஆசிரியர், யுக்திய
திரு.ரொகான் எதிரிசிங்க ~ சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு.மரியோ கோமஸ் ~ விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக்கழகம்
கலாநிதி எஸ்.எச்.ஹஸ்புல்லாஹ் ~ சிரேஷ்ட விரிவுரையாளர்
பேராசிரியர் பி.வி.ஜே.ஜயசேகர ~ சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனை பல்
கலாநிதி குமாரி ஜெயவர்த்தனா ~ ஆய்வாளர்
திரு.வி.கணபதிப்பிள்ளை ~ ஓய்வுபெற்ற சிவில் உத்தியோகத்தர்
திரு.ஷிரால் லக்திலக்க ~ சட்டத்தரணி
திரு.சுமனசிறி லியனகே ~ சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனை பல்கலைச்
திரு.ராம் மாணிக்கலிங்கம் ~ ஆய்வாளர்
திரு.ஏ.எம்.மாகன் மாகர் ~ பத்திரிகையாளர்
திரு.ஜயரத்ன மாலியகொட ~ தொழிற்சங்கவாதி
வி.முத்துகுமாரசுவாமி ~ சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனை பல்கலைக்க
திரு.ஏ.எம்.நவரத்ன பண்டார ~ சிரேஷ்ட விரிவுரையாளர், பேராதனை பல்
திரு.எம்.ஏ.நுஃமான் ~ சிரேஷ்ட விரிவுரையாளர் ~பேராதனை பல்கலைக்கழ
திரு.ஜெகான் பெரேரா ~ சமூக சேவையாளர்
திரு.ஸ்ரீநாத் பெரேரா ~ சட்டத்தரணி
கலாநிதி.ரொகான் லக்ஷ்மண் பியதாச ~ சிரேஷ்ட விரிவுரையாளர்
திரு.எஸ்.ஜீ.புஞ்சிஹேவா ~ சட்டத்தரணி, எழுத்தாளர்
திரு.ரட்னவேல் ~ சட்டத்தரணி
திரு.ஏய்ன்ஸ்லி சமரஜீவ ~ சட்டத்தரணி
கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து ~ சிரேஷ்ட விரிவுரையாளர் ~ கொழு
திரு.என்.செல்வகுமார் ~ சிரேஷ்ட விரிவுரையாளர் கொழும்பு பல்கலைக்கழ
திரு.எம்.வை.எம்.சித்திக் ~ பணிப்பாளர், இணைந்த பல்கலைக்கழகம்
கலாநிதி அம்பலவாணர் சிவராஜா ~ சிரேஷ்ட விரிவுரையாளர் பேராதனை
திரு.சுகதபால டி சில்வா ~ நாடகக் கலைஞர், எழுத்தாளர்
திரு.வி.ரி.தமிழ்மாறன் ~ சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழ
கலாநிதி தீபிகா உடகம ~ சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்க
கலாநிதி ஜயதேவ உயங்கொட ~ சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்
திரு.ஜே.சீ.வெலியமுன ~ சட்டத்தரணி
கலாநிதி சுனில் விஜேசிறிவர்தன ~ எழுத்தாளர், இலக்கியவாதி
திரு.ஜாவிட் ஏ யூசுப் ~ சட்டத்தரணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காள்ளப்படும். இப்படியாக வரையறை செய்யப்பட்ட அதிகாரங்களைக் கொண்ட ஒரு ஜனாதிபதியாக இரு க்கும் போது அவர் பாராளுமன்றத்தின் இரு சபை ளினதும் அங்கத்தினர்களையும் பிராந்திய அலகுகளின் அங்கத்தினர்களையும் கொண்ட ஒரு தேர்தல் கூட்டவை ன்றின் மூலமாக தெரிவு செய்யப்படுவார்.

**1. அரச நிர்வாக சேவையானது சுதந்திரமானதும், அரசியல் மயப்படுத்தப்படாமலும் இருத்தல் வேண்டும்.**

அரச நிர்வாக சேவையானது நிறைவேற்றுத்துறை யினதும், பாராளுமன்றங்களினதும் தலையீடுகளில் இருந்து விடுவிக்கப்படுதல் வேண்டும். இச்சேவையைக் கட்டுப்படுத்தும் பொறுப்பானது ஒரு சுதந்திரமான ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறெனினும், அரசசேவை அதிகாரியின் தவறான செயற்பாட்டின் காரணமாகப் பாதிப்பிற்குள்ளாகும் எந்தவொரு பிரஜைக்கும் நிர்வாகத்துறை அல்லது நீதித் துறை மட்டத்தில் நிவாரணம் பெற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்புக்கள் வலுப்படுத்தப்படல் வேண்டும்.

**2. நீதித்துறையானது பாராளுமன்றங்களினதும், நிறைவேற்றுத்துறையினதும் கட்டுப்பாடுகளில் இருந்து சுதந்திரமாக்கப்படுவது யாப்புரீதியான உத்தரவாதத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

நீதித்துறை நிர்வாகத்திற்கு தேவையான நிறுவன ங்களாக தேசியமட்டத்தில்;

சிவில் மற்றும் குற்றவியல் சட்ட விவகாரங்கள் தொடர்பான மேன் முறையீடு களை ஏற்று ஆராய்கின்ற சட்ட அதிகாரமும், யாப்பில் அதிகாரமும், யாப்பியல் விவகாரங்கள் தொடர்பான சட்ட அதிகாரமும் கொண்ட தாக உயர் நீதிமன்றமும்,

பிராந்திய மேல் நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் தொட ர்பான மேன் முறையீடுகளை ஏற்று ஆராய்கின்ற சட்ட அதிகாரம் கொண்டதாக மேன் முறையீட்டு நீதிமன்றமும் அமையும்.

பிராந்திய மட்டத்தில்;

பிராந்தியத்திற்கு உட்பட்ட எல்லா நீதிமன்றங் களினதும் விவகாரங்கள் தொடர்பாகவும் அடிப்படை உரிமைகள், மொழி உரிமைகள் போன்ற சட்ட விவகார ங்கள் தொடர்பாகவும் மேன் முறையீடுகளை ஏற்று ஆராய்வதற்கும், சட்டங்களை சீரமைப்பதற்குமான சட்ட அதிகாரங்கள் கொண்டதாக பிராந்திய மேல் நீதிமன் றங்கள் அமையும்.

**3. மத்திய அரசுக்கும், பிராந்திய அலகுகளுக்கும் மிகவும் தெளிவாக வரையறை செய்யப்பட்ட சட்ட வாக்க, நிறைவேற்றுத்துறை, வருவாய்த்துறை அதிகாரங்கள் இருத்தல் வேண்டும்.**

மத்திய அரசுக்கும் பிராந்திய அதிகார அலகுகளு க்கும் பொறுப்பளிக்கப்படும் பணிகள், பிராந்திய மட்ட த்தில் மிகவும் திறமையாகவும், சிறந்த முறையிலும் நிறைவேற்றக்கூடியது என்ற கொள்கையை அடிப்படை யாகக் கொண்டு ஆட்சி அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

தேசிய மட்டத்தில் நிறைவேற்றப்படல் வேண்டும் என்று கருதப்படும் பணிகள் மட்டுமே மத்திய அரசின் பொறுப்பில் விடப்படுதல் வேண்டும்.

மத்திய அரசுக்கும், பிராந்திய சபைகளுக்குமான பொறுப்புக்களைத் தீர்மானிக்கும் போது இரு பிரிவி ற்குமான விடயங்கள் தொடர்பான வெவ்வேறு பட்டிய ல்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும். இரு பிரிவும் தலை யீடு செய்யக்கூடிய பொதுவான பொறுப்புக்களுக்கான பட்டியல் இருத்தல் ஆகாது.

**4. மத்திய அரசுக்கும், பிராந்திய அலகுகளுக்கும் இடையில் சமமான முறையில் வளங்களும், வரு மானங்களும் பகிர்ந்தளிக்கக்கூடிய வகையில் நிறுவனரீதியான நடைமுறைகளை மேற் கொள்ளல் வேண்டும்.**

இத்தகைய நிர்வாக நடைமுறைகள் யாப்பில் உள்ள டக்கப்பட்டு உறுதி செய்யப்படுவதன் மூலம், இவை ஒரு பக்கச்சார்பாக மாற்றப்படுவது தடைசெய்யப்படுதல் வேண்டும். இத்தகைய நடைமுறைகள் நீண்டகால திட்ட ங்களைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுவையாகும்.

**5. மேலே குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை உறுதி செய்வதற்காகப் பின்வரும் நடைமுறைகள் மேற் கொள்ளப்படல் வேண்டும்.**

அ. ஜனாதிபதி, பிரதம அமைச்சர், பாராளுமன்றத்தின் இரு சபைகளினதும் எதிர்கட்சித் தலைவர்கள், மேலவை யின் முதல்வர், பிரதம நீதியரசர், பிராந்திய முதல மைச்சர்களினால் தெரிவு செய்யப்படும் இரு முதலமை ச்சர்கள் ஆகியோரைக் கொண்ட சமஷ்டிப் பேரவை ஒன்று அமைக்கப்படும். இப்பேரவையானது அரச நிறுவனங்களுக்கும், அரச அதிகார சபைகளுக்கும் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட வேண்டியவர்கள் பற்றிய பிரதான சிபார்சுகளை செய்யும். இப்பேரவை யானது கருத்தொற்றுமையின் அடிப்படையில் செயற் படுதல் வேண்டும்.

ஆ. எல்லாப் பிராந்திய முதலமைச்சர்களையும் அங்கத்த வர்களாகக் கொண்ட அதிகாரப் பங்கீட்டு ஆணைக் குழுவானது அதிகாரப் பங்கீட்டு தொடர்பாக எழுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் முயற்சியில் ஈடுபடும்.

இ. நிதித்துறை ஆணைக்குழுவில் மத்திய அரசும், பிராந் திய அமைச்சர்களும் பிரதிநிதித்துவம் செய்வர். இவ்வாணைக்குழுவானது தேசிய நிதியையும், வரு வாய்களையும் பிராந்தியங்களுக்குப் பகிர்ந்தளிப்பது, உள்நாட்டு, வெளிநாட்டு கடன்களையும், நன்கொடை களையும் பெற்றுக்கொள்வது போன்ற விடயங்களைத் தீர்மானித்தல், வருவாய்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பான பிராந்திய அரசுகளின் பிரேரணைகளைப் பரிசீலனை செய்தல் போன்ற விடயங்களில் ஈடுபடும்.

ஈ. சமஷ்டிப் பேரவையின் சிபாரிசின் அடிப்படையில் ஜனாதிபதியினால் நியமனம் செய்யப்படும் ஐந்து அங்கத்தவர்களைக் கொண்டதாக அரசசேவை ஆணைக்குழு இயங்கும். மத்திய அரசின் அரச அதிகா ரிகளை நியமனம் செய்தல், இடமாற்றுதல், சேவையி லிருந்து நீக்குதல், ஒழுக்கக் கட்டுப்பாடுகளை விதித் தல் போன்ற கடமைகளுக்குப் பொறுப்பாக இவ் வாணைக்குழு இருக்கும்.

உ. நீதிச்சேவை ஆணைக்குழுவானது சமஷ்டிப் பேரவை யின் சிபாரிசின் அடிப்படையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படும். இந்த நீதித்துறைச் சேவை ஆணைக் குழுவானது நீதித்துறை அதிகாரிகளினது நியமனம், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடுகள் போன்ற விடய ங்களுக்குப் பொறுப்பாக இருக்கும்.

ஊ. பிராந்திய அதிகார அலகுகளினதும், தேர்தல் தொகுதி களினதும் எல்லைகளை வரையறை செய்யும் தேர்தல் தொகுதி நிர்ணய ஆணைக்குழு ஒன்று ஏற்படுத்த ப்படல் வேண்டும்.

எ. பிராந்திய சபைகளும் அங்கத்துவம் பெறக்கூடிய வகையிலான தேசிய சுற்றுச் சூழல் அதிகார சபை ஒன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டும்.

ஏ. மத்திய அரசினதும், பிராந்திய சபைகளினதும் பிரதிநிதி த்துவங்களுடனான தேசிய முதலீட்டுச் சபை ஒன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டும். இச்சபையானது வெளிநாட்டு முதலீடுகளை கிரமமாக ஒழுங்குபடுத்து வதற்கும், அவ்வகையான முதலீடுகள் பிராந்தியங் களுக்கு சமமாக விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்குமான பொறுப்புக்களைக் கொண்டதாக அமையும்.

**அதிகாரப் பங்கீட்டுக்கான கட்டமைப்பு**

சமஷ்டி அரசியல் கட்டமைப்பு தொடர்பாக கவனி க்கப்பட வேண்டிய மேலும் இரண்டு விடயங்கள் இருக்கி ன்றன. ஒன்று அதிகார அலகுகள், மற்றது பங்கிடப்பட வேண்டிய அதிகாரம்.

**அதிகார அலகு**

இலங்கைக்கான பிராந்திய அதிகார அலகுகளைத் தீர்மானிக்கும் போது பின்வருவனவற்றில் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்டவைகளையோ கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

அ. பிராந்திய அலகுகள் அவற்றுக்கு ஒப்படைக்கப்பட வுள்ள அதிகரித்த பொறுப்புகளையும், அதிகாரங்க ளையும் ஏற்றுக் கொண்டு முறையாக செயற்படக் கூடியதான பரப்பளவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புக்களை சிறந்த முறை யில் நிர்வகிப்ப தற்காக ஒவ்வொரு பிராந்தியமும் புவியியல் ரீதியில் தொடர்புபட்டவையாக அமைதல் வேண்டும்.

இ. ஒவ்வொரு பிராந்தியமும் மக்கள் தொகை, மொழி, கலாசாரம் தொடர்பான விடயங்களில் பெரும்பாலும் ஒரே வகையினரைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

ஈ. பகிர்ந்தளிக்கப்பட்ட பொறுப்புக்களான பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு பற்றிய துறைகள் பயனு ள்ளதாக அமையும் விதத்தில் பிராந்திய அலகுகள் நிர்ணயம் செய்யப்படல் வேண்டும்.

உ. ஒவ்வொரு பிராந்தியமும் பொருளாதாரத் தன்னி றைவை அடைவதற்கான வாய்ப்புகள் உள்ளவை களாக அமைதல் வேண்டும்.

அமைக்கப்பட வேண்டிய பிராந்தியங்களின் எண் ணிக்கைகளையோ அல்லது பிராந்திய எல்லை களையோ நாம் குறிப்பாக முன்மொழியவில்லை. இந்த முக்கியத்துவமுடைய விடயமானது முறையாகக் கலந்து ரையாடப்பட வேண்டிய தொன்று என்பதோடு சமாதான நடைமுறையில் ஒரு அங்கமாகவும் கொள்ளல் வேண டும். எவ்வாறெனினும் எமது ஆவணத்தில் 6 பிராந்திய அலகுகள் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் மேற்கூறப்பட்டுள்ள அடிப்படையில் ஜனநாயக அதிகாரப் பங்கீடும், பிராந்திய அபிவிருத்தியும், இன ஐக்கியமும் நிலைநாட்டப்படுவதற்கு பின்வரும் அடிப்படையில் இலங்கை 6 பிராந்திய அலகுகளாகப் பிரிக்கப்படுவது சாதகமானதாகும் என நாம் கருதுகி றோம்.

1. மேற்குப் பிராந்தியம்: இது பொதுவாக கொழும்பு, களுத்துறை, கம்பஹா, கேகாலை, புத்தளம் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமையும்.
2. மத்திய பிராந்தியம் : இது பொதுவாக கண்டி, நுவரெலியா, மாத்தளை, குருணாகலை, அநுராத புரம், பொலன்னறுவை ஆகிய மாவட்ட ங்களை உள்ளடக்கியதாக அமையும்.
3. ஊவாப் பிராந்தியம் : இது பொதுவாக இரத்தினபுரி, பதுளை, மொனராகலை ஆகிய மாவட்டங்களையும், அம்பாறை மாவட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளட க்கியதாக அமையும்.
4. தெற்குப் பிராந்தியம் : இது காலி மாத்தறை, அம்பா ந்தோட்டை ஆகிய மாவட்டங்களையும், அம்பாறை மாவட்டத்தின் ஒரு பகுதியையும் உள்ளடக்கியதாக அமையும்.
5. வட -கிழக்குப் பிராந்தியம்: இது கிளிநொச்சி, யாழ்ப் பாணம், மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோ ணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக அமையும்.
6. கிழக்குப் பிராந்தியம் : அம்பாறை மாவட்டத்தை உள்ளடக்கியதாக அமையும்.


மேலே கூறப்பட்டுள்ள விடயங்களைக் கவனத்தில் கொண்டும், ஏற்றுக்கொள்ளப்படும் அரசியல் முடிவுகளை நடைமுறைப்படுத்தும் தேவைகளை மனதில் கொண்டும் பிராந்திய அதிகார அலகுகளைத் தீர்மானி க்கும் பொறுப்பு ஒரு எல்லை நிர்ணய ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும். புதிய பிராந்தியங்களை நிர்ணயம் செய்யும் போது தற்போதைய நடைமுறையில் இருக்கின்ற மாகாண, மாவட்ட எல்லைகளை தேவைகளு க்கேற்ற வகையில் மாற்றி அமைக்கலாம்.

**அதிகாரப் பங்கீட்டின் அளவு**

பின்வரும் துறைகளின் அடிப்படையில் மத்திய அரசுக்கும் பிராந்திய அலகுகளுக்கும் இடையில் அதிகாரங்களும் பொறுப்புக்களும் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும் என முன்மொழியப்படுகின்றது.

மத்திய அரசின் அதிகாரங்கள்

1. பாதுகாப்பும், தேசிய பந்தோபஸ்தும்
2. தேசிய பொலிஸ்
3. வெளிவிவகாரம்
4. நீதித்துறை நிர்வாகம்
5. கடல்நீர் எல்லையும், வானவெளியும்
6. குடியேற்றம், குடியகல்வு
7. சுங்கம்
8. நாணயம், வெளிநாட்டு நாணய மாற்றம், வெளிநாட்டு உதவி
9. பங்குச் சந்தையும், பங்கு மாற்றமும்
10. தேசிய வருமான வரி
11. தேசிய அரச சேவை
12. தேசிய வானொலி, தேசிய தொலைக்காட்சி சேவை
13. தேசிய போக்குவரத்து
14. தபால், தொலைத்தொடர்பு
15. தேசிய பல்கலைக் கழகங்கள்



16. தேசிய சுவடிகள்
17. அணுசக்தி
18. கனிப்பொருளும், சுரங்கங்களும்
19. போதைப் பொருட்களும், மருந்து வகைகளும்
20. குடிசனக் கணக்கெடுப்பு
21. அறிவியல் சார் சொத்து
22. வர்த்தக ஏகபோகங்களும், கட்டுப்பாடுகளும்
23. தேசிய, பிராந்திய தேர்தல்கள்
24. பிராந்தியங்களுக்கிடைப்பட்ட ஆறுகளும், நீர்ப்பாச னங்களும்.

பின்வரும் நடவடிக்கைகளும், பொறுப்புக்களும் மத்திய அரசிடம் ஒப்படை க்கப்பட்ட போதிலும் அவற் றைப் பிராந்திய நிர்வாகங்களின் ஆலோசனையின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

1. தேசிய துறைமுகங்களாக தீர்மானிக்கப்பட்டுள்ள பிரதான துறைமுகங்களின் நிர்வாகங்கள், அத்துறை முகங்கள் அமைந்துள்ள பிராந்திய சபைகளினதும் தேசிய அரசினதும் சமமான பிரதிநிதிகள் அடங்கிய அதிகாரசபை ஒன்றினால் நிர்வகிக்கப்படல் வேண்டும். இவ்வதிகாரசபைகள் அத் துறைமுகங்க ளின் நிர்வாகத்திற்கும், அபிவிருத்திக்கும் கட்டுப் பாட்டிற்கும் பொறுப்பாக இருக்கும். இத் துறைமுக ங்களினால் பெறப்படும் வருவாய்கள், நிதித்துறை ஆணைக் குழுவின் தீர்ப்பிற்கிணங்க மத்திய அரசி ற்கும், அவ்வப் பிராந்திய அரசுகளுக்குமிடையில் பகிர்ந்தளிக்கப்படல் வேண்டும்.
2. பிராந்திய சபைகளும் பிரதிநிதித்துவம் செய்யக்கூடிய வகையில் அமைக்கப்படும் தேசிய சுற்றுச் சூழல் அதிகார சபையின் சிபாரிசின் அடிப்படையில் சுற்றுச் சூழல் பாதுகாப்பு நடைமுறைகள் மேற்கொள்ள ப்படல் வேண்டும். இவ்வதிகார சபையானது சுற்றுச் சூழல் பாதுகாப்பினை வலுப்படுத்துவதற்கான கொள் கைகளை நிர்ணயம் செய்யும். தேசிய பிராந்திய நிர்வாகங்கள் சுற்றுச் சூழல் தொடர்பான நடவடி க்கைகளில் இக் கொள்கைகளுக்கு அனுகூலமாக நடந்து கொள்ளல் வேண்டும்.
3. தொல்பொருளியல் பிரதேசங்கள்.

பிராந்தியங்களுக்கான அதிகாரங்கள்

பின்வரும் துறைகள் தொடர்பான அதிகாரங்களும், பொறுப்புக்களும் பிராந்தியங்களுக்கு பகிர்ந்தளி க்கப்படும்.

1. பிராந்தியங்களுக்கான திட்டமிடல்
2. பிராந்தியங்களுக்கான வெளிநாட்டு உதவிகள்
3. பிராந்தியத்திற்குட்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள்
4. பிராந்திய பொலிஸ் சேவை
5. பிராந்திய பாதைகளும், நெடுஞ்சாலைகளும்
6. பிராந்திய நீரோடைகள்
7. பிராந்தியப் போக்குவரத்து
8. பிராந்திய வானொலி, தொலைக்காட்சி சேவை
9. கல்வி, உயர்கல்வி
10. வீடமைப்பு
11. சமூக சேவைகள், புனர்வாழ்வு
12. சுகாதார சேவைகள்
13. தொழிலாளர் விவகாரம்
14. விவசாயம்
15. நீர்ப்பாசனம்
16. மீன்பிடிப்பு
17. பிராந்திய வர்த்தகம்
18. பிராந்திய அரச சேவை
19. உள்ளூராட்சி
20. மத்திய அரசுக்கான அதிகாரப் பட்டியலில் குறிப்பிடாத ஏனைய விடயங்கள்

பின்வரும் விடயங்கள் தொடர்பான அதிகாரங் களும் பொறுப்புகளும் பிராந்திய சபைகளின் பொறு ப்பில் விடப்பட்டாலும், அவை மத்திய அரசின் ஆலோச னையுடன் நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும்.

1. சமஷ்டி சபையினதும், தேசிய சுற்றுச் சூழல் அதிகார சபையினதும் ஊடாக மத்திய அரசைப் பிரதிநிதி த்துவம் செய்யும் இருவரையும், பிராந்திய முதலமை ச்சரினால் நியமிக்கப்படும் மூவரையும் பிரதிநிதி களாகக் கொண்டதாகப் பிராந்திய காணி ஆணைக் குழுக்கள் ஏற்படுத்தப்படும். இக் காணி ஆணைக் குழுவானது ஒவ்வொரு பிராந்தியத்திற்கும் உட்பட்ட பிரதேசத்திற்குள் காணிப்பங்கீடுகளை நிர்ணயித்தல், காணி அபிவிருத்திக் கொள்கைகளை உருவாக்குதல் ஆகிய துறைகளுக்குப் பொறுப்பாக இயங்கும்.
2. தேசிய முதலீட்டுச் சபையின் ஆலோசனையுடன் கைத்தொழில் துறை செயற்படல் வேண்டும்.
3. துறைமுகங்களும், இறங்கு துறைகளும்
4. சுற்றுச்சூழல் பாதுகாப்பு

சட்டமும் ஒழுங்கும்

சட்டம், ஒழுங்கு பற்றிய பிரச்சினையானது அதிகா ரப் பங்கீடு தொடர்பான விவாதத்தின் ஒரு புரையோடிப் போன விடயமாகும். எனவே, இவ்விடயம் தொடர்பான நடைமுறைகள் எவ்வகையில் கையாளப்படல் வேண் டும் என்பதை சில விளக்கங்களுடன் குறிப்பிடப்ப ட்டுள்ளது.

1. பொலிஸ்மா அதிபரைத்தலைமையாகக்கொண்ட ஒரு பொலிஸ் படை அமையும். இது தேசிய பிரிவாக அதற்குத் தேவையான விசேட அலகுகளுடனும்பிராந் திய மட்டத்தில் ஒவ்வொரு பிராந்திய பிரிவு களையும் கொண்டதாக இரு பிரிவுகளாகச் செயற்படும்.
2. பொலிஸ்மா அதிபரும், பிராந்தியத்துக்கான பொலிஸ்மா அதிபர் களையும், சமஷ்டிச்சபை, அரச சேவை ஆணைக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகளை யும் கொண்ட தேசிய பொலிஸ் ஆணைக்குழு அமைக் கப்படும்.

இவ்வாணைக்குழு பின்வரும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக இயங்கும்:

...... தேசிய பொலிஸ் பிரிவிற்கான ஆள் சேகரிப்பு, பதவி உயர்வுகள், இடமாற்றங்கள், ஒழுக்க க்கட்டுப்பாடு.

........ எல்லாப் பிரிவுகளுக்குமான சம்பள விதிமுறை களை அபிவிருத்தி செய்தல்.

........ எல்லாப் பிரிவுகளுக்குமான ஆட்சேகரிப்பு, பதவி உயர்வு ஆகியவற்றிற்கான தராதரங்களை நிர்ணயித்தல்.

........ எல்லாப் பிரிவுகளுக்கும் தேவையான விதி முறைகளை நிர்ணயித்தல்.

3. பிராந்திய மட்டத்தில் பொலிஸ் ஆணைக்குழுக்கள் ஏற்படுத்தப்படும். இவற்றில் மத்திய அரசினதும், பிராந்தியங்களினதும் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர். இப்பிராந்திய பொலிஸ் ஆணைக்குழுவானது அவ் வப் பிராந்தியங்களுக்குட்பட்ட பிராந்திய பொலிஸ் மா அதிபர் தவிர்ந்த மற்றைய எல்லா உத்தியோகத்தர் களினதும் ஆட்சேர்ப்பு, இடமாற்றம், கட்டுப்பாடு போன்ற விடயங்களுக்குப் பொறுப்பாக செயற்படும். பிராந்திய பொலிஸ் மா அதிபர் தேசிய பொலிஸ் பிரிவிலிருந்து நியமிக்கப்படுவார்.
4. தேசியபொலிஸ்பிரிவு பின்வரும் விடயங்கள் தொட ர்பான விசாரணைகளுக்குப் பொறுப்பாக இயங்கும்.

.......... அரசுக்கும், தேசிய பந்தோபஸ்திற்கும் பாதகமான விடயங்கள்

......ஆயுதப் படையினர் தொடர்பான விடயங்கள்.

....... தேசிய, பிராந்திய தேர்தல் தொடர்பான விடய ங்கள்.

....... நாணயம், பணம், முத்திரைகள் தொடர்பான விடயங்கள்.

....... ஜனாதிபதி, பிரதம அமைச்சர், பாராளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பிடப்பட்ட உயர் அதிகாரிகள் ஆகியோருக்கு எதிரான விடயங்கள்.

........ அரச சொத்துக்களுக்கு எதிரான விடயங்கள்.

....... மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்பு க்கள் தொடர்பான விடயங்கள்.

..... சர்வதேச குற்றங்கள் தொடர்பான விடயங்கள்.

5. பிராந்திய நீதித்துறைக்கு உட்பட்ட ஏனைய எல்லா விடயங்கள் தொடர்பாக விசாரணை செய்யும் பொறு ப்புக்கள் பிராந்திய பொலிஸ் பிரிவினருடையதாகும்.

## தேசியவாதம்: தொடரும் விவாதம்-10

# சுட்ட தேசியமா? சுடாத தேசியமா?

சிவசேகரம்

தேசியம் பற்றிய விவாதம் இலங்கையில் மட்டுமன்றிப் புலம்பெயர்ந்த தமிழர் நடத்தும் ஏடுகளிலும் சில காலமாக நடைபெறுகிறது. விவாதத்தின் முனைப்பு ஏட்டுக்கு ஏடு வேறுபட்டு இருந்தது வியப்புக்குரியதல்ல. தேசியத்தை வரலாற்றுக் கண்ணோட்டத்தில் நோக்காமல் ஒரு குறிப்பிட்ட அரசியல் சமுதாய நெருக்கடியை வைத்து ஆராய்வதன் ஆபத்துக்களை இவ்விவாதங்களிற் சில புலப்படுத்தின. 'தேசியமா, ஃபாஸிஸமா' என்ற விதமான விவாதம், இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பற்றவை என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டு சில காலமாக நடந்தது. இவ்விவாதத்தின் நோக்கம் குறிப்பிட்ட ஒரு இயக்கத்தை ஃபாஸிஸ சக்தி என்று அடையாளம்காட்டி அதை நிராகரிக்கும் தேவை சார்ந்ததாகவே தென்பட்டது. தேசியசக்தி என்பது முற்போக்கானது என்றும் ஃபாஸிஸம் எவ்வாறோ அதனின்று வேறுபட்ட பிற்போக்குச்சக்தி என்றும் காட்டும் இம்முயற்சி, தேசியவாதத்தினின்றே ஃபாஸிஸம் எழுகிறது என்ற வரலாற்று உண்மையை மூடிக்கட்ட முற்பட்டது.

இன்னொருபுறம், ''தேசியவாதமா, வர்க்கப் போராட்டமா' என்ற விதமாக விவாதத்தை வளர்க்கும் முயற்சிகள் தொடர்கின்றன. ''வர்க்கப் போராட்டம் என்ற கோட்பாட்டுக்கு இனி இடமில்லை, தேசியமே அடிப்படையானது'' என்ற விதமான வாதங்கள் மாக்ஸியத்தையும் மாக்ஸிய லெனினிஸ இயக்கங்களையும் தாக்கும் நோக்குடனேயே முன்வைக்கப்பட்டன. பெண்ணியத்தின் பேரால், மாக்ஸியம் பெண்ணுரிமைக்கு எதிரானது என்று பிரசாரம் செய்யும் சில மேட்டுக்குடி மாதரின் இலக்கும் இவ்வாறாகவே இருந்தது. இன்று, தலித்தியத்தின் பேரால், சாதி முரண்பாடுகளையே அடிப்படையானவையென வலியுறுத்த முனைவோருட்சிலர் வர்க்க முரண்பாடுகளை நிராகரிக்க முற்படுவதையும் நாம் காணலாம். இங்கெல்லாம், குறிப்பிட்ட ஒடுக்குமுறைகளை மட்டுமே அடையாளங்காணுகின்றவர்கள், அவற்றுக்கு அடிப்படையாக உள்ள சமுதாய அமைப்பையும் உற்பத்தி உறவுகளையும் இவற்றின் சர்வதேசப் பரிமாணத்தையும் முற்றாகவே தவற விடுகின்றனர். இது குறுகிய காலத்தில் அவர்கட்கு வசதியானது. ஆயினும், முடிவில் சமுதாய ஒடுக்குமுறைக்கு எதிரான பிரதான போராட்டத்தைப் பலவீனப்படுத்துவது.

தேசியவாதத்தை அழகுபடுத்தி அது தன்னளவிலேயே முற்போக்கான ஒன்று என்று காட்ட முனைவோர் உள்ளனர். இவர்களுள் ஒரு பகுதியினர், தேசியவாதத்தைத் தம் சுரண்டும் வர்க்க நலன்களுடன் நெருக்கமாகப் பிணைத்துள்ளவர்கள். அந்த நலன்களைப் பொறுத்தவரை தேசியவாதம் மிகவும் அவசியமானது எனினும் அவர்களால் எவ்வளவு தூரத்துக்குத் தேசிய நலன்களைப் பேண முடிகிறது என்பது கொஞ்சம் சிக்கலான விஷயம். அது இங்கு உடனடியாக முக்கியமானதல்ல. மறுபுறம், தேசிய இன ஒடுக்குதலின் விளைவாகத் தேசிய விடுதலையை ஆதரிக்கும் பலரிடையே தேசியம் பற்றியும், வர்க்க முரண்பாடுகட்கும் தேசியப் பிரச்சினைக்கும் உள்ள உறவு பற்றியும் சில தெளிவீனங்கள் உள்ளன. இடதுசாரிகளைத் தமிழ் இன விரோதிகளாகச் சித்திரித்து வந்துள்ள அரை நூற்றாண்டுக்கால அரசியல் வரலாற்றின் சுமைகளில் இதுவும் ஒன்று. இதன் பின்னணியிலே தேசியவாதம் தொடர்பான சில கேள்விகளை நாம் நம்மையே கேட்டுக்கொள்வதும் தேசியவாதம் பற்றிய மாக்ஸிய நிலைப்பாடு எவ்வாறு அமையக் கூடும் என்று ஆராய்வதும் பயனுள்ளது.

தேசம் என்ற சுய அடையாளம் வரலாற்றில் மிக அண்மைக்காலத்தையது. முதலாளித்துவத்தின் வருகையை அடுத்தே சமகால ஐரோப்பாவில் தேசம், தேசிய அரசு என்ற கோட்பாடுகள் உருவாயின. தேசம் என்பதற்கான வரைவிலக்கணங்கள், குறிப்பான அரசியல் பிரச்சினைகளைச் சார்ந்தே எழுந்தன. சமகாலத்தேசிய அரசுகளும், அவை சார்ந்த தேசியக் கோட்பாடுகளும் உருவாகு முன் மக்கள் பல வேறு விதங்களில் தம்மை அடையாளங் கண்டனர். இனம், மொழி, மதம், பிரதேசம், சாதி, வம்சாவழி என்பன மட்டும் அல்லாமல் ஊர்களும் தொழில்களும் கூட மனித சமுதாயப் பிரிவுகளை அடையாளங் காட்டின. எந்த வேறுபாடு முதன்மை பெறுகிறது என்பது ஒவ்வொரு சமுதாயத்தினதும் குறிப்பான வரலாற்றுச் சூழலை ஒட்டியது. மதங்களின் பேரால் வேறுபாடுகளைச் கொண்ட சமூகங்களுள், மதங்களிடையிலான சுமுக உறவு இருந்துள்ளது. அவ்வாறே, பல மொழிகளும் பேசும் வேறுபட்ட சமூகப் பிரிவினர் ஒருங்கிணைந்த சமுதாயங்கள் உள்ளன. பல வகைகளிலும் ஒற்றுமையிருந்தும் இணைய முடியாதிருக்கும் சமுதாயங்கள் உள்ளன. லத்தீன் அமெரிக்காவில் தேசங்கள் எவ்வாறு உருவாயின என்பதை ஐரோப்பாவில் தேசங்கள் உருவான சூழ்நிலையுடன் ஒப்பிட்டால் தேசம் என்பதன் தெளிவீனமான தன்மையை நாம் காணலாம். ஆபிரிக்காவின் தேசங்கள் கொலனித்துவ எசமானர்கள் வரைந்த எல்லைகளால் உருவானவை. ஒரே மொழியையும், மதத்தையும் பகிரும் அரபு நாடுகள், கொலனித்துவத்தால் கூறுபோடப்பட்டு உருவானவை. அதேவேளை, குர்திஷ் தேசிய இனம் தனக்கென ஒரு அரசு இல்லாதவாறு மூன்று நாடுகளிடையே கூறு போடப்பட்டது.

தேசியப் பிரச்சினை சுய அடையாளம் தொடர்பான பிரச்சினை என்பது உண்மை. இந்தச் சுய அடையாளம் எவ்வளவு தூரம் இயல்பானது, எவ்வளவு தூரம் மக்களது நலன் தொடர்பானது என்பது ஒரு புறமிருக்க, தேசியம் உலகெங்கும் ஒரு முக்கியமான அரசியல் பிரச்சினையாக உள்ளது என்பதை நாம் அறிவோம். பிரச்சினையின் தன்மையும் கூர்மையும் வரலாற்றுக் காரணங்களால் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இன ஒடுக்கலும், சுய அடையாளத்தின் மறுப்பும் மிகவும் சிக்கலான ஒரு இன, மொழி , பண்பாட்டுச் சேர்க்கையான இந்தியத் துணைக்கண்டத்தின் மீது இருந்த நூற்றாண்டுக்கால கொலனி ஆதிக்கம், குறுகிய கால அளவிலேனும், இந்தியர் என்ற சுய அடையாளத்தை அங்கு முதன்மைப்படுத்தியது. அரசியல் விழிப்புடைய இந்தியர்கள், இந்தியாவை அன்று ஒரு தேசமாகவே கண்டனர். இவ்வாறான உணர்வு அவர்களது இனவாரி, மொழிவாரியான சுய அடையாளங்களை நிராகரித்து எழவில்லை.

1947ல், பாரிய பண்பாட்டு வேறுபாடுகளின் அடிப்படையில் இல்லாமல், இந்தியா மத அடிப்படையிலேயே இரண்டு நாடுகளாகப் பிரிந்ததற்குக் காரணம், மத அடிப்படையிலான ஒடுக்கல் பற்றிய முஸ்லீம் உயர் வகுப்பினரது அச்சமே. இதைப் பிரித்தானிய ஆட்சி பயன்படுத்தி விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்த முயன்றதும் உண்மையே. திராவிடர் என்ற சுய அடையாளம் கொலனி ஆட்சியில் மாநிலங்கள் அமைக்கப்பட்டிருந்த முறையால் ஊக்குவிக்கப்பட்டது. பார்ப்பனரது ஆதிக்கத்திற்கு எதிரான பிற சாதித் தென்னிந்தியர் (முக்கியமாகத் தமிழர்) கொண்டிருந்த பகை உணர்வு, ஆரிய துவேஷமானது. இந்தத் திராவிடத் தேசியத்தால் வெகுகாலம் தாக்குப்பிடிக்க முடியாமைக்கு, மொழிவாரித் தேசியத்தின் எழுச்சி ஒரு முக்கிய காரணம். இன்று இந்தியாவின் ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்காகத் தம் மண்ணையும் வாழ்க்கை முறையையும் பறிகொடுத்து வரும் பழங்குடிச் சமூகங்கள், தமது இருப்பை உறுதிப்படுத்தப் போர்க்கோலம் பூண்டுள்ளன. இந்தியாவின் பல்வேறு இனங்களிடையே சாதி, மதம், மொழி, பிராந்தியம் என்பனவற்றின் அடிப்படையிலான உணர்வுகளும் தமது தனித்துவத்தை வலியுறுத்தும் தேவையும் எழுந்துள்ளமைக்கான காரணங்களுள் பொருளாதாரக் காரணங்களும், வர்க்க நலன்களும் முக்கியமானவை. இந்தி - இந்து தேசியவாதத்தின் பின்னால் நிற்கும் சக்திகள் சாதியத்தையும் பேணுகின்றன. அவர்களது எதிரி ஏகாதிபத்தியம் அல்ல. (இலங்கையில் உள்ள பௌத்த - சிங்கள இனவெறியர்களான ஜாதிக சிந்தனய, ஹெல உருமய குழுவினர் போன்றோருக்கும் இது பொருந்தும்). இவர்கள் பிற சிறுபான்மையினரது சுய அடையாளத்தை மறுத்தும் பிற்படுத்தப்பட்ட மக்களைப் பிற்படுத்தப்பட்டோராகவே பேணுவதன் மூலமும் இந்தியாவின் பல்வேறு தேசிய இனங்கட்கும் இனப்பிரிவுகட்குமிடையே மோதல்களை ஊக்குவிக்கின்றார்கள். இந்து - முஸ்லீம் மோதலாயினும், சாதிப் பூசலாயினும், கன்னடர் - தமிழர் மோதலாயினும், அதற்குப் பின்னால் இருந்து இயங்கும் சக்திகள் நிச்சயமாக இடதுசாரிகளல்ல.

**சுயநிர்ணயக் கோட்பாடு தேசங்கட்கு மட்டுமே உரியது என முடங்கிவிடுகிற போது, பிற முக்கியமான சமுதாய ஒடுக்குமுறைகள் பற்றிய நமது கவனம் பிசகி விடுகிறது. தேசங்கட்குத் தம் இருப்பைப் பேண உள்ள உரிமை சகல இனப்பிரிவுகட்கும் இருக்க வேண்டிய ஒரு உரிமை. இது சுய அடையாளம் தொடர்பானது, வாழ்க்கை முறை தொடர்பானது, மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ள ஒவ்வொரு இனப்பிரிவுக்கும் உள்ள உரிமை தொடர்பானது. இது மனித சமத்துவத்தின் அடிப்படையில் அணுகப்பட வேண்டும். அந்தளவுக்குச், சுயநிர்ணயம் என்ற கோட்பாடு விரிவுபடுத்தப்பட வேண்டும்.**

ஈழத்தேசியம் பற்றிப் பேசுகிற போது, சங்கிலியன் காலத்துடன் ஒரு வரலாற்றுத் தொடர்ச்சியைக் காணும் பழக்கம் இன்னமும் இருக்கிறது. இன்று நமக்கு முன்னால் உள்ள தமிழ்த் தேசியம் சிங்களப் பேரினவாதத்தின் விளைவாக உருவானது எனலாம். இதன் தோற்றத்திற்குத் தமிழ் அதிகார வர்க்கத்தின் நலன்களுக்கும் சிங்கள அதிகார வர்க்கத்திற்கும் இடையில் இருந்து வந்த முரண்பாடுகளின் பங்களிப்பு முக்கியமானது. ஆயினும், தமிழர் என்ற சுய அடையாளம், அண்மை வரை ஒரு தேசிய சுய அடையாளமாக இருக்கவில்லை. தமிழ் மக்களுக்குரிய பல்வேறு சுய அடையாளங்கள் நெடுங்காலமாக இருந்து வந்தவை தான். யாழ்ப்பாண வேளாள மேட்டுக்குடிகள் தமது நலன்களைத் தமிழர் என்ற சுய அடையாளத்தின் பேரிற் பேணி வந்த போது, அது தன்னளவிலேயே தேசியத் தன்மை பெறவில்லை. அதிகார வர்க்கங்களிடையிலான போட்டி சிங்களப் பேரினவாத அரசியல் மூலம், இன ஒடுக்கலாக விருத்திபெற்றதன் மூலமே, தமிழர் என்ற சுய அடையாளம் தனக்கான தேசியத் தன்மையைப் பெற்றது. இன்னமும் மலையகத் தமிழரையும் முஸ்லீம்களையும் இந்தத் தேசத்திற்கு பொருத்துவது தொடர்பாக உள்ள குழப்பங்களும் முரண்பாடுகளும் தேசம் என்பது இயல்பான ஒரு மனித இருப்பல்ல என்பதையே நமக்கு வலியுறுத்துகிறது. தேசம் என்பது வரைவிலக்கணங்களாலன்றி வரலாற்று நிர்ப்பந்தங்களாலேயே உருவாகிற ஒன்று என்பதை நாம் மீண்டும் மீண்டும் காண்கிறோம்.

நல்ல தேசியம் - கூடாத தேசியம், முற்போக்கான தேசியம் - பிற்போக்கான தேசியம் என்றவாறான கருத்துக்கள், உண்மையில் தேசியத்தின் முரண்பாடான கூறுகளை அடையாளங் காட்டுபனவேயொழிய தேசியத்தை வகைப்படுத்தும் வேறுபாடுகளல்ல. ஏனெனில் தேசியம், ஒருபுறம் அடக்குமுறைக்கான கருவியாகப் பிற தேசங்களின் மீது ஆதிக்கம் செலுத்திச் சிறுபான்மை இனப் பிரிவுகளின் சுய அடையாளத்தை மறுக்கும் பண்பையுடையது. மறுபுறம், தன்னை ஒடுக்குகிறசக்திகளை எதிர்த்துப் போரிடும் விடுதலை வேட்கையுடையது. ஒரு தேசியவாதி ஏககாலத்தில் இரு பண்புகளையும் வெளிப்படுத்தக் கூடும் என்பதை நாம் (சிங்களப் பேரினவாதத்தின்) இலங்கைத் தேசியத்திலும், தமிழ் ஈழத் தேசியத்திலும் பன்முறை கண்டுள்ளோம். இவ்வாறான பண்பு தேசியத்திற்கு மட்டுமே உரியதல்ல. எந்தச் சுய அடையாளமும் மற்றைய மனித சமுதாயப் பிரிவுகளினின்று ஒரு சமுதாயப் பிரிவைத் தனிமைப்படுத்தி அதன் நலன்களைப் பிறரது நலன்களினின்றும் பிரித்து முதன்மைப்படுத்திக் காணும் போது, சமுதாயப் பிரிவுகளிடையிலான முரண்பாடுகளின் பகைமையான பண்பு மேலோங்க இடமுண்டு. சகல மனிதரதும் அடிப்படையான தேவைகள் நிறைவேற்றப்படாத வரை, தனிமனிதர் என்ற அளவிலும் சமுதாயப் பிரிவுகள் என்ற அளவிலும் ஒவ்வொரு மட்டத்திலும் மனித உறவு மனித சமத்துவத்தின் அடிப்படையில் அமையாத வரை, மனிதர் தமது இருப்பை மட்டுமன்றிச் சுய அடையாளத்தையும் பேணும் உரிமை அச்சுறுத்தப்படாத நிலைமை உருவாகும் வரை, மனிதரிடையே உள்ள வேறுபாடுகளில் பகைமையான பண்புகள் எழுச்சி பெறுவது தவிர்க்க இயலாதது.

மனித சமத்துவம் என்பது எல்லா மனிதரையும் ஒரே அச்சில் வார்க்கும் செயலால் ஆவதல்ல. அவ்வாறு கொள்வது மாக்ஸியமுமல்ல. மாக்ஸியத்தின் இலக்குச் சமத்துவமான சமுதாயம், மனிதரை மனிதர் எவ்வகையிலும் ஒடுக்கிச் சுரண்டாத சமுதாயம், ஆற்றலுக்கு ஏற்ற உழைப்பும் தேவைக்கேற்ற நுகர்வும் என்றவாறான சமதர்ம சமுதாயம். ஆயினும் அது நம் முன் இல்லை. அதற்காக உழைப்பவர்கள், தம் கண்முன் உள்ள நிசமான உலகைப் புறக்கணிக்க இயலாது. யதார்த்த உலகை அறியாமல் அதை மாற்ற இயலாது. எனவே ஒரு மாக்ஸியவாதி தேசியமோ, மதமோ, சாதிகளோ, ஆணாதிக்கமோ இல்லை என்று பாசாங்கு செய்ய முடியாது. புரட்சி வந்துவிட்டால் இவை எல்லாமே போய்விடும் என்று கூறி நிஷ்டையில் அமர்ந்து விட முடியாது. சுரண்டல் சமுதாயத்தின் பிரதான முரண்பாடு உற்பத்தி உறவுகள் தொடர்பானது தான். அது சமுதாயத்தை வர்க்கங்களாகப் பிளவுபடுத்துவதும் அந்த முரண்பாட்டை அடிப்படையாய்க் கொண்டே பிற முரண்பாடுகள் எழுச்சி பெறுகின்றன என்பதும் உண்மை தான். ஆயினும் நம் புரட்சி வரும் வரை சும்மா கிடவுங்கள் என்று ஒடுக்கப்பட்ட மக்களுக்குப் போதிக்கிற ஒருவர், நிச்சயமாக நல்ல மாக்ஸியவாதியல்ல.

பகுத்தறிவுக் கண்ணோட்டத்தினும், மனித சமத்துவம் பற்றிய சமகால நோக்கிலும் பார்க்கும் போது, மதம் பிற்போக்கானது தான். ஆனால் தனிமனிதரது மத நம்பிக்கைகளை மறுப்பது மாக்ஸியத்துக்கு அவசியமில்லை. தனிமனிதரது மத நம்பிக்கைக்கும் வழிபாட்டுக்குமான சுதந்திரம் எந்த ஒரு தனி மனிதரையும் மாக்ஸியவாதியாக்காமற் போகலாம். ஆயினும், மத அடிப்படையிலான ஒடுக்கு முறைக்கு எதிரான ஒரு கோட்பாடு என்றளவில், அது மனித விடுதலைக்கான கோட்பாடாகிறது. அது ஈற்றில் மாக்ஸியத்தின் சமதர்ம இலக்குக்கு உதவுகிறது. இது போலவே சாதி ஒடுக்குமுறை, பெண்ணடிமை, தேசிய ஒடுக்குமுறை போன்ற சகல ஒடுக்குதல்கட்கும் எதிரான போராட்டங்களிலும் ஒரு மாக்ஸஇயவாதியின் நிலைப்பாடு போராட்டத்திற்கு ஆதரவாகவே அமைய முடியும். இக்கண்ணோட்டத்திலேயே சுய நிர்ணயக் கோட்பாடு மாக்ஸியவாதிகட்கு இசைவான ஒன்றாகிறது.

எந்தவொரு தேசிய விடுதலையும் பாட்டாளி வர்க்கப் புரட்சிக்குப் பயன் தருமா, தராதா என்று கணிப்பிட்டுத்தான் மாக்ஸியவாதிகள் சுயநிர்ணயம் பற்றி முடிவெடுக்க வேண்டிய தேவை இல்லை. ஏனெனில் நியாயத்துக்கான போராட்டங்கள், ஈற்றில் ஒன்றையொன்று ஆதரிப்பன. அதைவிட முக்கியமாக சுயநிர்ணயத்திற்கு நிபந்தனையற்ற ஆதரவு என்பது தேசியவாதத்தையும் எண்ணிலடங்காத தேசங்களின் தோற்றத்தையும் பிரிவினையையும் ஊக்குவிக்கும் ஒரு காரியமல்ல. எனவே, தேசங்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய மாக்ஸிய நிலைப்பாடு ஏதாவது வர்க்கப் போராட்ட வரவு செலவுக் கணக்கில்லாமல் ஒடுக்குமுறைக்கு உட்பட்ட ஒரு மக்களது இருப்பிற்கும் சுய அடையாளத்திற்குமான உரிமையாகக் காணப்படுவது பொருத்தமானது.

மாக்ஸியவாதிகள் தேசங்களிடையே ஒற்றுமையை விரும்புகின்றனர். தேசிய முரண்பாடுகள் பகைமையின்றி தேச முரண்பாடுகளாக அமைவதை விரும்புகிறார்கள். பல தேசிய இனங்கள் இணைந்து வாழ்வதை அவர்கள் வரவேற்கிறார்கள். அந்தளவில் அவர்கள் நாடுகள் பிரிவதை விரும்பவில்லை. ஆயினும் இது பிரிந்து போகும் உரிமையை மறுப்பதாகிவிடாது, ஒடுக்கப்பட்ட ஒரு தேசமோ தேசிய இனமோ தனது விடுதலைக்குப் போராடுவதை நிராகரிப்பதாகிவிடாது. சுய நிர்ணயம் என்பது, தேசிய இனங்களிடையே சமத்துவமான அடிப்படையில் சுயவிருப்பின் மீதான இணைவை வலிவுபடுத்தும் ஒரு கருவியாகவே அவர்களால் காணப்படுகிறது. இன்னொரு மனிதனை ஒடுக்கும் ஒரு மனிதனும் இன்னொரு தேசத்தை ஒடுக்கும் ஒரு தேசமும் சுதந்திரமானவை அல்ல. சுய நிர்ணயம் மறுக்கப்படும் போது தேசிய ஒடுக்குமுறை ஏற்றுக்கொள்ளப்படுகிறது. மனிதரை மனிதர் ஒடுக்குவதை அங்கீகரிக்கும் கோட்பாடாக மாக்ஸியம் அமைய இயலாது.

சுய நிர்ணயம் என்பது தேசிய இனங்கள் தமது சுய அடையாளத்தையும் அந்த அடிப்படையில் தமது இருப்பையும் பேணும் உரிமை. ஒரு நாட்டின் பல்வேறு இனங்களிடையே சமத்துவம் உள்ள போது, சுய நிர்ணயம் பற்றிய கேள்வியே எழுவதில்லை. எப்போது ஒடுக்கல் தொடங்குகிறதோ அப்போது போராட்டம் தொடங்குகிறது. அதையொட்டியே சுயநிர்ணயம் பற்றிய பிரச்சினை எழுகிறது. மூன்றாமுலக நாடுகளைப் பிரித்துப் பிளவுபடுத்த ஏகாதிபத்தியம் விரும்புகிறது. தன் ஆதிக்கத்தின் கீழ் உள்ள

→ 19

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஸ்ரீ.மு.காங்கிரஸ்: மக்களில் சவாரி விடும் தலைமைத்துவம்!

ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்திற்கு மட்டும் உரித்துடையதா? இவ்வாறுதான் இன்று கேள்வி எழுப்ப வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் மட்டுமல்ல அதன் செயற்குழு உறுப்பினர்களின் செயற்பாடு கூட இன்று இவ்வாறுதான் அமைந்துள்ளது. முஸ்லீம் காங்கிரஸ் ஆனது முஸ்லீம்களின் விடுதலையை முன்னெடுத்துச் செல்லுமா? அல்லது அம்பாறை மாவட்ட தனவந்தர்களினதும் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களின் நெருங்கியவர்களினதும் 'பொருளாதாரத்தை' வளர்ச்சியடைச் செய்யும் ஒரு பொருளாதார மற்றும் சலுகைக் கட்சியாக முன்னேற்றமடையுமா என்ற கேள்விக்குறிகள் தற்போது ஏற்பட்டுவருகின்றன. எனவே தான் தற்போது திருமலை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் வட மாகாணத்திற்கும் இன்னும் மூன்று முஸ்லீம் காங்கிரஸை அமைக்க வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது!

ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அவர்கள் பாராட்டப்பட வேண்டியவர். தன்னுடைய இலட்சியத்திற்காக, தான் ஒரு எம்.பி. ஆக வருவதற்காக, முஸ்லீம் அரசியல் கட்சி ஒன்றை அமைத்து பேரினவாதக் கட்சிகளுக்கு தாரை வார்த்துக்கொடுத்து இன்று அமைச்சராகியுள்ளார். இது அமைச்சர் அஷ்ரஃப் அவர்களின் இலட்சியத்தை அடைவதற்கான ஒரு பெரிய யாத்திரை எனலாம். இந்த யாத்திரை அலரிமாளிகையுடன் சங்கமமாகியதுதான் பெரிதும் வேதனை தருவதாக உள்ளது.

இந்த நாட்டு முஸ்லீம்கள்ள பேரினவாதக் கட்சிகளில் இருந்த முஸ்லீம் தலைவர்கள் கறிவேப்பிலையை போல் பாவித்ததாக நீங்கள் கடும் கண்டனம் தெரிவித்தீர்கள். ஆனால் நீங்கள் அம்பாறை மாவட்டத்தில் குறிப்பாக கல்முனைப் பட்டினத்தின் அபிவிருத்திக்காக ஏனைய முஸ்லீம் பிரதேசங்களை பலிக்கடாவாகவும், காலில் போடுகின்ற சப்பாத்துக்களாகவும் பயன்படுத்துகின்றீர்கள். தேர்தல் காலங்களில் மட்டும் வாக்கு வேட்டையாடுவதற்காக இங்கு அப்பாவித்தனமான சாதுவான மான் கூட்டங்கள் காணப்படுவதால் அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஒரு பெரிய வேட்டையாடும் கூட்டத்தோடு விஜயம் செய்வீர்கள். இதுதான் அமைச்சர் அஷ்ரஃப் அவர்களே நீங்கள் பெற்று வந்த விடுதலை!

இன்று உங்களுடைய புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பல்துறை அமைச்சில் உங்களை சூழ்ந்து பிசாசுகளைப் போல் ஒட்டியிருப்பவர்கள் யார்? துறைமுக அதிகார சபையின் பிரதித்தலைவராக இருக்கும் சகோதரர் றபீக் அவர்கள் முஸ்லீம் காங்கிரஸுக்காக ஆற்றிய தொண்டுதான் என்ன? துறைமுக அதிகாரசபையில் ஊழியர்களுக்கான நலன் பேணும் பிரிவில் பிரதித்தலைவராக இருக்கின்ற ஆயுள்வேத வைத்தியர் உதுமா லெப்பை அவர்கள் எப்போது முஸ்லீம் காங்கிரஸில் சேர்ந்தவர்? இது போன்ற பெரிய பதவிகளை அலங்கரிப்பது உங்களுடைய அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த சகோதரர்களே தவிர, வேறுயாருமல்ல. உங்களுடைய அம்பாறை மாவட்டத்தின் வளர்ச்சியோடு எங்களின் மாவட்டங்களை தயவு செய்து ஒப்பிட்டுப் பாருங்கள். உங்களின் சுயநல அரசியல் தேவைகளுக்கும் அம்பாறை மாவட்டத்தின் அபிவிருத்திக்கும் ஏனைய வட கிழக்கு முஸ்லீம்கள் ஒரு போதும் அடிமையாக முடியாது.

உண்மையாக வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட எத்தனையோ மக்கள் வறுமையினால் வாடும் போது உங்களுடைய சகாக்கள் மட்டும் புனர்வாழ்வு பண முடிப்புக்களைப் பெற்று உல்லாச வாழ்க்கை நடாத்துவது எங்கள் இதயங்களில் ஆறாத காயங்களை ஏற்படுத்தியுள்ளது.


முஸ்லீம் காங்கிரஸ் இன்று ஒரு சில சுயநலவாதிகளின் இலட்சியங்களை அடைவதற்கான ஒரு கேடயமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. முஸ்லீம் சமூகத்திற்கு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் கட்சி அவசியமேயொழிய தடுமாற்றம் அடைகின்ற முஸ்லீம் காங்கிரஸ் போன்ற முஸ்லீம் அரசியல் கட்சியினால் முஸ்லீம் சமூகத்தின் விடுதலையைப் பெற முடியாது. மாறாக அம்பாறை மாவட்டத்தை மட்டும் வளர்த்தெடுக்க முடியும். முஸ்லீம் காங்கிரஸின் இவ்வாறான செயற்பாடுகள் எமக்கு அதிருப்தியையும், ஆழ்ந்த வேதனையையும் உண்டாக்குகின்றது. இதுவரையும் வடமாகாணத்தில் இருந்து அகதிகளான ஆயிரக்கணக்கான முஸ்லீம் அகதிகள் நூற்றுக்கணக்கான அகதிமுகாம்களில் இருந்து கொண்டு பெருமூச்சு விடுகின்றனர். இவர்களின் நிரந்தர வாழ்க்கைக்கு முஸ்லீம் காங்கிரஸ் எடுத்த நடவடிக்கை என்ன? புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு அம்பாறை மாவட்டத்திற்கு மட்டும் தரப்படவில்லை. அது ஒரு தேசிய அமைச்சாகும். தயவு செய்து உங்களின் வெறும் போலி வேஷங்களையும், அரசியல் சுத்திகரிப்புக்களையும் தடைசெய்து இந்த அகதிகளுக்காவது ஒரு நிம்மதியான வாழ்க்கையினை பெற்றுக் கொடுங்கள். உங்களின் தாங்க முடியாத இலட்சியங்களான ஒலிவில் துறைமுக வேலைகளை ஒரு புறம் வைத்துவிட்டு இந்த அகதிகளின் துன்பங்களை தீர்ப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுங்கள். இந்த முஸ்லீம் அகதிகளின் எதிர்கால பாதுகாப்பையும், அமைதியையும் உறுதிப்படுத்துங்கள். இதற்காகவேதான் உங்களின் வாக்கு வேட்டைகளுக்கு இந்த முஸ்லீம்கள் பலியானரேயொழிய உங்களின் சுயநல அரசியல் தேவைகளுக்கு அல்ல என்பதை ஞாபகம் செய்து கொள்ளுங்கள்.

எங்களுக்கு இன்று தேவை கல்முனையில் இருந்து கொழும்பு செல்வதற்கு நவீன வீதி (Super Rd) அல்ல, எங்களுடைய ஜீவனோபாயத் தொழிலான விவசாயத்தை மேற்கொள்வதற்கும், அதன் பொருட்டு எங்களுடைய வயல் வெளிகளுக்கு செல்வதற்குமான கிறவல் வீதியே போதுமானதாகும். எங்களுக்கு இன்று தேவை ஒலிவில் துறைமுகம் அல்ல, எங்கள் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்து கொள்வதற்கான சிறு மீன்படி வள்ளங்களாகும். ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸின் அம்பாறை மாவட்ட வேலைத்திட்ட இலட்சியமானது, ஏனைய மாவட்ட முஸ்லீம்களை அதிருப்தி நிலைக்கு உள்ளாக்குவதை தொடர்ந்து காணக்கூடியதாக உள்ளது. நாங்கள் முஸ்லீம் காங்கிரஸிடம் கேட்பது தொழிற்சாலைகளிலோ அல்லது வேறு கூட்டுத்தாபனங்களிலோ பணிப்பாளர் பதவிகளல்ல. எங்களுடைய கிராமம் நீரினால் முற்றாக அடித்துச் செல்லப்படப்பார்க்கின்றது. அதற்கு அணைக்கட்டு அமைப்பதையே வேண்டுகின்றோம். எங்களுடைய கிராமங்களை நீங்கள் இவ்வாறு காப்பாற்றினால்தான் உங்களுக்கு இலகுவாக வாக்குவேட்டையாட முடியும் என்பதை ஞாபகம் செய்து கொள்ள விரும்புகிறோம்.

அமைச்சர் அஷ்ரஃப் அவர்களே! உங்களால் நியமிக்கப்பட்ட எங்களுடைய பகுதித்தலைவர்களையும் உங்களால் முடிசூட்டப்பட்டவர்களையும் தேர்தல் முடிந்தவுடன் காண்பதற்கு மிக ஆசையாக இருக்கின்றது. தயவு செய்து அவர்களையாவது ஒரு நாகரீமான; பக்குவமான அரசியல்வாதியாக வளர்த்தெடுக்க உதவி செய்யுங்கள். அவர்களை தங்களுடைய சுயநலன்களில் இருந்து காப்பாற்றி இந்த சமூகத்தின் விடுதலைக்காய் உழைக்கும் அரசியல் ஞானிகளாக வளர்வதற்கு உதவி செய்யுங்கள். தயவு செய்து உங்களைப் போல் சமைத்துவிடாதீர்கள். பிரதேச செயலகங்களிலும், அரசாங்க காரியாலயங்களிலும் சென்று அரசியல் அதிகாரத்தை மறந்து நாகரீகமாக நடந்து கொள்வதற்கு கற்பித்துக்கொடுங்கள். ஏனெனில் முஸ்லீம் காங்கிரஸ் முஸ்லீம்கட்சி என்று நீங்கள் சொல்லும்போது மிக வேதனையாக உள்ளது.

அமைச்சர் அவர்களே! முஸ்லீம் காங்கிரஸ் ஒரு முஸ்லீம் கட்சியல்ல. அது அஷ்ரஃப் என்ற முஸ்லீம் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சியேயாகும். அதற்கு கூடுதலான பணத்தை கொடுப்பதன் மூலம் சானக அமரதுங்க, அசித பெரேரா போன்றோர் எம்.பி. ஆகவும் வரலாம். எங்கள் கிராமமும் ஒரு எம்.பி. பதவிக்காக மிகவும் ஆசைப்படுகின்றது. போட்டியிட்டு தோல்வியடைந்த வேட்பாளர்கள் தடுமாறுகின்றார்கள். எனவே அடுத்த தடவை மிகக்குறைந்த விலையில் ஒரு எம்.பி. பதவி தருவதற்கு உதவி செய்யுங்கள்.

**ஓட்டமாவடி நௌபல்**



# ஸ்ரீ.மு.காங்கிரஸ் மக்களைப் புரிந்து கொண்ட தலைமைத்துவம்!

கடந்த 1995 மே 18-31 ம் திகதி சரிநிகர் பத்திரிகையில் வெளிவந்த மூன்றாவது 'ஈழப்போர் ஆரம்பம்! முஸ்லீம் மக்களின் பாதுகாப்பு? என்ற கட்டுரை எனக்குள்ளும் உணர்வு ரீதியிலான தாக்கத்தை ஏற்படுத்தியது. கட்டுரையாளரான ஆர். எம். இம்தியாஸ் அவர்கள் தமது கருத்துக்களை நல்ல முறையில் தெளிவு படுத்தியிருந்தார். அவரால் கூறப்பட்டிருந்த சில யதார்த்த பூர்வமான நிலைப்பாடுகள் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கலாம். ஆனால்அதிகமாகவே ஒரு அரசியல் கட்சியின் தலைமைத்துவத்தை கொச்சைப்படுத்தி தனது தனிப்பட்ட விரோத தன்மையை பகிரங்கப்படுத்தியது வேதனைக்குரியதாகும். இம்தியாஸ் அவர்கள் பிறிதொரு அரசியல் கட்சியின் தீவிர ஆதரவாளராகவோ அல்லது ஸ்ரீ லங்கா முஸ்லீம் காங்கிரஸ் தலைமைத்துவத்துடன் கருத்து வேறுபாடுகள் கொண்டவராகவோ பொதுவாக அக்கட்டுரை மூலம் அடையாளம் காட்டப்படுகின்றார்.

இன்றைய சூழ்நிலை முற்றிலும் மாறுபட்டது. ஒவ்வொரு இனத்தின் சார்பாகவும் அதே இனத்திலிருந்து பாராளுமன்றத்திற்கென பிரதிநிதிகள் தேவைப்படுகின்றனர். அவர்கள் சமூகத்திற்காக குரல் கொடுத்தாலோ அல்லது பிரச்சினைகள் தோன்றும் போது முகம் கொடுத்தாலோ சில வேளைகளில் அது பிரச்சினைத் தீர்வுக்கோ அல்லது பிரச்சினைக் குறைவு அல்லது எதிர்காலத்தில் அவ்வாறான பிரச்சினைகள் தோன்றாமல் இருக்க வழி அமைக்கும். அதற்கும் முடியாவிட்டால் தனதினத்திற்கு இங்கு பிரச்சினைகள் இருக்கின்றது என்ற விடயத்தையாவது வெளி உலகிற்கு காண்பிப்பதற்கு உதவும். இதற்காகவே தனித்துவமானதொரு அரசியல் கட்சியின் தேவை அவசியமாகின்றது.

இம்தியாஸ் அவர்களின் கருத்தான 'வட-கிழக்கு முஸ்லீம் மக்கள் புலிகளின் குறுந்தேசியவாத நடவடிக்கைகளினால் மிக மோசமாகப் பாதிப்படைந்தார்கள் என்பது வெளிப்படையான அரசியல் சமாச்சாரம்' என்ற கருத்தானது ஏற்றுக் கொள்ளகூடியதே. மேலும் முஸ்லீம் குறுந்தேசியவாத பிரிவினர் காட்டுமிராண்டித்தனத்தை தமிழ் மக்கள் மீது பிரயோகித்ததும் சில பகுதிகளில் நடைபெற்றவைதான். ஆனால், அச்சம்பவங்களுக்குப் பின்னால் இன்றைய முஸ்லீம் காங்கிரஸ் சிரேஸ்ட உறுப்பினர்கள் வசதியாக அமர்ந்து கொண்டனர் என்ற கருத்தானது ஏற்புடையதாக இல்லை. பொதுவாக ஒரு இனம் ஒதுக்கப்படும் போது அல்லது பாதிப்பிற்குள்ளாக்கப்படும் போது அவ்வினத்தினருக்குள் விரக்தி நிலையேற்படுவது சகஜம். அப்போது கட்சி பேதங்கள் பெரிதுபடுத்தப்படுவதில்லை. எல்லோருமே இனத்திற்காக மட்டும் செயற்படுவார்கள் சிங்களப் பகுதிகளிலும் தமிழ்ப்பகுதிகளிலும் நடைபெற்ற காட்டுமிராண்டித் தனங்களுக்கு கட்சிகளைப் பெரிதாகக் குறை கூறியதுண்டா?

ஒரு பிரதேசத்தில் பெரும்பான்மையாக வாழக்கூடிய இனமானது அப்பிரதேச சிறுபான்மை இனத்தினரால் அல்லது அவ்வினத்தைச் சார்ந்த தீய சக்திகளினால் பாதிப்பிற்குள்ளாகும் போது ஏற்பட்ட விரக்தியின் விளைவே காரணமெனலாம். அன்று அரசபடைகளை வழிநடாத்தியவர்களும் ஆளுமை பெற்ற சுயநல போக்குக்கொண்ட அரசியல் வாதிகளும் இணைந்த சதி என்று கூட சில கருத்துக்கள் உலா வருகின்றதே? பொதுவாகப் பழி உணர்ச்சிகள் நல்லதல்ல. பாவம் சக்தியற்ற அப்பாவிகளைத்தண்டிப்பது எவ்வகையிலும் நியாயமல்ல என்ற கருத்தில் நாமும் உறுதியாகவே இருக்கின்றோம். அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்றதைப் போன்று மிக மோசமான சம்பவங்கள் ஏன் கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில் நடைபெறவில்லை? குறிப்பிட்ட பகுதியில் நிலவிய அரசியல் அதிகார நடைமுறையே காரணமாகும்.

இலங்கையை ஆட்சிபுரிந்த பெரிய கட்சிகளான ஐ.தே.க.மற்றும் ஸ்ரீ.ல.சு.க. என்பவற்றின் பொதுவான கொள்கை பெரும்பான்மையின மக்களின் நலனையே முதல் நோக்காகக் கொண்டது. இதன் விளைவு தொடராக முஸ்லீம் இனம் எல்லா வகையிலும் ஒதுக்கப்பட்ட நிலைமையில் பாதிக்கப்பட்ட அம்மக்களிலிருந்து உருவாகிய எழுச்சியின் தோற்றப்பாடே இன்று ஓங்கி வளர்ந்திருக்கும் ஸ்ரீலங்கா முஸ்லீம் காங்கிரஸ். இதன் துரித வளர்ச்சியென்பது வரலாற்றுக்கே வியப்பானது. எப்படிப் பொறுத்துக் கொள்வார்கள் சுயநல அரசியல்வாதிகள்? அம்பாறை மாவட்டத்தில் முஸ்லீம் அமைச்சர்கள் இருவரை கொண்ட ஐ.தே.க. எல்லாவகையிலும் முஸ்லீம் காங்கிரஸ் கட்சியின் வளர்ச்சியைத்தடுத்ததை ஆதாரத்துடன் தெளிவுபடுத்த முடியும். சிறுதுளி விசம்போல கடந்த உள்ளூராட்சி அதிகாரசபைகளுக்கான தேர்தலிலும் பாராளுமன்றப் பொதுத் தேர்தல்களிலும் காண்பித்த அரசியல் அடாவடித்தனங்களை எல்லாப் பத்திரிகைகளுமே குறிப்பிட்டிருந்தன.

தங்கள் கட்டுரையில் ஐ.தே.க. தலைமைகள் பற்றி ஒரே வரியிலும் முஸ்லீம் அரசியல் தலைமைகளின் பேரினவாத சார்பு நிலை தொடர்பாக மிகக்குறைவாகவும் குறிப்பிட்டு ஸ்ரீ.ல.மு.கா கட்சியினைப் பரவலாகச் சாடியிருந்ததில் தாங்கள் தவறுவிட்டுள்ளீர்கள்.

எமது திருகோணமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இப்போது முஸ்லீம்களுக்கு பிரச்சினைகள் ஏற்படுத்துவதை அரச அதிகாரிகளும் ஏனைய அரசியல் வாதிகளும் இராணுவத்தினரும் பொதுவாக விரும்புவதில்லை. காரணம் ஒரு சக்தியின் மகத்துவத்தை அவர்கள் உணர்ந்துள்ளமைதான் முஸ்லீம்களுக்கென உடன் குரல் கொடுக்கப் பாராளுமன்றத்தில் தயாராக இருக்கும் ஒன்பது உறுப்பினர்களும் தான் அந்தச் சக்தி. இன்று நாம் அரசியல் அநாதைகளல்ல என்பதை நமக்கெல்லாம் பெருமை தானே? இன்னும் பிரச்சினைகளின் தோற்றம் எப்படியாயினும் தமிழ் மக்களுக்குப் புலிகளினால் ஆபத்தோ அல்லது சிக்களோ ஏற்படப்போவதில்லை. பெரும்பான்மையின மக்களுக்கு ஸ்ரீலங்கா இராணுவத்தினர் எல்லாவகையான பாதுகாப்பையும் உதவிகளையும் தயங்காது வழங்குவார். முஸ்லீம் மக்களின் நிலை.. ....? காலங்காலமாக அரசாங்கத்தின் சார்பாக பாராளுமன்றக் கதிரைகளை அலங்கரித்தவர்கள் எமது இனத்திற்காக சாதித்தது தான் என்ன? அண்மைக்காலம் வரையிலும் சீரழிந்த எமது இனம் தற்போது ஓரளவாவது திருப்தியடையக் கூடியதாக இருக்கின்றதுதானே? இன்றைய ஆட்சியில் இணைந்திருக்கும் சிறுபான்மைக் கட்சியின் சார்பான அமைச்சர்களின் வேகமும் துரித நடவடிக்கைகளும் இனத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள பற்று தல்களும் இராணுவத்தினரிடமிருந்து பிரச்சினைகள் அவ்வளவாகத் தோன்றாது என்ற நிலையை உருவாக்கியுள்ளதை பரவலாகக் காணக்கூடியதாகவுள்ளது.

முஸ்லீம் காங்கிரஸ் தலைமை அரைவேக்காட்டுத்தன்மை கொண்டதோ அல்லது சந்தர்ப்பவாத நடவடிக்கைகளை மேற்கொள்வதோ அல்ல. தங்கள் கருத்து அத்தலைமையினைப் பூரணமாகப் புரிந்து கொள்ளவில்லை என்ற நிலைப்பாட்டையே தெளிவுபடுத்துகின்றது' முஸ்லீம் காங்கிரஸ் தலைமை சந்தர்ப்பவாத அரசியலை நடத்துவதாக இருந்திருந்தால் அன்று பாராளுமன்றப் பொதுத் தேர்தல் முடிவடைந்ததுடன் வானத்தில் ஹெலிகொப்டரில் பறந்து கொண்டிருக்கும் போது விடப்பட்ட அன்றைய ஐ.தே.க. ஜனாதிபதி அவர்களின் அழைப்பையேற்று தொடர்ந்து ஐ.தே.க. ஆட்சி நிலைத்திருக்க வழியமைத்து தானும் தன்னை உயர்ந்திருக்கலாம் ஏன் அப்படிச் செய்யவில்லை? வாக்குறுதி ஒப்பந்த நடைமுறைகள் என்பன புறக்கணிக்கப்பட்டு அரசியல் வேசித்தனம் புரியும் நிலைமை தனக்கோ அல்லது கட்சிக்கோ என்றும் ஏற்படக்கூடாது என்ற உறுதி. அது மக்களைப் புரிந்து கொண்ட தலைமைத்துவம்.

இலங்கை வரலாற்றிலேயே சிறுபான்மையினருக்கென உருவாக்கப்பட்ட ஏதாவதொரு அரசியல் கட்சி மிகக்குறுகிய காலத்தில் மக்கள் சக்தியினால் வளர்ச்சி பெற்றதுண்டா? 1988ம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலில் நான்கு உறுப்பினர்களையும் 1994ம் ஆண்டின் பாராளுமன்றத் தேர்தலில் ஒன்பது உறுப்பினர்களையும் (மூன்று அமைச்சர்கள், ஒரு குழுக்களின் பிரதித்தலைவர்) கொண்டது மட்டுமல்ல ஆட்சி செலுத்தக்கூடிய வல்லமை பெற்ற கட்சி தமது உறுப்பினர்களை மரத்தின் கீழ் வாக்களிக்க விடக்கூடியளவு (வடக்கு-கிழக்கு பிரதேசம்) தமது சக்தியை உயர்த்திக் காண்பித்த தலைமைத்துவமது. இன்று முஸ்லீம் காங்கிரஸ் தலைமை பகிரங்கமாகவே முஸ்லீம்களுக்கு எதிராக இந்த அரசாங்கம் ஆட்சி செலுத்துமானால் நாம் எமது அமைச்சர் பதவிகளைத்தூக்கியெறியத்தயங்கோம் எனச்சூழ் உரைப்பது வெறும்நடிப்பல்ல இது மக்கள் சக்திக்குக் கட்டுப்பட்ட சத்திய வாக்கு.

**எம்.ஏ.எம்.அனஸ்**

www.tamilarangam.net



# இந்தியத் தேசியத்தை கேள்விக்குள்ளாக்கும்

## எஸ்.வி.ராஜதுரையின் இந்து இந்தி இந்தியா

–சமுத்திரன்

எஸ்.வி.இராஜதுரையின் இந்து - இந்தி - இந்தியா (இஇஇ) பல காரணங்களால் முக்கியத்துவம் பெறும் நூலாகும். எனது அபிப்பிராயத்தில் இரண்டு காரணங்கள் அதி முக்கியம் பெறுகின்றன. ஒன்று, எனக்குத் தெரிந்தவரையில் சமகாலத்து இந்திய அரசியலைப் பலமாகப் பற்றியுள்ள இந்து அடிப்படைவாதம் (இந்துத்துவம்) அத்துடன் நெருங்கிய உறவுகொண்டிருக்கும் இந்திய தேசியவாதம், இவற்றின் ஆதிக்கத்தாலும் இவை நியாயப்பாடு வழங்கும் இந்திய அரசின் அதிகார மையப்படுத்தலாலும் பாதிக்கப்படும் அந்நாட்டில் வாழும் தேசிய இனங்களின், ஆதிவாசிகளின், தலித்துக்களின் உரிமைப்பிரச்சினைகள் போன்றவை பற்றி வரலாற்றுப்பார்வையில் விரிவாக ஆராய்ந்துள்ள முதலாவது தமிழ் நூல் இதுவே.




இரண்டு எஸ்.வி.ஆர். இன் இந்த நூல் தேசிய இனப்பிரச்சினை பற்றி, தேசியவாதம் எனும் கருத்தமைவு (ideology) பற்றி சமீப காலங்களில் மார்க்சிய வட்டாரங்களில் இடம்பெற்று வரும் புதிய விவாதங்கள் பற்றி வாசகர்கள் அறிந்து கொள்ள ஓரளவு உதவும். தேசியவாதம் பற்றிய புரிந்துணர்வின் போதாமை, அதைத்தெளிவாக வரலாற்று ரீதியில், கோட்பாட்டு ரீதியில் எதிர் கொள்ளாமை மார்க்சியத்தின் பெரும் குறைபாடு எனக்கூறலாம்.

இந்தக் குறைபாடு மார்க்சியத்தின் மாபெரும் வரலாற்று ரீதியான தோல்வி என டொம் நாய்ன் (Tom Nairn) பதினான்கு வருடங்களுக்கு முன் தனது நூலில் குறிப்பிட்டார். ஆயினும், இதற்கு முன்பும் இதைத் தொடர்ந்தும் தேசிய இனப்பிரச்சினை, தேசியவாதம், சுயநிர்ணயம் பற்றிய விவாதங்கள் மார்க்சிய சமூக விஞ்ஞான வட்டாரங்களிலும் அரசியல் இயக்கங்கள் மத்தியிலும் இடம்பெற்று வந்துள்ளன. இவற்றின் விளைவாக மார்க்ஸ் ஏங்கல்ஸ் கொண்டிருந்த கருத்துக்கள் முதல் லெனின், கௌட்ஸ்கி (Koutsky) லக்சம்பேர்க் (Luxemburg) போன்றோரின் கருத்துக்கள் வரை ஆழமான விமர்சனங்கள் வெளி வந்துள்ளன. இது மட்டுமன்றி இன்றைய விவாதங்கள் இதுவரை இடதுசாரிகள் மத்தியில் பிரபல்யம் பெற்றிராத ஆஸ்திரிய (Austrian) மாக்சிஸ்டான ஒட்டோ பௌர் (Otto Baur) போன்றோரின் அணுகுமுறை பற்றியும், பிரபல்யம் வாய்ந்த இத்தாலிய மார்க்சிய சிந்தனையாளரான கிராம்ஷி (Gramsci) யின் மேலாட்சி (Hegemony) கோட்பாட்டின் பயன்பாடுகள் பற்றியும் அறியத்தருகின்றன.

நடைமுறையில் சோவியத்யூனியன், கிழக்கு ஐரோப்பா, சீனா போன்ற நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் தேசிய இனப்பிரச்சினைகளைக் கையாண்ட விதங்கள் பற்றியும் இன்று நமக்கு முன்னர் மறைக்கப்பட்ட பல உண்மைகள் தெரியவந்துள்ளன. மொத்தத்தில் சர்வதேச ரீதியில் கொள்கை (Theory) நடைமுறை ஆகிய இரு மட்டங்களின் குறைபாடுகளிலும் தோல்விகளிலும் இருந்து மார்க்சியவாதிகள் படித்துப்பயன்பெற பல பாடங்கள் உள்ளன. இந்தப் பின்னணியில் நமது சமூகங்களை இன்று ஆட்டிப்படைக்கும் தேசிய இனப்பிரச்சினை பற்றிய நமது அனுபவங்களையும் ஆய்வுகளையும் மீள்மதிப்பீடு செய்ய வேண்டிய அவசியத்தையும் நாம் உணர்கிறோம்.

இஇஇ இந்தியாவின் சிக்கல் மிகு தேசிய இனப்பிரச்சினை பற்றிய ஒரு ஆய்வுக்கூடாக நம்மை உபகண்டத்தின் தேசியவாதங்கள் பற்றிய ஒரு விவாதத்தளத்திற்கு அழைத்துச் செல்கிறது.

தேசம் (தேசிய இனம்) தேசியவாதம் என்பனவற்றைக் கோட்பாட்டு ரீதியில் கிரகிக்க இராஜதுரை பயன்படுத்தும் அணுகுமுறைக்கு பெனடிக்ட் அன்டர்சன் (Benedick Anderson) என்பவர் "Imagined Communite" எனும் நூலில் முன்வைத்த கருத்துக்கள் பயன்பட்டுள்ளன.

நவீன தேசியவாதத்தின் உருவாக்கத்தையும் பரவலாக்கத்தையும் பற்றி அன்டர்சன் முன்வைத்திருந்த விளக்கம் தேசிய உணர்வு, தேசஅரசு ஆகியன பற்றி குறிப்பிட்ட வரலாற்று நிலைமைகளின் அடிப்படையில் விளங்கிக் கொள்ள உதவுகிறது. மேற்கு ஐரோப்பிய முதலாளித்துவத்தின் வரலாற்றுடன் இணைந்த தேசிய உருவாக்கத்திடமிருந்து வேறுபட்ட நிலைமைகளைக் கொண்ட காலனித்துவ நாடுகளின் தேசியவாதம் பற்றி ஆராயும் போது அங்குள்ள இருமொழி அறிவாளிகளின் Bilingual intellectuals) கருத்தமைவு ரீதியான பங்கு பற்றி அன்டர்சன் விளக்குகிறார். மேற்கத்தைய காலனித்துவ ஆட்சியாளரின் மொழியுடன் தமது தாய் மொழியிலும் பாண்டித்தியம் பெற்ற உயர் வர்க்க அறிவாளிகளே தேசியத்தின் கருத்துருவாக்கத்திற்கும் அதைத் தேசிய உணர்வாக பரவலாக்குவதற்கும் வேண்டிய முயற்சிகளை மேற்கொள்கின்றனர். ஒரு குறிப்பிட்ட சமூகக்குழுவினர்தாம் மற்றைய குழுவினரிடமிருந்து வேறுபட்டவர்களாய் தம்மை ஒரு விசேட கூட்டுணர்வின் அடிப்படையில் ஒரு இனமாக அடையாளப்படுத்தும் கற்பிதத்திற்கு (Imagining) ஊடாகவே தேசம் பிறக்கிறது. இந்தக் கற்பிதத்திற்கு அடிப்படையாக அமைவன அவர்களின் பிரதேசம், மொழி அம்மக்களுக்குரிய வரலாற்று ரீதியான நினைவுகள், அவர்களின் பாரம்பரிய இணைப்புப் பற்றிய கர்ணபரம்பரைக் கதைகள், பண்பாட்டு ஒருங்கிணைவும் அதன் அடையாளங்களும், ஒரு பொது எதிரிக்கு எதிராக வளரும் இன உணர்வு போன்றவையாகும். வர்க்கங்களையும் வேறு சில வேறுபாடுகளையும் ஊடறுத்துச் செல்லும் இந்த தேசிய உணர்வு பரவவும் வளரவும் நவீன கல்வி தொடர்பு சாதனங்கள் உதவுகின்றன. இந்த ஊடகங்களின்றி நவீன தேசம் உருவாக முடியாது. தேசிய அறிவாளிகளும் அச்சு முதலாளித்துவமும் (Print capitalism) தேசங்களின் உருவாக்கத்திற்கு இன்றியமையாதவை என்பதை அன்டர்சனின் நூல் தெளிவாக்குகிறது. தொலைக்காட்சி, சினிமா, மற்றைய கலை இலக்கிய ஊடகங்கள் தேசிய விழாக்கள் போன்றவை ஒரு தேச மக்களைத் தாம் எல்லோரும் ஒரு தேசத்தின் அங்கத்தினர் என கற்பனை செய்யவும் அதே கற்பிதத்தை தொடர்ச்சியாக மீளுற்பத்தி செய்யவும் உதவுகின்றன.

சகல காலனித்துவ நாடுகளின் தேசியவாதங்களின் தோற்றத்திற்கும் வளர்ச்சிப்போக்குகளுக்கும் உள்ள ஒரு பொதுத்தன்மை என்னவெனின் அவை எல்லாமே காலனித்துவம் எனும் வெளிவாரி அதாவது விதேசிய பொது எதிரியை எதிர்க்கும் நோக்குடன் எழுந்தவை. இந்தப் பொது எதிரியின் இருப்பு அதனால் நசுக்கப்படும் மக்களிடையே இருக்கும் இனரீதியான வேறுபாடுகளையும் தாண்டிய ஒரு ஒருங்கிணைப்பிற்கு உதவலாம். அது மட்டுமன்றி காலனித்துவ எதிர்ப்பு பொதுவாக காலனித்துவ வரையறுத்த புவியியல் சட்டகத்தின் அடிப்படையிலேயே எழுகிறது. ஆனால் காலனித்துவ எதிர்ப்புப் போராட்டத்தின் தலையாய சக்திகளின் வர்க்க, இனத்துவ (இந்தியாவைப் பொறுத்தவரை சாதித்துவ) முரண்பாடுகளைப் பொறுத்தும் காலனித்துவம் தனது நலன்களைப் பாதுகாக்க கையாளும் வழிமுறைகளைப் பொறுத்தும் இந்த ஆரம்ப அடிப்படை மாற்றமடையலாம்.


வரலாற்று ரீதியில் நவீன இந்தியாவின் ஆரம்பம் ஒரு பிரிட்டிஷ் காலனித்துவத்திட்டமே. காலனித்துவமின்றி நவீன இந்தியாவைக் கற்பனை பண்ண முடியுமென நான் கருதவில்லை. 'இந்தியா' எனும் மையப்படுத்தப்பட்ட காலனித்துவ அரசே ' சுதந்திர இந்தியா' எனும் கோஷத்திற்கு உருவத்தைக்கொடுத்தது. அதுவே இந்தியா எனும் தேசத்தைக் கற்பனை செய்து இந்தியர்கள் எனும் பிரஜைகளை உருவாக்க உதவியது. ஆனால் 'சுதந்திர இந்தியா' எனும் போது காலனித்துவம் வெளியேறிய இந்தியா என்பது பொருள். இந்தச் சுதந்திர இந்தியாவின் தனித்துவம் என்ன?

இந்தக் கேள்வியை இந்திய தேசியவாதிகள் எப்படி கையாண்டனர்? அவர்களுக்குப் பின்னிருந்த வர்க்க, இனத்துவ சக்திகள் எப்படி செயற்பட்டன? இதற்கு எத்தகைய கருத்தமைவுத் திட்டத்தை பயன்படுத்தின? இதுவே இராஜதுரையின் இந்து - இந்தி இந்தியாவின் பிரதான ஆய்வு நோக்கமாகும்.

வரும்

# சில புத்தகங்கள் சில நிகழ்வுகள் சில குறிப்புகள்

– மகாஜனன்




பரிஸிலுள்ள மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வெளியீடாக வந்துள்ளது மேற்படி மலர். ஒரு இலக்கிய மலராக சிறப்புற்று நிற்கிறது இம்மலர். கவிஞரான துரையப்பாபிள்ளை அவர்களால் தொடங்கப்பட்டு. பின் இன்னொரு கவிஞரான சின்னப்பா அவர்கள் தொடர்ந்து அதிபராக இருந்து நடாத்திய மகாஜனாவின் பழைய மாணவரிடமிருந்து வெளியாகும் மலர் இலக்கிய மலராக வெளிவருவது வியப்பல்ல. மகாஜனாவின் இலக்கிய பாரம்பரியம் சிறப்பானது. மஹாகவி, அ.ந.கந்தசாமி, அ.செ.முருகானந்தன், செ.கதிரேசர்பிள்ளை, மயிலங்கூடலூர் பி.நடராசன், ம.பார்வதி நாதசிவம், த.கனகரத்தினம், மாவை நித்தியானந்தன், ஆ.சிவநேசச்செல்வன, க.சண்முக லிங்கம், சோ.சந்திரசேகரம், சபா.ஜெயராசா, ஆதவன், சேரன், இளவாலை விஜேந்திரன், அ.ரவி, சபேசன், ஓசை மனோ, என்.சண்முகலிங்கன், கோகிலா மகேந்திரன், ஊர்வசி, ஔவை என்று நீண்டது (இதில் பல பெயர்கள் விடுபட்டிருக்கலாம்).

இத்தகு பாரம்பரியம் கொண்ட மகாஜனாவின் பழைய மாணவர்களிடமிருந்து வரும் மலர் சிறப்பான இலக்கிய மலராக இல்லாவிடின் தான் நாம் ஆச்சரியப்பட வேண்டும்.

'பட்டம் விடும் நினைவுகள்' என்று ஆதவன் எழுதிய கதை போன்ற ஒரு கட்டுரை. ஆசிரியர்களுக்கு வைக்கப்பட்ட பட்டங்கள் பற்றி மதிப்பீடு. சுவாரசியமாகச் செல்கிறது. கீரைப்பிடியர், முறுக்கர், வண்டிச்சுப்பர், கென்னடியர், ஜோன்சன், விம்மர், பட்டினத்தார், லொறி, டிம்மர், பெல்மூடியர், வியாக்கியானம், நரியர், கொட்டை ஆகாசம், சொத்தியர் என்று போகிறது பட்டங்கள். சில பட்டங்கள் வந்த காரணம் விளக்கிச் சொல்லப்படுகிறது. எளிய நடையில் அமைந்த கட்டுரை. " நாங்கள் பட்டம் பெற வேண்டும் என்பதற்காக அவர்கள் பட்டங்களைச் சுமந்திருக்கிறார்கள். துன்பங்களை அனுபவித்திருக்கிறார்கள் என்றும் அவர் நாமம் வாழட்டும்" என்கிறார் ஆதவன்.

ரோகினி ரீச்சரைப் பற்றியும், கன்ரீன் மனேச்சர் சங்கரப்பிள்ளை அண்ணையைப் பற்றியும் அஞ்சலியாக எழுதிய சிறுகுறிப்புக்கள் கூட இலக்கியமாக அமைகின்றது. புவனன் எழுதிய **பூமாறங் மாஸ்ரர்** ஒரு அற்புதமான படைப்பு என்றே கூறலாம். மிக அழகாகவே தான் கூற வந்த விடயத்தை வெளிப்படுத்தி விடுகிறார். இவ்விதழுக்கு முன்னைய மகாஜனன் இதழிலும் பெருமாள் மாஸ்ரர் பற்றி 'நெருடல்' என்றொரு கதை எழுதியிருந்தார். வாசித்து முடித்தவுடன் மனதை நெருடியதுதான். யார் இந்தப் புவனன்? என்று கேட்கத் தோன்றுகிற அபூர்வமான நடை அவருடையது.

இளவாலை விஜேந்திரன் எழுதிய கட்டுரை ஒன்று கவிஞர் செ,கதிரேசர்பிள்ளை பற்றியது. இது ஒரு இலக்கியப் பொக்கிஷம். 'மகாஜனர்'கள் ஒவ்வொருவரும் பெருமை கொள்ளக்கூடிய படைப்புக்கள் இவை.

முன்னாள் அதிபர் பொ.கனகசபாபதி அவர்கள் 'மேற்குலகக் கல்விமுறையும் எமது தேசத்துக் கல்விமுறையும்' எனும் தலைப்பில் கட்டுரை ஒன்று எழுதி உள்ளார். அக்கட்டுரை எழுதத்தகுதி உடையவர்தான் அவர்.

இவ்விதழில் 'மகாஜனர்'கள் அல்லாதோரின் கட்டுரைகள் இடம் பெற்றிருக்கின்றன. இதனால் சில மயக்கங்கள் ஏற்பட இடமுண்டு. பிரான்சில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களின் கட்டுரைகளும் அவற்றில் உண்டு. இது சில குழப்பத்தைத் தருகின்றது.

மகாஜனன் ஒரு கனதியான மலர்தான். என்றாலும், இதற்கு முன்னைய இதழுடன் ஒப்பிடுகிறபோது கனதி குறைந்துதான் இருக்கிறது.

சின்ன ஞாபகத்துடன் மஹாகவியின் வரிகளைக் குறித்து முடிக்கிறேன்.

"அம்பனைக்கு முன்னே அடிக்கும் வயற்காற்றில் கொம்பிலுப்பி பூக்களினைக் கொட்டும் மூடைவாகை நம்புதிய வெற்றிக்கு நாலுமலர்.........."

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# இலங்கை பாராளுமன்ற அரசியலில் பெண்கள்-6

### 1936 தேர்தல்

1936 வரை பெண்கள் அரசாங்க சபைக்கு மட்டுமே பிரதிநிதித்துவம் வகிக்க முடிந்தது. உள்ளூராட்சி சபைகளில் அதுவரை காலம் பிரதிநிதித்துவமளிக்க சட்டரீதியிலான அனுமதி கிடைத்திருக்கவில்லை. 1936 பெப்ரவரி மாதம் நடந்த அரசாங்க சபைக் கூட்டத்திலேயே உள்ளூராட்சி சபைகளில் பெண்களை பிரதிநிதித்துவமளிப்பதற்கான சட்ட மூலம் ஒன்று கொண்டு வரப்பட்டது. இது ஐந்து மேலதிக வாக்குகளால் மட்டுமே நிறைவேற்றப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

1936 மார்ச்சில் நடந்த தேர்தலில் மூன்று பெண்கள் போட்டியிட்டனர். ஹட்டன் தொகுதியில் போட்டியிட்ட திருமதி.சீ.எஸ். ராஜரட்னத்தை விட இரண்டாயிரம் அதிகப்படியான வாக்குகளைப் பெற்று கோ.நடேசய்யர் வென்றார். ருவன் வெல்ல தொகுதியில் போட்டியிட்ட எட்லின் மொலமூரேயும் தோல்வியடைந்தார். இறுதியாக கொழும்பு வடக்கிலிருந்து நேசம் சரவணமுத்து ஒருவர் மட்டுமே தெரிவு செய்யப்பட்டார்.

*1936 பெப்ரவரி 22 பொதுத்தேர்தல் முடிவுகள்*
*(கொழும்பு வடக்கு)*

| | |
|---|---|
| நேசம் சரவணமுத்து | 9,752 |
| எம்.ஜே.டி.சில்வா | 4,809 |
| டொக்டர் எஸ்.சீ.போல் | 2,828 |
| எஸ்.எப்.ஆர்.ரொட்ரிகோ | 2,224 |
| பெற்ற மேலதிக வாக்குகள் | 4,943 |
| அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | 19,843 |

இலங்கை வரலாற்றில் அரசவைக்கு தெரிவு செய்யப்பட்ட முதற்தமிழ்ப் பெண்மணி என்ற அந்தஸ்து மட்டுமல்லாமல், பொதுத் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட முதற்பெண்ணும் நேசம் சரவணமுத்து என்பது குறிப்பிடத்தக்கது. 1936 அரசாங்கத்தில் சுகாதார நிர்வாக குழுவில் (அன்றைய அமைச்சரவை முறை) அங்கமும் வகித்திருந்தார். இலங்கையின் அமைச்சரவையில் அங்கம் வகித்த முதற்பெண்மணியும் நேசம் சரவணமுத்துவே.

இத்தொகுதியில் 50% பெண்கள் இத்தேர்தலில் வாக்களித்திருந்த போதும், பெண்களின் வாக்குகள் நேசம் சரவணமுத்துவின் வெற்றிக்கு காரணமாக அமைந்திருக்குமென கூறமுடியாது. ஏனெனில் நேசம் சரவணமுத்துவின் வர்க்கப்பின்னணிக்கு இருந்த அந்தஸ்தும் அதனூடான செல்வாக்குமே பெருமளவு காரணமாக இருந்திருக்கும் எனலாம்.

1936இல் நடத்தப்பட்ட அரசாங்க சபைத் தேர்தலில் பதவிக்கமர்த்தப்பட்ட அரசாங்கத்தில் பதவிக்காலம் 1941 இல் நிறைவு பெற்றதுடன் 1941 ஜனவரியில் அடுத்த தேர்தலை நடத்த வேண்டும். ஆனால் அரசியல் திட்ட சீர்திருத்தம் தொடர்பாக அன்றைய அமைச்சரவைக்கும் குடியேற்ற நாட்டு காரியதரிசிக்கும் இடையில் நடைபெற்ற பிரச்சினைகள் காரணமாகவும் 1939இல் தொடங்கிய இரண்டாம் உலக மகாயுத்தத்தின் தீவிரம் காரணமாகவும் அத்தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. இதுபற்றி 1940 யூன் 15இல் குடியேற்ற நாட்டுச் செயலாளர் விடுத்த அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.

**"எதிர்வரும் ஜனவரி மாதத்துக்கு முன் நடத்தப்பட வேண்டிய தேர்தல்; தற்போதைய அரசியலமைப்பு தொடர்பாக இன்று பலர் மத்தியில் தோன்றியுள்ள அதிருப்தியின் காரணமாகவும், பொருத்தமானதொரு தேர்தல் முறையை கொண்டுவருவது, தேர்தற் பிரிவுகளை உருவாக்குதல் என்பவற்றைக் கருத்திற் கொண்டு இரு வருடங்களுக்கு தேர்தலை ஒத்திவைக்க வேண்டியுள்ளது".**

இறுதியில் இத்தேர்தல் ஒரு வருடத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

1941 செப்டெம்பர் முதலாம் திகதி இன்னுமொரு அறிக்கை வெளியிடப்பட்டது. அதில் இலங்கைக்கான மாற்று அரசியல் சீர்திருத்தம் தேவையென்பதை 'முடி' உணர்ந்திருப்பதாகவும் அதற்கான ஒரு ஆணைக்குழுவோ பேச்சுவார்த்தைக்குழுவோ நியமிக்க வேண்டிய தேவையையும் உணர்ந்திருப்பதாகவும் ஆனால் தற்போதைய யுத்தச் சூழ்நிலையில் அவை முடியாதிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அரசியல் சீர்திருத்தம் தொடர்பாக இரு நாடுகளும் கொண்டிருந்த முரண்பாடுகளின் காரணமாக மேலும் இரு வருடங்களுக்கு தேர்தல் தள்ளிவைக்கப்பட்டது என்ற போதும் யுத்தத்தை காரணம் காட்டி அரசியல் சீர்திருத்தம் தள்ளி வைக்கப்பட்டது இலங்கையின் தேசியவாதிகள் என அழைக்கப்பட்டவர்களின் கடும் விமர்சனத்துக்குள்ளாகியது.



புளோரன்ஸ் சேனநாயக்க

1943மே மாதம் 26ஆம் திகதி இன்னுமொரு அறிக்கை விடுக்கப்பட்டது. அதில் யுத்தம் முடிந்தபின் இலங்கைக்கான அரசியல் சீர்திருத்தத்திற்கான வேலைகள் தொடங்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இலங்கைக்கான அரசியல் சீர்திருத்தத்தை ஏற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழுவின் அறிக்கை 1945 ஒக்டோபர் மாதம் 9ஆம் திகதி இலங்கையிலும் இங்கிலாந்திலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது.

இரண்டாவது அரச சபையின் ஆயுட்காலம் ஒன்பதாவது வருடத்தை அடைந்து கொண்டிருந்த அந்த நேரத்தில் சோல்பரி அரசியலமைப்பை தயக்கமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும் என டி.எஸ்.சேனநாயக்க 1945 நவம்பர் 8ம் திகதி அரசாங்க சபையில் கேட்டுக்கொண்டார்.

டி.எஸ்.சேனநாயக்க இவ்வாறு தெரிவித்திருந்தார்.

***"அது (சோல்பரி அரசியல் திட்டம்) நிச்சயமாக பொறுப்பான உரிமைகளை வழங்கியிருக்கிறது. கேக் கொடுக்கப்படாததற்காக பாணை நிராகரிக்காதீர்கள்"***

சோல்பரி அரசியல் திட்டத்தை ஏற்றுக் கொள்வதற்கான மசோதா, பிபிலே தொகுதி உறுப்பினர் தஹநாயக்காவினது ஒரே ஒரு எதிர்ப்பின் மத்தியில் நிறைவேற்றப்பட்டது. 1947இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்த அரசியற்திட்டம் 1972 மே 22 திகதி "இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு" வரும் வரை அமுலில் இருந்தது.

### 1947 தேர்தல்

சோல்பரி அரசியற் திட்டத்தின் கீழான முதற் தேர்தலுக்கான வேட்புமனு 1947 யூலை 26 இல் தாக்கல் செய்யப்பட்டது. 89 உறுப்பினர்களுக்காக 362 பேர் போட்டியிட்டனர். இவர்களில் மூவர் மட்டுமே பெண்கள்.

கிரிஎல்ல தொகுதியிலிருந்து லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் திருமதி புளோரன்ஸ் சேனநாயக்க, அம்பலாங்கொடை - பலபிடிய தொகுதியிலிருந்து கொம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஸ்ரீமதி அயப குணவர்த்தன, கொழும்பு மத்தியிலிருந்து சுயேட்சை வேட்பாளராக திருமதி ஆயேஷா ரவுப் ஆகியோர் இத்தேர்தலில் போட்டியிட்டனர்.

சோல்பரி அரசியல் திட்டத்தின் கீழ் ஏற்படுத்தப்பட்ட பிரதிநிதிகள் சபைக்கு போட்டியிட்ட மூன்று பெண்களில் கிரிஎல்ல தொகுதியிலிருந்து புளோரன்ஸ் சேனநாயக்க மட்டுமே தெரிவு செய்யப்பட்டார்.

இத்தேர்தலில் தன்னுடன் போட்டியிட்ட ஐவரையும் தோல்வியடையச் செய்து 2241 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று திருமதி புளோரன்ஸ் சேனநாயக்க தெரிவு செய்யப்பட்டார்.

மேலும் மத்திய கொழும்பில் 15 பேருடன் போட்டியிட்டு திருமதி அயேஷா ரவுப் 8486 வாக்குகளைப் பெற்ற போதும் தோல்விகண்டார். அத்தோடு அம்பலங்கொட பலப்பிட்டிய தொகுதியில் போட்டியிட்ட ஸ்ரீமதி அபய குணவர்த்னவும் 3105 வாக்குகளை மட்டுமே பெற்று தோல்விகண்டார்.

*1947 ஜூலை பொதுத்தேர்தல் முடிவுகள்*
*(கிரியெல்ல தொகுதி)*

| | |
|---|---|
| புளோரன்ஸ் சேனநாயக்க | 5535 |
| டி.கே.டபிள்யூ.சந்திரசேகர | 3294 |
| ஏ.ஈ.பி.கிரிஎல்ல | 2439 |
| எச் ஏ.ஜீ.கலடுவாவ | 2428 |
| பீ.எஸ்.ராமசந்திர | 1120 |
| ஏ.எம்.எஸ்.எல்.பதனி மூகாந்திரம் | 366 |

இலங்கையில் சுதந்திரத்திற்கு பின்னரான பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முதற்பெண் எனும் பெருமை திருமதி டேசி மரியா புளோரன்சைச் சாரும். இவர் ஏகாதிப்பத்திய விரோத **'சூரியமல்'** இயக்கத்தில் செயற்பட்டு வந்ததன் மூலம் அரசியலுக்குள் பிரவேசித்தார். இவரது கணவரான ரெஜி சேனநாயக்க லங்கா சமசமாஜக் கட்சியின் முக்கிய உறுப்பினராக இருந்தவர். அத்தோடு பெரும் வசதிபடைத்தவராகவும் தோட்ட உரிமையாளராகவும் இருந்த போதும் தோட்ட தொழிலாளர்களுக்கு பெரும் சேவை புரிந்தவர் என்பதால் மக்கள் மத்தியில் ஆதரவு இருந்தது.

பிலிப் குணவர்த்தன சிறையிலடைக்கப்பட்டதோடு அவரது மனைவி குசுமாவை ரகசிய பொலிசார் நாடு முழுவதும் தேடினர். ஆனால் இந்தியாவுக்கு தப்பிச் சென்றிருந்த இவர்களை இந்திய இரகசிய பொலிசார் கைது செய்து சிறையிலடைத்திருந்தனர். குசுமா சிறையிலிருக்கும் போது ஒரு நிறைமாத கர்ப்பிணி. குசுமா இந்தியச் சிறைக்குள்ளேயிருந்த போது ஆண் மகனைப் பெற்றார். (இந்த மகன்தான் இன்றைய சந்திரிகா அரசாங்கத்தில் மீன்பிடி அமைச்சராக இருக்கும் இந்திக குணவர்த்தன.)

**என்.சரவணன்**

1903 ஜூன் 19ஆம் திகதி மொரட்டுவையில் பிறந்த புளோரன்ஸ் மொரட்டுவ வேல்ஸ் பெண்கள் கல்லூரியில் கற்று பின்னர் அதே பாடசாலையில் ஆசிரியராகவும் கடமையாற்றினார். திருமணத்தின் பின் கணவரோடு சேர்ந்து லங்கா சமசமாஜக் கட்சியில் பணியாற்றினார். லங்கா சமசமாஜக் கட்சித் தலைவர்களான கலாநிதி என்.எம்.பெரேரா, கலாநிதி.கொல்வின் ஆர்.டி. சில்வா, பிலிப் குணவர்த்தன மற்றும் எட்மன்ட் சமரக்கொடி ஆகியோர் பிரித்தானியராட்சியின் போது போகம்பர சிறைச்சாலையிலிருந்து தப்பியதன் பின் அவர்களுக்கு புகலிடம் ரெஜி சேனநாக்க தம்பதிகளே. இவர்கள் தப்புவதற்கான திட்டங்களை அமைத்ததிலும் ரெஜி சேனநாயக்கவுக்கு பங்குண்டு.

ஆங்கிலேயராட்சியில் இந்தியாவில் தலைமறைவாக இருந்த ல.ச.ச.க. தலைவர்களுக்கு எதிராக பிடியாணை விடுக்கப்பட்டிருந்த போது பிலிப் குணவர்த்தனவின் மனைவி குசுமாவை பாடசாலை மாணவியாக வேடமிட்டு இந்தியாவுக்கு அழைத்துச் சென்றதும் புளோரன்ஸ் தம்பதிகளே, இவர்கள் ல.ச.ச.க.வுக்குள் அன்று பெரும்பாங்காற்றியிருந்தனர்.

இலங்கைப் பாராளுமன்றத்தின் முதற் பெண் உறுப்பினரான புளோரன்ஸ் தொழிலாள வர்க்கத்துக்காகவும், சிறுபான்மை இனங்களின் உரிமைகளுக்காகவும் குரல் கொடுத்து வந்தவர் எனும் பெயர் இன்னுமுண்டு. 1952 ஆம் ஆண்டு தேர்தலின் போது இவர் தோல்வியடைந்ததைத் தொடர்ந்து பாராளுமன்ற அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டார்.

அதற்கு வெளியில் சமூக வேலைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டார். இறுதியில் 1988 டிசம்பர் 3ஆம் திகதி தனது 85வது வயதில் மரணமடைந்தார்.



தமரா குமாரி இலங்கரத்ன

1952ஏப்ரல் 8ஆம் திகதி முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. அப்படி கலைக்கப்பட்ட நேரத்தில் பாராளுமன்றத்தில் மூன்று பெண்கள் அங்கம் வகித்திருந்தனர். அவர்களில் ஒருவர் புளோரன்ஸ் மற்றையவர் இருவரும் குசும்சிறி குணவர்த்தன, மற்றையவர் தமராகுமாரி ஆகியோராவர்

### குசும் சிறியின் வருகை

சவுத் வெஸ்டரிங் பஸ் கம்பனி வேலைநிறுத்தப் போராட்டத்தை நடத்திய குற்றச்சாட்டின் பேரில் 3மாத சிறைத் தண்டனை அனுபவித்த பிலிப் குணவர்த்தன 1947 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் 11,922 வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றிருந்தார். இதற்கு எதிராக உயர் நீதிமன்றம், மேன் முறையீட்டு நீதிமன்றம் என்பவற்றில் மேன்முறையீடு செய்தபோதும் தோல்வியில் முடிந்தது. 1948 பெப்ரவரி 28ஆம் திகதி அவரது உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது.

அத்தொகுதியில் இடைத்தேர்தலுக்கான வேட்புமனு 1948 ஏப்ரல் 19ஆம் திகதி தாக்கல் செய்யப்பட்டது. பிலிப் குணவர்த்தனவின் மனைவி குசும்சிறி குணவர்த்தன (குசுமா) இத்தேர்தலில் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டார். இலங்கையின் சரித்திரத்தில் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்ட ஒரேயொரு பெண்ணாக திருமதி குசும்சிறி குணவர்த்தன சாதனை படைக்கிறார். 1952 இல் அவிஸ்ஸாவெல்ல தொகுதியிலும், 1956 இல் கிரிஎல்ல தொகுதியிலும் போட்டியிட்டு வெற்றி பெற்ற குசும்சிறி இலங்கையின் பாராளுமன்ற அரசியலில் 11 வருடகாலம் சேவையாற்றினார்.

கொழும்பு மியுசியஸ் வித்தியாலயத்தில் கல்விகற்கும் போதே சூரியமல் இயக்கத்திலும் சமசமாஜக்கட்சியிலும் மிகவும் தீவிரமாக உழைத்த குசுமா தன்னுடைய ஹொஸ்டல் நண்பியான விவியன் குணவர்த்தனவின் தொடர்பினூடாகவே அரசியலுக்கு வந்தார். லங்கா சமசமாஜக்கட்சி தொடக்கப்பட்டதோடு பல அரசியல் கூட்டங்கள், மாநாடுகள் என்பவற்றில் கலந்து கொண்ட குசுமா தன்னோடு ஒன்றாக அரசியல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த பிலிப் குணவர்த்தனவை 1939 இல் திருமணம் முடித்தார். திருமணத்தின்பின் பிலிப் தம்பதிகளின் வாழ்க்கை அரசியல் காரணங்களினால் சிக்கலுக்குள்ளாகியது. பிலிப் குணவர்த்தன சிறையிலடைக்கப்பட்டதோடு அவரது மனைவி குசுமாவை ரகசிய பொலிசார் நாடு முழுவதும் தேடினர். ஆனால் இந்தியாவுக்கு தப்பிச்சென்றிருந்த இவர்களை இந்திய இரகசிய பொலிசார் கைது செய்து சிறையிலடைத்திருந்தனர். குசுமா சிறையிலிருக்கும் போது ஒரு நிறைமாத கற்பிணி. குசுமா இந்திய சிறைக்குள்ளேயிருந்த போது ஆண் மகன் கிடைத்தது. ***(இந்த மகன்தான் இன்றைய சந்திரிகா அரசாங்கத்தில் மீன்பிடி அமைச்சராக இருக்கும் இந்திக குணவர்த்தன)***

1948இல் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்ட குசும்சிறி குணவர்த்தன, 1952ஆம் ஆண்டு நடந்த இரண்டாவது பாராளுமன்றத் தேர்தலில் அவிஸ்ஸாவல தொகுதியில் 929 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று வெற்றி பெற்றார்.

1956 ஆம் ஆண்டு தேர்தலில் பிலிப் குணவர்த்தன இருபத்தி இரண்டாயிரம் (22,000) அதிகப்படியான வாக்குகளைப் பெற்று அவிஸ்ஸாவெல்ல தொகுதியில் தெரிவு செய்யப்பட்ட அதே நேரம். ஒன்பதாயிரம் அதிகப்படியான வாக்குகளைப்பெற்று குசும்சிறி குணவர்த்தன கிரிஎல்ல தொகுதியிலிருந்து தெரிவானார்.

1960ஆம் ஆண்டு தேர்தலில் கிரிஎல்ல தொகுதியை வெற்றிகொள்ள அவரால் இயலவில்லை. அதற்குப்பின் 1965ஆம் ஆண்டு தேர்தலிலும் 1967ஆம் ஆண்டு இடைத்தேர்தலிலும், 1970ஆம் ஆண்டு பொதுத்தேர்தலிலும் கொலன்னாவ தொகுதியில் போட்டியிட்ட குசுமா தொடர்ந்தும் தோல்விக்குள்ளானார். அதன்பின் பாராளுமன்ற அரசியலிலிருந்து ஒதுங்கிக்கொண்டார்.

இலங்கையின் பாராளுமன்ற வரலாற்றில் தேசிய மொழிகளில் பேசுவதற்கான அனுமதி வழங்கப்பட்டதன் பின் தேசிய மொழியில் இரண்டாவது உரையாற்றிய பெருமை குசுமா குணவர்த்தனவைச்சாரும். முதலாவது பேசியிருந்தவர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்க ஆவர்

### தமராவின் வருகை

மூன்றாவதாக பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பெண் தமரா குமாரி இலங்கரத்தின.

கண்டி தொகுதி உறுப்பினரான திரு.இலங்கரத்னவுக்கு எதிரான தேர்தல் முறைப்பாட்டை விசாரணை செய்த காலிங்க 1949 பெப்ரவரி 10ஆம் திகதி அளித்த தீர்ப்பின் மூலம் திரு.இலங்கரத்னவின் உறுப்பினர் பதவி பறிக்கப்பட்டது.

மீண்டும் ஒரு இடைத்தேர்தல் 1949 ஜூன் 18ஆம் திகதி நடத்தப்பட்டது. இதில் இலங்கரத்னவின் மனைவி தமரா குமாரி இலங்கரத்ன சுயேட்சையாக இடதுசாரி வேட்பாளராக போட்டியிட்டார். அன்று ஆட்சியிலிருந்த ஐ.தே.கவின் சார்பில் ஏ.சி.எல்.ரத்தவத்தயும் அரசாங்க சபையில் உறுப்பினராக இருந்த ஆர்.ஈ.ஜயதிலகவும், டி.பி.வடுகொடபிடியவும் போட்டியிட்டனர்.

*1949.06.18 கண்டி இடைத்தேர்தல் முடிவுகள்*

| | |
|---|---|
| திருமதி தமராகுமாரி இலங்கரத்ன | 10,062 |
| ஏ.சி.எல்.ரத்வத்தை | 8,012 |
| ஆர்.ஈ.ஜயதிலக்க | 1,137 |
| டீ.பி.வடுகொடபிட்டிய | 270 |

தமரா குமாரிக்கு இடதுசாரிகளின் ஆதரவே பெரும்பாலும் கிடைத்திருந்தது. ஆனாலும் இத்தேர்தலில் 24 வயதை மட்டுமே அடைந்திருந்த தமரா குமாரி இலங்கரத்ன 2050 அதிகப்படியான வாக்குகளைப் பெற்று கண்டி தொகுதியில் வெற்றி பெற்றார். பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட வயதில் குறைந்த இளம் பெண்ணும் இவரே.

தமரா குமாரிக்கு எதிராகவும் தேர்தல் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதும் நீதிமன்றத்தால் அது நிராகரிக்கப்பட்டது.

1952ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமரா குமாரி கண்டி தொகுதியில் போட்டியிட்ட போதும் வெற்றி பெற கிடைக்கவில்லை. 1965 ஆம் ஆண்டு கலகெதர தொகுதியில் போட்டியிட்ட போது 574 வாக்குகளால் தோல்வியடைந்தார். **1970 தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் பாராளுமன்றத்துக் குச் சென்றார்.**

வரும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பறந்து போகிறேன் ஜன்ம பூமியே
உலகைப் பார்க்க வேண்டும்!
இளமை உலர்வதன் முன்
உன்மேல் படர வேண்டும்.
- டிசம்பர் 93

பகுதி அ. கிளாலி

முன்னுரிமை பெற்றவர் முன்னால் நிற்க!
நலிந்தவர் பயந்தவர் ஒதுங்கி நிற்க!
ஓட்டிகள் மந்திரம் ஓதுக!
நுரைத்தெழும் ஜலமே வழிவிடு!

மூடுண்டு போனது யாழ்நாடு
வழியும் போனது
எழுந்தன அவலக்குரல்கள்
வானம் கேட்டது
திசைகள் யாவும் கேட்டன
காற்றும் மழையும் பனியும்
நிலவும் இருளும் கேட்டன
நீண்ட காலமாய்!

போகும் பாதையில் சுழிகள்
உண்டென வானம் உரைத்தது
வானொலி உரைத்தது.
உயிரும் பணமும் ஈர்க்கும்
கரும் பொருள் உண்டென!

உரப்பையும் பயணப்பொதியும்
அரைக்கால் சட்டையும்
நனைந்த கோலமாய்த் தேவர்கள்
கண்டங்களை இணைத்த கடல்வாசிகள்
பனிக்கண்டங்களில் உலவிய
அதிமனிதர்கள்

வீடு, வாசல், தோட்டம், துறவு,
மா, பலா அனைத்தும் ஒப்புகொடுத்தோடும்
பயணிகள்,
பேச்சற்றுப் போனவர், கதைப்பவர்,
வணிகர், குழந்தைகள்,
பெற்றோர் எனத் தென்னை மரத்திடை
அடங்கிக் கிடந்தனர்.

கிளாலிக் கரை.
கூவிவிற்போர் வியாபாரம் செய்க!
கூடிக்கதைப்போர் ஒன்று சேர்க!
தனித்திருப்போர் கனவு காண்க!
இரவு வரட்டும்
இருளும் வரட்டும்
காற்றே அமைக!

போகுமுன் பெயர்களைப் பதிவு செய்க!
கடலிலே அலைமோதும்
வள்ளமெழுந்து வீழும்

வரிசைகள் முக்கியம்!
வள்ளங்களின் எண்களும் முக்கியம்
இருவராய் மூவராய் அறுவராய் எனினும்
வரிசைகள் முக்கியம்.

வீசும் கந்தக் காற்றும்
நாறும் சேறும்
எரிச்சல் வயமாய்ப் பயணிகள்
வரிசைக்கு
வள்ளத்திற்கு
இடத்துக்கு
முந்துக!

வரிசைகளை மீறுக!
ஒழுங்குகளை கலைக்குக!
காவல்துறை வரட்டும்

அவரவர் உடமைக்கு
அவரே பொறுப்பு
உயிருக்கும் அவரேதான்
நல்லது
இனி ஓட்டிகள் வருக!
தெற்கே யமனின் திசையில்
பதினைந்து பதினைந்தாய்
அழைத்துச் செல்க!

★★★ ★★★ ★★★

நோய்தரும் ஜலத்தினை
வானம் ஈய்ந்தது
வெற்றிடங்களை ஈய்ந்த பாரியவெளி
போர் உலாப்போன பலமாரி காலங்கள்
பிஞ்சும் பூவுமாய்
சிசுக்களை காவுகொண்ட ஏரி

மண்தின்ற கடலிடையே
பளிச்சிடும் ஒளிப்பிசாசுகள்
பயணம் நெடியதும் கொடியதும்
ஊதல் காற்றும்
ஜலதாரை வீசும் கடலும்
குளிரும் பயமுமாய்ப் பயணம்

திடீரெனத் துள்ளி படகில் பூத்த
மீனினை என்னிடம் தந்தாய்!
நான் கடலிடம் தந்ததன்
உயிர் ஈய்ந்தேன்

எதிரியானவன் எப்பவும் கூட இருப்பதாய்
வேதத்தில் உள்ளது
நீயென் எதிரி
நான் பேசிடவில்லை!
நீ காட்டிக் கொடுப்பவனாய் இருக்கலாம்
நீயும் அறிவாய்


நானும்
காட்டிக் கொடுப்பவனாய் இருக்கலாம்
வேதத்தில் கற்பிக்கப்பட்டதை
செய்பவன் ஆனேன்
நீ மட்டுமென்ன

ஜலம் வீசி ஆடும் கடல்
கொடுங்குளிர்
இது மழைக்கால கும்மிருட்டு
கொள்ளும் கூதல்

எங்கேயந்த ஒளிப்பொட்டுகள்?
எங்கேயந்தத் துருவ நட்சத்திரம்?
எங்கேயந்தக் குருசு?★
அவலத்தொனி
அடிவயிற்றில் ஊர்ந்தது
ஊழிமழையில் ஓட்டிகள் குரல்
திசை தெரியா அவலம்

வானமே வழிவிடு
இல்லை
வானம் வழிவிடவில்லை
ஒரு பாட்டம் பாடியது

பாவியானவர் எம்மிடையுள்ளதாய்
ஓட்டிகள் உரைத்தனர்
யாரந்தப் பாவி?




யாரந்தத் துரோகி?
அவனைக் கடலில் தள்ளுக!

திருவுளச்சிட்டினைப் போடுக!
எவனோ அவனே ப
எவனோ அவனே துரோகி!

மழை கொடியது;
குளிர் கொடியது;
மனிதர் கொடியவர்;
பேயாய்ப் பிசாசாய் அலைபவர்
மனிதர் பசித்தவர்;
மிகமிகப் பசித்தவர்;
எனைக் கடலிடம் தந்தனர்
நான்
அலைகளில் வீழ்ந்தேன்

பகுதி ஆ : மாநகர்

ஆர்வத்துடன் நெருங்குகிறேன்
போவதற்கு முன்
எனைத் தந்துவிட்டு போகிற அவஸ்தை

போய்க் கடந்த தேசமொன்றின்
பெரும் பாவச்சுமைகள்
இளமை தசைக்கணுக்களில்
துவண்டு போன தோல்விகள்
பரணில் தூங்கிவிட்ட
கிளர்ச்சியூட்டிய எண்ணங்கள்

பேர் பெற்ற வழிகாட்டியின்
முட்டாள் சீடனே!
தப்புகிற வேகத்தில்
விட்டோடிப் போன நிலத்தில்
படரும் முட்செடிகளாலொரு
கிரீடம் செய்

பொறுப்பற்றவனும் செலவாளியும்
அமைதியற்றவனுமாகி
போதையில் கரைந்த நாடோடியே!
தென்னந்தோப்பும் சவுக்கம் காடும்
மணற்பரப்பும் பரந்த கடலுமாய்

நீ பெற்றிருந்த இரவுகளை
எதனிடத்து காவு கொடுத்தாய்?
வேர்கள் படர
நீ யாசித்த
நிலத்தில்
எதைத்தான் பயிரிட்டாய்?

★★★ ★★★ ★★★

வனவாசத்தில் ஒதுங்கிய மரக்குடில்களும்
சிற்சில மனிதர்களும் போலல்ல நகரம்
மாளிகையும் மயக்கமுமாய் நினைவுகள்

தூற்றப்பட்ட மனிதர்க்கு
புனர்ஜென்மம் கொடுத்த வரிகளை
வாசித்துக் கொண்டிருந்தேன்

அதல பாதாளத்தின் குரூர அழகு
இது எத்தனையாவது பயணம்?
இது எத்தனையாவது குகை?
இது எத்தனையாவது குரல்?
சந்தித்த எத்தனையாவது?
மனிதன் நீ?

தற்கொலையும் நிராசையும் நிறைந்த
புதிர்க்கணக்கினை நீயுரைத்த பின்
இரவுகளைக் கடக்க

எதுவரை உண்மையினை
அவர்கள் கொண்டு சென்றார்கள்?
அதுவரை நான் வந்தேன்
எங்கு வைத்துக் கொலை செய்தார்கள்?
நான் அங்கிருந்தேன
என்னால் முடியாத பேரழிவினை
ஊழியில் இயற்ற
எனையங்கு தயார்ப்படுத்தினார்கள்

நீண்ட தொலைவிற்கப்பால்
அந்நியமான மலையின் அந்தரில்
பாதாளம் வரை பரவிய பிரானே!
ஆவி பதற அலையெறியும் கடலே!
கணக்குகள்
மீளவும் தீர்க்கப்படுகையில்
நான் அஞ்சுகிறேன்
வரண்டுபோன சொற்களுடன்
ஒரு கவிதை முடிந்துவிடக்கூடும்
என்பதே

பாழாய்ப்போன பிரிவின் வேகத்தில்
கிராமத்து ரயில் தடங்களில்
வேகத்தோடு பாயும் நதி

நெடிய பயணங்களின் முடிவில்
சந்தித்த பிரியம்மிக்க
பெண்களின் நெருக்கத்தில் தத்தளித்து
வாழ்த்து செய்தியுடன்
விடை கொண்டு
போய் வருகிறேன்

ஜன சந்தடி மிக்க தெருக்களில்
ஓடுகின்ற ஊர்திகளில்
தெறிக்கும் கணங்கள்
பேச வேண்டா,
சிரிக்கவும் வேண்டாம்!
பனிபோல் கண்களில் படரும்
மெல்லிய திரையில்
சேதிகளை பகிர்ந்து கொள்வோம்.
போய் வருக

பகுதி இ : காட்டாறு

இடி மின்னல் மழை காற்று
கடலடி புயலுடன்
எழுந்தது மாரி
நீர்க் கோளமாய் பாயும் வெள்ளம்
ஊழி முடிவு போல்!

அச்சந்தரும் கொடூர மழை;
ஆத்மாவின் திருப்தி;
சொந்த நிலத்தில்
பாதம் பதிகையில் கிளர்ச்சி

கடலும் காடும்
வெள்ளமும் குளமுமாய்
சட்டென விரியும் கிராமம்
வயலும் தென்னையும்
மீனும் நெல்லும் நிறைந்த பூமி

நீங்கள் எங்கு சென்றீர்கள்?
யாரைப் பேட்டி கண்டீர்கள்?
எதை அறிந்து கொண்டீர்கள்?

ஆயுத பேரங்களின் பின்
இரவில்
வங்காள விரிகுடா தாண்டும்
ஆயுதங்களின் கணக்கினை விடுவோம்
வனத்திடை பயிற்சியை
நோய்க்கருதி முறித்து திரும்பிய
முதியவரையும் விடுவோம்

நியாயங்கூற ஏலா கண்ணீருடன்
விரட்டப்பட்ட மக்களிடையே
விடுபட்டு உதிரியாய்
ஒன்றிப்போன ரசூலின் கதையினையும் விடுவோம்

மெல்லவும் ஏலாமல் விழுங்கவும் ஏலாமல்
எல்லைக்கப்பாலும் இப்பாலும்
யாரும் உரிமை கோராப் பிரதேசத்தில்
நெஞ்சை நிமிர்த்திப்போம் ஜீவியே

எங்கு முளைத்தெழுந்தேனோ
அங்கு
ஒரு துண்டு நிலத்தில் படருமென்
வேரினை இழக்க எனக்குச் சம்மதமில்லை

பெருக்கெடுத்தோடும் வெள்ளம்;
வேரினை அரித்துப் போகும்
காட்டாறு;
மிஞ்சிய வேகத்தில்
எதையும் விட்டுவைக்கவில்லை

உயிரும் பொருளும்
கல்வியும் செல்வமும்
நூற்றாண்டு கால வரலாறும்
அச்சமும் நாணமும்
குலமும் கோத்திரமும்
ஜாதியும் பேதமும்
சுழித்தோடும் ஆற்றோடு!

தேசவழமைச் சட்டங்களும்
உரிமைகளும் விதிகளும்
விழாக்களும் விழுமியங்களும்
பாவமும் பாவத்தின் கூலியும்
அனைத்தும் நதியின் வேகத்தில்!

ஆற்றுப்படுகையில்
ஆற்றோர சிறுகல்லும்
பளிங்காய் ஒளிர்கையில்
குருடாய் முடமாய்
ஏராளம் ஜீவிகள் ஒய்கையில்
இனம்புரியா இசை
கண்தெரியா இசைஞனின் பாடல்
அலைகளில் எழுகின்ற முகம்
ஓவென்றிரைச்சலிடும் கடல்!

தந்தையும் தாயும் வாழ்ந்தலுத்த
நிலத்தில்
ஓலைக்குடிலில் தனியிரவு
இரவு விரிந்தது

பொழுதுகள் போய்ப் படுக்கும்
பின்னிரவில்
நம்பிக்கையுடன் பிரியமான
முகங்களை எழுதத் துவங்கினேன்.

பகுதி ஈ : அழைப்பு★★

இனத்தில் பெரிய ஜாதிகள் நாங்கள்
பிழைக்க வழியில்லாமலே
எவர்க்கும் பெருமை கொடுக்கும் செந்நெல்
விளையும் தறையை அணுகினோம்

சேர்ந்த படியே நம்முடனே
சூழ்ந்த பண்பினர் யாவருக்கும்
சுறுக்கு விளையும் தறைக்கு வந்தோம்
துறக்க வேண்டாம் மானிடரே
துறக்க வேண்டாம் மானிடரே

★★★ ★★★ ★★★

அஸ்வகோஸ்

★ குருசு: Cross - நட்சத்திரக்கூட்டம்
★★ பகுதி ஈ: 'யார்க்கெடுத்துரைப்பேன்' (குழந்தை ம.சண்முகலிங்கம்) நாடகத்தில் இசைக்கப்பட்ட நாடோடிப்பாடல்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பெண்ணே! நீ தீண்டத்தகாதவள்


கடமையுணர்வுள்ள மகளாக எனக்களிக்கப்பட்ட பாத்திரத்தை இலகுவில் உணர்ந்து கொள்ள முடிந்தது. ஆனால் என்னுடைய சுற்றுப்புறச் சூழலை என்னால் விரைவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை. வளர்ந்தவுடன் நான் நங்கி வாழும் மனைவியாகவும், தியாக மனம்படைத்த தாயாகவும் இருக்க வேண்டுமென்பதையே திரும்பத் திரும்ப எனக்கு எல்லோரும் வலியுறுத்தினார்கள். நான் திறமையான மாணவியாக இருந்ததால் உயர்தரக் கல்வி கற்பதற்கும் அனுமதித்தார்கள்.

எனக்கு மாதவிடாய் வரத்தொடங்கியவுடன் என்னுடைய குடும்பப் பெரியவர்கள் எனக்குத் திருமணம் செய்து வைப்பதற்காக அலைந்தார்கள். அந்த வருடங்கள் மிகவும் கஷ்டமானவை.

இந்து சமயத்தின்படி பெண் மாதவிடாய்க் காலத்தில் தூய்மையற்றவளாக எண்ணப்படுகிறாள். இதனால் அவள் ஒதுக்கி தனித்து விடப்பட்டு ''தொடமுடியாதவள் ஆக, வீட்டுக்கு விலக்கானவளாகக் கருதப்படுகிறாள். என்னுடைய வாழ்க்கையில் 1/6 பகுதிகாலம் நான் ''தொடமுடியாதவள்'' ஆகவே நடத்தப்படுவேன் என எண்ணும் போது எனக்குள் பயங்கரமான உணர்வுகள் ஏற்படுகின்றன. இப்போதுதான் இந்தியாவில் ஒடுக்கப்படும் மக்களின் (''தீண்டத்தகாதவர்கள்'') நெருக்கடியான வாழ்நிலையை நான் முதல் தடவையாக விளங்கிக் கொள்கிறேன். இந்-சமூகத்தின் உறவுகளின் ஒடுக்குமுறையை உருவாக்கிய மனு தன்னுடைய மனுதர்ம சாத்திரத்தில் கூறுகிறார்: 'முரசு, முட்டாள், தொடமுடியாதவர்கள், மிருகம், பெண் ஆகியோர் அடிவாங்குவதற்கு மட்டுமே தகுதியானவர்கள்'.

இரண்டு வருடங்களாக கணவனைத் தேடும் வேட்டை வியாபாரம் என்னுடைய பெற்றோர்களால் நடத்தப்பட்டது. வருங்காலக் கணவனும், அவருடைய உறவினரும் ''நேர்முகம்'' ஒன்றிற்காக வருபவர்கள். அவர்கள் முன் நான் அலங்கரிக்கப்பட்ட பொருளாக காட்சிக்கு நிறுத்தப்படுவேன். அவர்கள் பார்வையில் நான் போதுமான நிறம் கொண்டவளாக இல்லை; மற்றவர்களுக்கோ நான் பார்ப்பதற்கு போதுமான அழகாக இல்லை என்கிறார்கள். அவர்களுக்கு தேவையானதெல்லாம் தற்போது செல்வம் நிறைந்த லஷ்மி போன்ற, மெலிந்து, நாகரிகமான தோற்றமுடையவளாக, இனிமையானவளாக நான் இருக்க வேண்டுமென்பதே. எல்லோரும் அப்படி இருக்க முடியுமா? கடைசியாக ஒரு குடும்பம் அவர்களுடைய மகனை மணந்து கொள்வதற்காக என்னைத் தெரிவு செய்தது.

இதன் பிறகு ''சீதனம்'' தொடர்பான வியாபாரப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாயின. என்னுடைய குடும்பம் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தது. எனக்கு ஒரு தங்கையும், இரு தம்பியரும் இருக்கின்றனர். அப்பொழுது அவர்கள் படித்துக் கொண்டிருந்தனர். எனது பெற்றோர்களால் நிறைவேற்ற முடியாதவாறு மாப்பிள்ளை வீட்டார் கோரிக்கைகளை முன் வைத்தனர். எனது அப்பாவோ அவர்களுடன் தயவாகப் பேசினார். அப்படியிருந்தும் பல விவாதங்களின் பின்பே இந்தப் பிரச்சினையில் ஒரு முடிவுக்கு வந்தனர். 1000 ரூபா பணம், ஒரு ஜோடி தங்க ஆபரணங்கள், 25 சாரிகள், கலப்படமில்லாத உருக்கினாலான ஒரு தொகுதி சமையல் பாத்திரங்கள், ரேடியோவுடனான டேப்ரெக்கோடர் ஒன்று ஆகியவற்றுடன் வேறு சிலவற்றையும் என்னுடைய தகப்பனார் கொடுக்க வேண்டும் எனத் தீர்மானித்தனர்.



என்னுடைய திருமணத் தயாரிப்பு வேலைகளுக்காக நிறைய கடன்களைப் பெறும் நிலைக்கு எனது அப்பா கள்ளப்பட்டார். நிலைமை மிகவும் கஷ்டமாக இருந்தது. என்னுடைய திருமணம் உண்மையிலேயே கொண்டாடச் சந்தோசமான நிகழ்ச்சியாக இருக்கும் என்றே நினைத்திருந்தேன். அவமதிப்புகளுக்கு உள்ளானமை வேதனையாக இருந்த போதும், '' எமது மகளை அன்பளிப்பாகக் கொடுத்தால், நாம் சொர்க்கத்திற்குள் நுழையலாம்'' எனக்கூறி தம்மைத் தாமே தேற்றிக் கொண்டனர் என் பெற்றோர். இந்து மரபில் கன்னிகாதானம் சிறந்த தானங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இதனடிப்படையில் பெண் தானமாகக் கொடுக்கப்படக்கூடியளவிற்கு சடப்பொருளாக தரங்குறைக்கப் படுகிறாள்.

திருமண நாளன்று, நான் மிகவும் கவனமாகவும் அக்கறையுடனும் எனது நண்பிகளால் அலங்கரிக்கப்பட்டேன். ஐயர் சமஸ்கிருத மொழியில் ஏதோ கூற, எனது கணவரும் நானும் மண மாலைகளை மாற்றிக் கொள்வதற்காக ஏழு தடவைகள் அக்கினியைச் சுற்றி வந்தோம். ஐயர் கூறிய சில வாசகங்கள், தெளிவாக ஞாபகமுள்ளன. அவை;

***''பிள்ளைகளுடன் வாழவும், தாய்மையை அடையக்கூடியவளாகவும் இந்தப் பெண்ணை புனித அக்கினி பாதுகாக்கட்டும்'' சொர்க்கம் நான்; பூமி நீ; நாங்கள் ஒரு மகனை உருவாக்க ஒன்று படுவோம் வாருங்கள், செல்வத்தை அதிகரிப்பதற்காக, அருள் கிடைப்பதற்காக.. தாராள குணமிக்க கடவுள் இந்தப் பெண் மகன்மாருடன் சந்தோஷமாக வாழ அருள்புரிவாராக; இவருக்கு பத்துப் புதல்வரைக் கொடுத்து பதினொராவதாக அவருடைய கணவன் இருக்க அருள்புரியட்டும்''.***

திருமணத்தின் பின் நான் கணவனுடைய குடும்பத்துடனேயே இருக்க வேண்டும். முதலில் புதிய இடத்திற்குப் போவதைப் பற்றிப் பயம் எனக்கு இருந்தது. புதிதாக திருமணம் முடித்த மணமகள்மார், கணவன் வீட்டாரினால் கொடுமைப்படுத்தப்படுவதாகவும், சில நேரங்களில் கொலை செய்யப்படுவதாகவும் நான் கேள்விப்பட்டிருக்கிறேன். மறு பக்கத்தில் நான் மணப்பெண்ணைப் பற்றிய புதுமையான கனவுகளையும் காணத்தொடங்கினேன்.

கணவன் வீட்டில் கழுவுதல், சமைத்தல், சுத்தப்படுத்தல், கூட்டுதல், குறைந்த சீதனம் கொண்டுவந்ததற்காக அவமதித்தல், முறை தவறாமல் அடிவாங்குதல், மனைவியாக எனது கடமையைச் செய்தல்: இவையே என் பணி; அவற்றை ஒழுங்காகச் செய்துவந்தேன். இந்து நூல்களில் ஒரு பெண் அவளுடைய பழக்க வழக்கத்தில் அடிமை போலவும், உணவு (பால்) ஊட்டும் காலங்களில் தாயாகவும், படுக்கையறையில் போகமூட்டும் துணைவியாகவும் இருக்க வேண்டுமென வரையறுக்கப்பட்டுள்ளாள்.

எங்களுக்கு 3600 மில்லியன் இறைவனும், இறைவியும் இருக்கின்றார்கள். ஒரு தனிப் பெண்ணுக்கு, இவர்கள் எல்லோருக்காகவும் விரதம் இருப்பது சாத்தியமானதல்ல. ஆனால், என்னுடைய கணவனின் நலனுக்காகவும், ஒரு மகனைப் பெறுவதற்காகவும் நான் பல சடங்கு முறைகளையும் விரதங்களையும் பின்பற்றுகின்றேனா என கண்காணிக்கப்பட்டேன். ஒரு பெண் பிள்ளையை பெற்றதன் மூலம், என்னுடைய பிரார்த்தனைகள் வீண்போயின. ஒவ்வொருவரும் அவளுடைய பிறப்புக்காக புறுபுறுத்தனர். என்னுடைய கணவன் பல நாட்கள் என்னுடன் கதைப்பதைப் புறக்கணித்தார். பல வாரங்களுக்கு என்னுடைய மகளைக் கூடப் பார்க்கவில்லை. என்னுடைய துரதிர்ஷ்டத்திற்காக என் கணவன் வீட்டார், என்மீது பழிசுமத்தினர். இரண்டாவது பிள்ளைப் பேற்றின் போது நீ ஒரு மகனைப் பெற்றுத்தராவிட்டால், என்னை வீட்டை விட்டு வெளியேற்றிவிட்டு, எனது கணவனை வேறொரு பெண்ணுக்குத் திருமணம் செய்து கொடுக்கப்போவதாக என்னைப் பயமுறுத்தினர். பின்பு, அதிர்ஷ்டவசமாக நான் ஒரு ஆண் பிள்ளையைப் பெற்றேன்.

எல்லோரும் சந்தோசமடைந்தார்கள். என்னுடைய கணவனும், வீட்டாரும் இனிப்புகள் வழங்கினர். என்னுடைய நண்பி சீலா, அவளுக்கு மகள் பிறந்தவுடன் ஏன் கொலை செய்தாள் என்பதை இதன் பின்பே புரிந்து கொண்டேன்.

**என்னுடைய மகள் பாரபட்சமாக நடத்தப்படும் போதெல்லாம் நான் மிகவும் கோபப்படுவேன். நான் பலவீனமானவளாக இணைந்து போகிறவளாக, சிற்றின்பத்துக்கு மட்டுமுரியவளாக இருந்தால் என்னை நன்றாக உபசரிக்கவோ, மரியாதை செலுத்தவோ மாட்டார்கள் என்பதை திருமணம் முடித்த கடந்த ஏழு வருடத்தில் புரிந்துகொண்டேன். ''ஏன் என்னை உறுதியுள்ளவளாக மாற்றமுடியவில்லை'' என எனக்குள்ளேயே நான் கேட்டுக்கொள்வேன்.**

**இப்பொழுது நான் என்னுடைய மனதை உறுதியாக்கிக் கொண்டேன். என்னுடைய மகளின் உரிமையில் நான் உறுதியாக இருக்கிறேன். அவளை நன்றாகப் படிக்கவைப்பதிலும், தன்னம்பிக்கை, உற்சாகம், நம்பிக்கை, பொருளாதார ரீதியான சுதந்திரம் உள்ளவளாக மாற்றுவதுமே எனக்குத் தேவையானவை.**

**ஆங்கிலத்தில்:- விபூகுடி பட்டேல், இந்தியா.**

**தமிழில்:-H.A.S.செல்லம்மா**

அடுத்து முஸ்லீம் சமூகத்தில் பெண்கள்



# நான் யார்?

*சப்பாத்துக்களையும் காலுறைகளையும்*
*விற்றுக்கொண்டிருக்கிற பெண்ணல்ல நான்...*
*சுவரினுள்ளே உயிரோடு புதைத்தாயே*
*அந்த அவள்தான் நான் **
*நான் குற்றமற்ற இளங்காற்றாய் மாறினேன்.*
*கற்களும், சீமெந்தும் ஓசைகளைப் புதைக்காது*
*என்பதை நீ அறிந்திருக்கவில்லை.....*

*மேலும் நான் யாரென்றால்...*
*பழமைகளுக்கும், கந்தியான சடங்குகளுக்குள்ளும்*
*புதைத்தாயே..... அவளேதான்*
*வெளிச்சம் இருட்டுக்கு எப்போதும்*
*பயந்ததில்லை என்பதையும் நீ அறிந்திருக்கவில்லை.*

*உதடுகளிலிருந்து மலர்களை எடுத்துவிட்டு*
*முட்களையும், விறகுச் சுள்ளிகளையும்*
*எவளுக்குத் திருப்பிக்கொடுத்தாயோ*
*அவள்தான் நான்*
*பாவம்..... நீ, நறுமணங்களை கைது செய்ய முடியாது*
*என்பது உனக்குத் தெரிந்திருக்கவில்லை.*

*கற்பெனும் பெயரால்*
*நீ வாங்கி விற்றவளும் நான் தான்.*
*களிமண் சாடியில் மிதந்து செல்கிற*
*'சொஹ்னி' ** ஒரு போதுமே இறக்கமாட்டாள் என்பது*
*உனக்குத் தெரியாது.*

*உன் தலைக்குப் பாரமாயிருக்கின்றதென்று*
*நீ யாரைக் கை(தட்டி) விட்டாயோ*
*அந்த... அவள்தான் நான்.*
*''சிந்தனையை அடகுவைத்திருக்கும் ஒரு தேசம்*
*ஒருபோதுமே விழித்துக்கொள்வதில்லை.''*
*என்பது கூட உனக்குத் தெரிந்திருக்கவில்லை.*

*என்னுடைய கற்பின் பெயராலும்*
*என்னுடைய ஒழுக்கத்தின் பெயராலும்...*
*இன்னும்.... எனது விசுவாசம்,*
*தாய்மைத்துவ அன்பு*
*என்கிற பெயர்களாலும்*
*என்னை நீ வியாபாரப்படுத்தினாய்....*
*ஆனால்.... இனியும் நான் அவளல்ல*
*இது-*
*உதட்டிலும், மனதிலும் பூக்கள் மலர்கிறநேரம்.*

*சப்பாத்தும், காலுறையும் விற்கிறவளோ......*
*அரையாடையுடுத்தி விளம்பரத்தில்*
*நிற்கிறவளுமோ அல்ல நான் இனியும்.*

**ஆங்கிலமூலம்:- கிஷ்வர் நஹீட்**
**தமிழில்:- எம்.கே.எம்.ஷகீப்**

* பேராசிரியர் ஜஹாங்கீர் இளவரசராயிருந்த போது, அவருடன் காதல் தொடர்பு கொண்டமைக்காக ஓர் அழகான வீபச்சாரி உயிருடன் புதைக்கப்பட்டாள். அதனையே இங்கு கவிஞர் குறிப்பிடுகின்றார்.

** சொஹ்னி- ஒரு சோகக் காதல் கதையொன்றின் கதாநாயகி. தனது காதலனை காண்பதற்காக பெரிய மண்சாடியொன்றில் ஆற்றைக் கடக்க முயன்று மூழ்கிப்போனதாகவும், அவளின் நல்ல மண்சாடியை எடுத்துவிட்டு பதிலாக கூடாத மண்சாடியை வைத்துவிட்டதாலேயே அவள் மூழ்கநேர்ந்ததென்றும் அக்கதையில் குறிப்பிடப்படுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# கிழக்கு முஸ்லிம்களின் சமூக இருப்பு ஒரு கேள்விக்குறி?

**மருதூர் பஷீத்**

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து முஸ்லீம்களை வெளியேறும்படி, புலிகளினால் அனுப்பப்பட்டதாகக் கூறப்படுகின்ற கடிதங்களினால், கிழக்கு முஸ்லீம்களின் இருப்பு கேள்விக்குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. இக்கடிதங்கள் யாரால் அனுப்பப்பட்டன என்பது தெளிவாகத் தெரியாததால், கிழக்கு முஸ்லீம்களை அச்சத்துக்குள்ளாக்க வேண்டும் என்பதற்காக, யாரோ திட்டமிட்டுச் செய்திருக்கின்ற ஒரு செயல் என்று இதை கிழக்கு முஸ்லீம்கள் ஒதுக்கி விட முடியாது. ஏனெனில், இது சிறுபிள்ளைகளின் கண்ணாமூச்சி விளையாட்டு விவகாரம் அல்ல; இது கிழக்கு முஸ்லீம்களின் இருப்புடன் நேரடியாகப் பிணைந்திருக்கின்ற அதிமுக்கியமான சமூக, அரசியல் விவகாரம். இதன் பின்னர், கிழக்கு முஸ்லீம்கள் இரண்டு விடயங்களை உலகத்தின் முன் உறுதியாக வெளிப்படுத்த வேண்டியவர்களாக உள்ளார்கள். முதலாவதாக, **கிழக்கு தமது பாரம்பரியப் பிரதேசம் என்பதையும், அதில் தமது சொந்தத் தீர்மானத்தின்படி வாழ்வதற்குத் தமக்கு உரிமை இருக்கின்றது என்பதையும், இரண்டாவதாக 'தமது சமூக இருப்பை ஒரு விளையாட்டுப் பொருளாக்குவதற்கு எவருக்கும் உரிமை இல்லை** என்பதையும் அவர்கள் தெளிவாக வெளிப்படுத்த வேண்டிய காலம் வந்து விட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து முஸ்லீம்கள் வெளியேற வேண்டும் என்று கூறுகின்ற கடிதங்கள் யாரால் அனுப்பப்பட்டிருக்கலாம் என்பது தொடர்பாக இரண்டு பிரிவினர் சந்தேகத்திற்குள்ளாகின்றனர். ஒன்று விடுதலைப்புலிகள்; மற்றது தமிழ், முஸ்லீம் ஒற்றுமையைக் குலைக்க முயற்சிக்கின்ற சக்திகள் (அதாவது அரசு, அரசபடைகள், முஸ்லீம் தலைமைகள், பிற தமிழ், அமைப்புகள், அரச படைகளுடன் இணைந்து செயற்படுகின்ற சில முஸ்லீம் நபர்கள்.... போன்றவர்கள்) இந்த இரு பிரிவினரையும் சமமுக்கியத்துவத்துடன் கிழக்கு முஸ்லீம்கள் மதிப்பிட வேண்டும். இத்தகைய மதிப்பீடு, வெறுமனே, கடிதங்களை யார் அனுப்பியிருக்கலாம் என்பதைக் கண்டு கொள்வதற்கான ஒரு முயற்சியாக இருக்கக்கூடாது. மாறாக இந்த மதிப்பீட்டுக்கூடாக தமது இருப்பை உறுதிப்படுத்துவதற்குரிய திட்டவட்டமான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்ற அவசியத்தின் விளைவாக இதுஅமைய வேண்டும். இத்தகைய மதிப்பீட்டிற்கான முன்வரைவு ஒன்று இக்கட்டுரையினூடாக முன்வைக்கப்படுகின்றது.

இந்தக் கடிதங்களை தாங்கள் அனுப்பவில்லை என்று புலிகள் அமைப்பினர் இப்போது மறுத்திருக்கிறார்கள். கடிதங்கள் ஒரு வாரத்திற்கு முன்பே அனுப்பப்பட்டிருந்தும், அக்கடிதங்களினால் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம்களிடையே பதட்டமும், பரபரப்பும் ஏற்பட்டிருந்தும் கூட அவற்றைத் தாம் அனுப்பவில்லை என்று மறுப்பதற்கு புலிகள் அமைப்பினர் ஒரு வாரத்திற்கும் கூடுதலாகக் காத்திருக்கிறார்கள். புலிகள் அமைப்பினர், உண்மையிலேயே கிழக்கு முஸ்லீம்களின் சமூக இருப்பையும், உரிமைகளையும் அங்கீகரிப்பவர்களாக இருந்தால், இவை இரண்டுக்கும் அச்சுறுத்தலாக அமைகின்ற விதத்தில் தமது பெயரில் அனுப்பப்படிருக்கின்ற இக்கடிதங்கள் குறித்து உடனடியாக மறுப்பைத் தெரிவித்திருக்க வேண்டும். பதிலாக, இதை மறுப்பதற்கு, இவ்விவகாரம் வெகுஜனத் தொடர்பூடகங்களுக்கூடாக வெளிப்படுத்தப்படும்வரை புலிகள் அமைப்பினர் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை.

புலிகள் அமைப்பினர், கிழக்கை தமது பாரம்பரியப் பிரதேசமாகக் கொண்டிருக்கின்ற மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம்களையும் மொத்தமாக கிழக்கு முஸ்லீம்கள் அனைவரையும் அங்கிருந்து வெளியேற்ற முயற்சிக்க மாட்டார்கள் என்பதற்கு எந்தவிதமான தர்க்க நியாயங்களும் முன்வைக்கப்பட முடியாது. புலிகள் அமைப்பினர், கிழக்கின் முஸ்லீம் பிரதேசங்களில் பல தடவைகளில் திட்டமிட்டரீதியில் தாக்கி அழித்திருப்பதையும், நூற்றுக்கணக்கான முஸ்லீம்களைப் படுகொலை செய்திருப்பதையும் வடக்கை தமது பாரம்பரியப் பிரதேசமாகக் கொண்ட முஸ்லீம்களை அங்கிருந்து முற்றாகவே வெளியேற்றியிருப்பதையும் கவனத்தில் கொள்ளும் போது, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம்களை வெளியேறும்படி கூறுகின்ற கடிதங்கள் புலிகள் அமைப்பினரால் அனுப்பப்படவில்லை என்று இலேசாக ஒதுக்கி விட முடியாது. மேலும் கிழக்குப் பல்கலைக்கழக நிர்வாகிகள் மற்றும் விரிவுரையாளர்கள் மத்தியில் பேசிய, கிழக்கு மாகாண புலிகள் அமைப்பின் பொறுப்பாளரிடம் கிழக்கு முஸ்லீம்கள் தொடர்பாக வினவப்பட்ட போது, 'கிழக்கு முஸ்லீம்கள் மீது நடவடிக்கைகள் எடுப்பது குறித்து தமது தலைமை இன்றுவரை எவ்வித அறிவித்தலையும் வழங்கவில்லை என்றும், எனினும் எதிர்காலத்தில் எத்தகைய முடிவுகள் எடுக்கப்படும் என்பது குறித்து தான் உத்தரவாதம் தரமுடியாது' என்றும் அவர் கூறியிருப்பது ஒரு சாதாரண விடயமல்ல; அத்துடன் ஏப்ரல் 19ல் தற்காலிக யுத்த நிறுத்தம் முடிவடைந்த பின்னர், மட்டக்களப்பு தமிழ் மக்களிடையே 'அங்குள்ள முஸ்லீம்களை புலிகள் அமைப்பினர் வெளியேற்றுவார்கள்' என்ற அபிப்பிராயம் நிலவி வருகின்றது. இத்தகைய பின்னணியில் இந்தக் கடிதங்களுக்கும் புலிகள் அமைப்பினருக்கும் தொடர்புகள் உண்டு என்று கருதுவதற்கு வாய்ப்புகள் உண்டு. இவ்வகையில் கிழக்கு முஸ்லீம்கள், புலிகள் அமைப்பினரின் மறுப்பில் முழுமையாக நம்பிக்கை வைத்து, செயலற்று இருப்பது ஒரு விதத்தில் **சமூகத் தற்கொலை முயற்சியாகவே** இருக்கும். புலிகள் அமைப்பினர் அரசபடைகள் மீதான தமது தாக்குதல்களைத் தவிர, தாம் மேற்கொண்ட ஏனைய நடவடிக்கைகளை இன்று வரை ஏற்றுக் கொள்ளவில்லை அல்லது அவற்றில் உள்ள தமது தவறுகளை மனப்பூர்வமாக ஒப்புக்கொள்ளவில்லை என்ற உண்மையை கிழக்கு முஸ்லீம்கள் நினைவில் கொள்வது அவசியம்.

வடக்கு முஸ்லீம்களைப் போன்று, கிழக்கு முஸ்லீம்களையும் அவர்களின் பாரம்பரியப் பிரதேசங்களில் இருந்து வெளியேற்றுவது புலிகள் அமைப்பினரின் இலக்காக இருக்கின்றது என்பது தர்க்கரீதியில் நிரூபிக்கப்படக் கூடியதாக இருக்கின்றது. முதலாவது தமிழீழத் தாயகம் என்று புலிகள் அமைப்பினர் கூறுகின்ற பிரதேசங்களை தமது **தலைமைகளையும், ஆதிக்கத்தையும் ஏற்றுக் கொள்கின்ற** மக்களைக் கொண்ட பரப்பாக மாற்றுவதற்கு புலிகள் எப்போதும் முயற்சித்து வந்திருக்கிறார்கள். இத்தகைய முயற்சிக்குத் தடையாக இருப்பவர்களாக வடக்கு கிழக்கையே தமது பாரம்பரியப் பிரதேசங்களாகக் கொண்ட முஸ்லீம்கள் இருந்து வந்திருக்கிறார்கள். இவர்கள் புலிகள் அமைப்பினரின் தலைமையையும் அவர்களினால் கட்டுப்படுத்தப்படுவதையும் ஏற்க மறுப்பதோடு, தமக்கென தனியான அதிகார அலகையும் கோரி நிற்கின்றார்கள். தமிழீழ எல்லைக்குள் **தம்மைத் தவிர** வேறு எந்த தமிழ் அரசியல் அமைப்புக்களும் செயற்படுவதைத் தடுத்திருக்கின்ற புலிகள் அமைப்பினர் வட-கிழக்கு முஸ்லீம்களின் சுயமான அரசியல் செயற்பாடுகளை அங்கீகரிப்பார்கள் என்பதற்கு எந்த நியாயமும் முன்வைக்கப்பட முடியாது.

இரண்டாவது புலிகள் அமைப்பினர் தமது இராணுவச் செயற்பாடுகளுக்கு **தடையற்ற முறையில்** போக்குவரத்துச் செய்யக்கூடிய பிரதேசப் பரப்பு அவசியம் எனக் கருதுகிறார்கள். இத்தகைய தடையற்ற செயற்பாடுகளுக்கு, வட-கிழக்கில் இருக்கின்ற முஸ்லீம் பிரதேசங்கள் தமக்குத் **தடையாக இருப்பதாகப்** புலிகள் அமைப்பினர் கருதுகிறார்கள்; எனவே வட, கிழக்கு முஸ்லீம்களை அங்கிருந்து வெளியேற்றுவது அவர்களுக்கு அவசியமாக இருக்கின்றது. இவ்வகையில் வடக்கிலிருந்து முஸ்லீம்களை முற்றாக வெளியேற்றியிருப்பதன் மூலம் புலிகள் அமைப்பினர் தமது இலக்கின் ஒரு பகுதியை நிறைவேற்றியிருக்கிறார்கள். இப்போது அவர்கள் தமது இலக்கின் அடுத்த பகுதியை கிழக்கில் ஆரம்பித்திருக்கிறார்கள் என்று கருதுவது பொருத்தமானதே. எனினும் கிழக்கில் புலிகள் அமைப்பினரின் ஆதிக்கம் எல்லைக்குட்பட்டதாக இருப்பதாலும், அரசபடைகளின் தாக்குதல்களை பல்வேறு முனைகளிலிருந்தும் முகம் கொடுக்க வேண்டியிருப்பதாலும், கிழக்கு முஸ்லீம்களை வெளியேற்றுகின்ற தமது நடவடிக்கைகளை அவர்கள் கட்டம், கட்டமாக மேற்கொள்ள முயற்சிப்பார்கள் என்று கருதலாம். இவ்வகையில் கிழக்கு மாகாணத்தில், மிகப் பெரும்பான்மையில் தமிழ் மக்களைக் கொண்டிருக்கின்ற மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து முஸ்லீம்களை வெளியேற்றுவதற்கு புலிகள் அமைப்பினர் முயற்சிப்பார்கள் என்பது இலகுவாகப் புரிந்து கொள்ளக்கூடிய விடயம். இந்த அடிப்படையில், மட்டக்களப்பு முஸ்லீம்களை வெளியேறும்படி அனுப்பப்பட்டுள்ள கடிதங்களை ஒரு போலியான அச்சுறுத்தல் என்றோ அல்லது அவற்றைப் புலிகள் அமைப்பினர் அனுப்பவில்லை என்றோ கிழக்கு முஸ்லீம்கள் அப்பாவித்தனமாக நம்பிவிட முடியாது.

**-அடுத்த இதழில் முடியும்**

# பிரபாகரனை பிடித்தனுப்புவதில் அரசு எதிர் நோக்கும் சிக்கல்!

எதிரிக்கு எதிரி உற்ற நண்பன் என்பதற்கு இணங்க இன்று அரசும், தென்னிலங்கை இனவாதிகளும் மிகவும் எதிர்பார்த்திருக்கும் இந்திய உதவி இன்னும் திட்டவட்டமாகத் தீர்மானிக்கப்பட்டதாகத் தெரியவில்லை.

பிரபாகரனைப் பிடித்தனுப்பும் ஆணை விடயத்தில் இலங்கை எவ்வாறு நடந்து கொள்கிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க விரும்புகிறது டெல்லி.

சந்திரிகா அரசிற்கு இதில் ஒரு சிக்கல் உண்டு. அதாவது பிடித்தனுப்பும் ஆணையைத் தாமதமின்றி வழங்கிவிட்டால் புலிகளுடன் பேசுவதென்ற கதையே இல்லாமல் போய்விடும். போர் இன்னும் உக்கிரமாகத் தொடரும். இதன் பொருளாதாரப் பக்கவிளைவுகள் தென்னிலங்கையில் அரசிற்கு எதிரான உணர்வை காலப்போக்கில் தோற்றுவிக்கும். ஆகவே பிடித்தனுப்பும் விஷயத்தில் அரசின் கரிசனை தற்சமயம் கொஞ்சம் குறைந்துள்ளது போல் தெரிகிறது.

அண்மையில் இது பற்றிக் கருத்துத் தெரிவித்த சட்டமா அதிபர் திணைக்களப் பேச்சாளர் ஒருவர் பிடித்தனுப்பும் விஷயம் நீதிமன்றத்தில் பல வருடங்கள் இழுபடலாம் எனக் கூறினார். இதற்கு அவர் காட்டிய உதாரணம்: அவுஸ்திரேலியாவில் நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் பண மோசடியில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டு அவுஸ்திரேலிய அரசால் வேண்டப்பட்ட பிலிப்பென் வெர்லின் வழக்காகும். இந்தப் பிடித்தனுப்பும் வழக்கு 10 வருடங்கள் நடந்தது. அத்துடன் பென்வெர்லை அவுஸ்திரேலியாவிடம் கையளிப்பதற்கு எதிராகவே இலங்கை உயர் நீதிமன்றம் கடைசியில் தீர்ப்பு வழங்கியது.

இந்த அடிப்படையில் பார்த்தால் பிரபாகரனை அனுப்பும் வழக்கும் நீடிக்க வாய்ப்புண்டு. இதற்கிடையில் தன்னை ஆதரித்து வரும் தமிழ் கட்சிகள் விடயத்திலும் அரசு தற்போது சில சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் முன்னாள் ஈழவிடுதலைக் குழுக்களான புளொட்டும், ஈ.பி.டி.பியும், அரசு ஒரு பாரிய யாழ் படையெடுப்பின் மூலம் புலிகளை பலவீனப்படுத்திவிட்டால், அதன் பின் ஒரு சரியான தீர்வை முன்வைப்பதில் அதற்கு எந்த நிர்ப்பந்தமும் இருக்காது என நம்புகின்றன. புலிகள் வீழ்ந்தால் தென்னிலங்கை இனவாதம் தமிழ் மக்களுக்கு ஒரு கிராமசேவை அளவு அதிகாரம் கூட கிடைக்க முடியாத ஒரு சூழ்நிலையை நிச்சயம் தோற்றுவித்துவிடும் என்பது அவர்களது நிலைப்பாடு.

எனவே புலிகள் மீது ஒரு பாரிய தாக்குதலை அரசு தொடங்கு முன்னர் இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வை அது உடன் முன்வைக்க வேண்டுமென அவை எதிர்பார்க்கின்றன.

## கூட்டணிக்குள்...

இதற்கிடையில் கிழக்கு மாகாணத்தில் நடைபெற்றுள்ள அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை நிரந்தரமாக்கிட ஒருவகையில் உதவிடக்கூடிய காணிகள் (திருத்த) சட்டத்திற்கும் ஆதரவு வழங்கலாம் என புளொட்டிற்கு ஆலோசனை வழங்க முற்பட்டிருக்கின்றனர் நீலன் திருச்செல்வமும், தங்கத்துரையும்.

கடைசி நேரம், இச்சட்டத்தின் பயங்கரமான விளைவுகள் பற்றி சில அக்கறையுள்ள தமிழ் அதிகாரிகள் கூறியதையடுத்து புளொட் அச்சட்டத்தை ஆதரிக்காமல்விட்டது. இதில் பெரும்பகிடி என்னவெனில் இச்சட்டம் மாகாணசபைகளுக்கு 13ம் திருத்தச் சட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை மறுதலிக்கின்ற காரணத்தால் அரசியல் யாப்பிற்கு முரணானது; எனவே செல்லுபடியாகாது என வாதிட்டு சபாநாயகருடன் பிரச்சினை கிளப்பியுள்ளது ஐக்கிய தேசியக் கட்சி. இந்த விடயத்தில் முன் நின்றிருக்க வேண்டியவர்கள் சட்ட வல்லுநராக தம்மைக் காட்டிக் கொள்ளும் கூட்டணியினர்.

அடுத்து பாதுகாப்பு வரி அதிகரிப்புத் தொடர்பான வாக்கெடுப்பின் போது அதைக் கடுமையாகத் தாக்கிப் பேசினார் ஜோசப் பரராஜசிங்கம். மற்ற மட்டு.பா.உ. செல்வராசாவும் அதைக் கண்டித்தனர். இந்தப் பாதுகாப்பு வரி அதிகரிப்புப் பற்றிப் பேசுகையில்தான் அனுருத்த ரத்வத்த போரை ஒரு வருடத்திற்குள் முடித்திடுவோம். இது பொ.ஐ.ஐ.மு. வழங்கும் உறுதி எனப்பேசியிருந்தார். யாழ்ப்பாணத்தில் பேரழிவு நிச்சயம் என்பதே அவரது கூற்றின் தெளிவான அர்த்தம். அப்படியிருக்க, தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பாதுகாப்பு வரியை ஆமோதித்தது அளிக்கும் வாக்கு அரசின் யாழ். படையெடுப்பையும் அதன் விளைவுகளையும் அங்கீகரிப்பதற்குச் சமனாகிவிடும் என்பது ஜோசப்பரராஜசிங்கத்தின் நிலைப்பாடு.

இவ்விடயம் தொடர்பாக இப்படி உங்கள் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பேசுவது அரசிற்குச் சங்கடமாக உள்ளது என நீலன் திருச்செல்வத்தை அழைத்து ஜீ.எல்.பீரிஸ் சொன்னதாக ஒரு பொ.ஐ.ஐ.மு. பிரமுகர் கூறியுள்ளார்.

இதையடுத்து நீங்கள் என்ன கணக்கில் பாதுகாப்பு வரிக்கு எதிராகப் பேசலாம் என ஜோசப்பரராஜசிங்கத்துடன் வாதிட்டிருக்கிறார் மு.சிவசிதம்பரம். இதில் நீலன் திருச்செல்வம் பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார் என்பது பலருக்குப் புரியவில்லை என கவலைப்பட்டார் இதைப் பற்றிக் கூறிய ஒரு கொழும்பு வாழ் கட்சித் தொண்டர்.

அத்துடன் ஜோசப்பரராசிங்கம் இவ்வாறு பல விடயங்களில் ஒரு திட்டவட்டமான நிலைப்பாட்டுடன் செயல்படுவதும் அவருக்குப் பக்கபலமாக மற்றைய இரு மட்டு. பா.உக்கள் இருப்பதும் கூட்டணித் தலைமைக்குச் சங்கடமாக இருப்பதால் அவர்களுடைய இறக்கைகளைக் கத்தரிக்கும் வகையில் பல விடயங்களையும் கொழும்பு கூட்டணித் தலைமையகத்தினூடாகவே செய்ய வேண்டுமெனவும், இன்னும் சில முக்கிய விடயங்களை மத்திய குழுவினூடாகவே செய்ய வேண்டுமெனவும் முயற்சி நடப்பது கட்சிக்கு நல்லதல்ல என்பதும் சில ஆதரவாளரின் கருத்து.

கூட்டணியின் இந்த மாதிரியான அலுவல்களுக்கெதிராக உறுதியான நிலைப்பாடெடுத்துச் செயல்படாவிட்டால் இராசதுரையை முன்னர் ஓரங்கட்டி அவருக்கு எதிராக வெளிப்படையாகவே காசியை மோதவிட்டு இறுதியில் துரோகப்பட்டமும் சூட்டியது போல், உங்களையும் அவர்கள் சாதுரியமாக மட்டந்தட்டிவிடுவர் என ஜோசப்பரராஜசிங்கத்தின் பழைய ஆதரவாளர் பலர் அவரை இடித்துரைக்கின்றனர். அத்துடன் கூட்டணி இன்று மறுவாழ்வு பெற்றது ஜோசப்பரராஜசிங்கத்தின் முயற்சியால் தான் என்பதைக் கூட்டணி சற்றேனும் எண்ணிப்பார்க்காமல் செயல்படுகிறது என்பதும் அவர்கள் கருத்து.

இந்தப் பிரச்சினைகளுக்குச் சிகரம் வைத்தாற்போல் அமைந்தது ஜூன் 24 அன்று நடந்த கூட்டணியின் மத்திய குழுக்கூட்டம். அன்று முழுக்க மிகவும் காரசாரமாக குரல்கள் ஓங்கி ஒலித்த வண்ணம் கூட்டம் நடைபெற்றது.

இறுதியில் ஜோசப்பரராஜசிங்கத்தின் நிலைப்பாடே பலம்பெற்றது!.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## கரையொதுங்...

ணைகளை முற்றாகத் தொடராமை இப்படு கொலைகள் தொடர்வதற்கான அங்கீகாரத்தை யாராவது வழங்கியிருக்கிறார்களா என்ற ஐயத்தைக் கிளப்புகிறது. ஏனெனில் கீக்கியானகந்த சம்பவத்தை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம். களுத்துறை கீக்கியானகந்த தோட்டத்தில் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்களால் பலகாலமாக கசிப்பு விற்பனை செய்யப்பட்டு வந்திருக்கிறது ( தோட்டப் புறங்களில் இந்த அடித்தர வர்க்க தொழிலாளர் பலரது ஊதியம் பெரும்பாலும் கசிப்பு போன்ற மதுபானங்களுக்கு செலவாவது அறிந்ததே) அத்தோட்டத்தில் விழிப்புணர்வு பெற்ற சிலர் இதனை எதிர்க்கத் தொடங்கவே, கசிப்பு விற்பனையார்களுக்கும் தோட்ட மக்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. அதைத் தொடர்ந்து தோட்ட மக்களை தாக்கவந்த இடத்தில் கசிப்பு விற்பனைக் கோஷ்டிகளைச் சேர்ந்த பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டுவிட்டார். அதன்பின் அந்த பகுதியில் தமிழர்கள் தொடர்ந்தும் தாக்குதலுக்கும் இம்சைக்கும் உள்ளாக்கப்பட்டிருக்கின்றனர்.

இறுதியில் நல்லசிவம் (வயது 48) எனும் தொழிலாளி இராமர் என்ற தொழிலாளியுடன் கடைக்குச் சென்று திரும்புகையில் இருவரும் தாக்கப்பட்டிருக்கின்றனர். இராமர் தப்பியபோதும் நல்லசிவத்தை அடித்து கொண்டு போனார்கள். பின்னர் இவரது சடலம் களுத்துறை கடற்கரையில் கரையொதுங்கியது. மேற்படி கசிப்பு விற்பனை பகிரங்களாக பலகாலமாக நடந்து வருகிற போதும் பொலிஸார் கண்டும் காணாமலே இருந்திருக்கின்றனர். அதற்கான காரணம் அவர்களுக்கு மாதாந்தம் கிடைக்கும் மாமூலே எனப் பேசப்படுகின்றது. மேற்படி சம்பவங்கள் வன்முறையாக தலைதூக்கிய போதும் பொலிஸார் கசிப்பு விற்பனையாளர்கள் சார்பு போக்கையே கடைப்பிடித்திருக்கின்றனர். நல்லசிவம் கடத்தப்பட்டார் என்பதையும் கடத்தியவர்கள் யார் என்பதையும் இராமர் பொலிஸாருக்கு இனங்காட்டியும் கூட இதுவரை அவர்கள் மீதான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றே தெரிகிறது. இந்த பகுதிக்கு பொறுப்பான திபுவன பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஹீன்கந்த என்பவர் முன்னாள் ஜனாதிபதி டி.பி.விஜேதுங்கவின் மருமகன் என்பதும் இங்கு குறிப்பிட வேண்டிய ஒன்று.

**என்.எஸ்.குமரன்**

## பிரக்ஞை...

னிக் கிடவோம்' சிறப்பான நாடகமாக அமைந்தது. நவீன அரங்க உத்திகளுடன் கூடிய நாடகம் அது. பார்வையாளர்களின் தீர்ப்பும் அவ்வாறே இருந்தது. பெண்நிலைவாதம் பற்றிய ஆண்களின் நாடகம் என்ற வகையிலும் அதற்கு ஒரு முக்கியத்துவம் இருந்தது.

ஆனால் மேற்குறித்த நாடகம் பின்தள்ளப்பட்டது. இந்நாடகம் பெண் விடுதலை பற்றி உரக்கப் பேசிய நாடகம். பெண்கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்திய நாடகம். இக்கருத்துக்கள் நடுவர்களிற்குப் பிடிக்காமற் போய்விட்டன. இந்நாடகம் நவீன அரங்க அம்சங்களைக் கொண்டது இதனாலும் நடுவர்கள் இதனை நிராகரிக்க மேலதிக நியாயம் உண்டு போலும்!'' எது எப்படியோ கொழும்பு நாடக அரங்க வரலாற்றில் ஒரு முக்கிய நாடகம் நிராகரிக்கப்பட்டிருக்கிறது இது அவலம்தான்'' என்று அபிப்பிராயப்பட்டார் நாடகப்பட்டறையைப் பற்றியே இரவும் பகலும் கனவு காணும் அன்பர் ஒருவர்.

இனிமேலாவது நாடகப் போட்டியை நடாத்துபவர்கள் நாடகம் தெரிந்த, நாடகத் தயாரிப்பில் ஈடுபட்ட, நாடக விமர்சகராக உள்ள, குறைந்த பட்சம் நடிகர்களாக உள்ளவர்களையாவது நடுவர்களாகத் தெரிவு செய்வது மிகவும் அத்தியாவசியம்.

இதற்கு நாடப்பிரக்ஞை மட்டுமல்ல, ஆணாதிக்கம், பெண்நிலைவாதம் தொடர்பான அரசியல் பிரக்ஞையும் வேண்டும்.

## புலிகளுக்கு...

வட்டமாகத் தன்னுடைய அறியாமையை ஜனாதிபதி வெளியிட்டமையே தவிர வேறொன்றுமில்லை. இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்கு முன்பாகவே ஜூன் 1986 இல் 'த வீக்' பத்திரிகையாளரான பவான்சிங் இற்கு அளித்த பேட்டியொன்றில் 'எமது மக்களின் அபிலாஷைகளைத் தீர்த்து வைக்கக் கூடிய பொருத்தமான அரசியல் கட்டமைப்பு ஒன்று முன்வைக்கப்பட்டு, சர்வசஜ வாக்கெடுப்பு ஒன்றின் மூலம் அங்கீகரிக்கப்படுமானால் ஈழக்கோரிக்கையை நாம் மீள் பரிசீலனை செய்வோம்'' என்று அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதியின் இத்தகைய அறிக்கைகளுக்கூடாக எத்தகைய நம்பிக்கையையும் புலிகள் பெற்றிருக்க முடியாது. எனவே எட்டு மாதப் பேச்சுவார்த்தைகளின் போது அரசிடமிருந்து கறக்கக்கூடிய எல்லாவற்றையும் கறந்துவிடப் புலிகள் முடிவு செய்ததில் வியப்பில்லை. புலிகள் பற்றியும் தமிழ் மக்கள் பற்றியுமான ஜனாதிபதியின் அறிவுக்குறைவு மார்ச்மாத ஆரம்பத்திலேயே வெளிப்பட்டது: ''வடபுலத்து மக்கள் எங்களுடைய பக்கம்தான் உள்ளனர். புலிகள் எதைத்தான் சொன்னாலும்/ செய்தாலும் வடபுலத்து மக்களின் இதயத்தையும் சிந்தையையும் நாங்கள் வெற்றி கொண்டுவிட்டோம்'' என்று அவர் அறிவித்தார்.

காலங்காலமாகவே சிங்கள அரசுகளின் மீது தமிழ் மக்கள் அவநம்பிக்கை கொண்டிருந்தார்கள். தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டு, கொல்லப்பட்டு, அவர்களுடைய உடைமைகள் அழிக்கப்பட்டு வந்தமைக்கான பொறுப்பு தொடர்ந்து வந்த சிங்கள அரசாங்கங்களையே சார்ந்தது என்பதை வடபுலத்து முதியோர் நன்கறிவர். இளைய தலைமுறைக்கு தமிழ் மக்களின் ஒடுக்குமுறை பற்றி நன்றாகப் புகப்பட்டப்பட்டிருக்கிறது. கடந்த பல வருடங்களாகப் புலிகளைத்தான் தமது பாதுகாவலர்களாகத் தமிழ் மக்கள் நம்பிவந்துள்ளனர். பொருளாதாரத் தடையை நீக்கிவிடுவதால் மட்டும் தமிழ் மக்கள் புலிகளை வீசியெறிந்து விட்டு அரசின் பக்கம் வந்து சேர்ந்து விடுவார்கள் என்று அரசாங்கம் உண்மையாகவே நம்பமுடியுமா?.

இன்னும் மோசமான விஷயம் என்னவென்றால், ''புலிகள் வந்தாலென்ன வராவிட்டாலென்ன சமாதானத்தை பெற்று விடலாம்'' என்று ஜனாதிபதி மாத்தளையில் பேசிய பேச்சு. இது பலருக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியிருக்கும். ஏனென்றால் அதற்குச் சில மாதங்களுக்கு முன்னர்தான் த ஹிந்து பத்திரிகை சார்பில், ''புலிகள்தான் பிரதானமானவர்கள் என்று நீங்கள் கருதுகிறீர்களா? புலிகளை விட்டுவிட்டு வடபுலத்து மக்களிடம் நேரடியாகத் தங்கியிருக்கிற மாதிரி வழிமுறை ஒன்றும் உங்களிடம் இல்லையா?'' என்ற கேட்கப்பட்டபோது,

''அப்படி ஏதாவது வழி இருந்தால் நீங்கள் சொல்லுங்கள். அரசியல் தீர்வு நடைமுறைக்கு வர வேண்டுமானால் நாங்கள் புலிகளுடன் உடன்பாட்டுக்கு வந்தாக வேண்டும். வடபுலத்தில் அதிகாரம் அவர்களிடம் தான் இருக்கிறது'' என்று பதிலளித்திருந்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்பாகவே வடக்குக் கிழக்குக்கான ''மிக விரிவான அதிகாரப் பரவலாக்கல்'' பற்றி அரசாங்கம் பேசியிருந்தது. அப்பேச்சின் தொனி, வடக்குக் கிழக்குக்கு அதிகாரப் பரவலாக்கல் இல்லாமையால்தான் இனத்துவ யுத்தம் ஆரம்பித்தது என்பதாக இருந்தது. காலங்காலமாகத் தமிழ் மக்கள் ஒடுக்கப்பட்டு வந்தபடியாலும் அவர்களது நியாயமான கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத படியாலும்தான் இனத்துவ யுத்தம் மூண்டது என்பதே உண்மை.

தமிழ் மக்கள் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல; இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் வாழ்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினைகளையும் அடிப்படையான அபிலாஷைகளையும் அரசு தீர்த்து வைக்க உரிய வழிமுறைகளைப் பற்றிச் சொல்ல வேண்டும். அது தான் தமிழ் மக்களுடனான இணக்கப்பாட்டை உருவாக்குவதற்கு அவசியமானது.

வடபுலத்து மக்களின் உளப்பாங்கைத் தவறாகக் கணிப்பிட்டுவிட்டது அரசு. தமிழ் மக்களின் இதயங்களையும் சிந்தைகளையும் புலிகளிடமிருந்து வென்றெடுப்பதற்குப் பதிலாக அவற்றைத் திருட முனைந்தது அரசு. வென்றெடுப்பதற்குப் பதில் திருடுவது என்பது புலிகளையும் தமிழ் மக்களையும் ''கொளுவி'' விடுவதாகும். இதனை எப்படி செய்தது அரசு?

பொருளாதாரத் தடையை நீக்கிவிட்டதாகத் தெற்கிலும், வெளிநாடுகளிலும் பிரச்சாரம் செய்தது. வடபுலத்து மக்களிடம் நேரடியாக எவ்விதமான பிரச்சாரமும் செய்யப்படவில்லை. எனவே அரசியல் தீர்வு குறித்துப் பேசுமாறு புலிகளைத் தமிழ் மக்கள் நிர்ப்பந்திக்க வழியில்லாமல் போய்விட்டது. உண்மையிலேயே வடபுலத்து மக்களின் கஷ்டங்களை நீக்கவேண்டும் என்ற உளப்பூர்வமான விருப்பம் அரசுக்கு இருந்ததா என்ற சந்தேகம் எழ நியாயம் உண்டு. ஏனெனில் யுத்தம் மறுபடி ஆரம்பமானதும் உடனடியாகப் பொருளாதாரத் தடையை அமுல்படுத்தியது அரசு.

எந்த நேரமும் பாதுகாப்புணர்வுடன் இருப்பது என்பது புலிகளுக்கு மட்டுமல்ல எல்லாக் கெரில்லா இயக்கங்களுக்குமே பொதுவான ஒன்றுதான். மேலும் சர்வதேச சமூகத்தின் ஆதரவும் அரசுக்குக் கிடைக்கக் கிடைக்க புலிகளின் பாதுகாப்புணர்வு எச்சரிக்கை உணர்வாக மாறுவதை இயல்பாக்கிவிட்டது. இந்த நிலையில் புலிகளின் பயங்களைப் போக்குவதற்கு உரிய வழிவகைகளை அரசு செய்திருக்க வேண்டும். ஆனால் தன்னுடைய அறிக்கைகளாலும் மனோபாவத்தாலும் நிலைமையை மேலும் மோசமாக்கியது அரசு. எனவே ஆபத்து முற்று முழுதாகத்தம்மை விழுங்கிவிட முன்பாகத் தாக்குதலில் புலிகள் ஈடுபட்டமையில் எவ்வித ஆச்சரியமும் இல்லை.

## சமாதானத்துக்கு...

கள், முஸ்லீம் மக்களின் துன்ப துயரங்கள் மலையக மக்களின் துன்ப துயரங்கள் கீழ்த் தென்பகுதி இளைஞர்களின் துன்ப துயரங்கள் இவற்றை ஒன்று சேர்த்து இவர்களுக்கு அதிகாரங்களைக் கொடுத்து இவ்வரசு முறையை மீளப்புனர்நிர்மாணம் செய்ய வேண்டும். அரசியல் தலைவர்களுக்கு இது பற்றிய தெளிவு இல்லாவிட்டாலும் மக்களிடத்தில் முன்னைய காலத்தை விட இது குறித்து சாதகமான போக்கு ஒன்று உள்ளது.

இன்று இனவாதத்தைத் தூண்டும் பாரிய போக்கு ஒன்று உள்ளதைப் போலவே அதற்கு எதிராகப் பேசுகின்ற போக்கும் உள்ளது சாதாரண மக்களே அவ்வாறு பேசுகின்றனர். இன்று இப்போரில் வெற்றி பெற முடியுமா? என அவர்கள் கேட்கிறார்கள். இவ்வாறு முன்பு இருந்ததில்லை.

சமாதானம் பற்றிய கருத்து அரசியல்வாதிகளின் தலைகளிலிருந்து உதித்த ஒன்றல்ல. சமூகத்தில் சாதாரண மக்களிடமிருந்து தான் இத்தகைய குரலொன்று எழுந்தது. அதனைப் பின்பற்றியே இவ்வரசாங்கம் சென்றது.

ஆகக்குறைந்தது சமஷ்டி முறையொன்றிற்காவது தாம் தயார் என்று புலிகள் தெரிவிப்பது பெரிய சமிக்ஞையாகும். சமஷ்டி முறை ஆட்சியொன்றிற்கு அரசாங்கம் தானும் தயாரென்கிறது.

***யுத்தம் புலிகளுக்கு மட்டுமே எதிரானது என்பது பற்றி:***

இப்படிச் சொல்பவர்கள் நகைப்புக்கிடமானவர்கள். புலிகளுக்கு எதிராகத்தான் யுத்தம் என்று சொன்னாலும் யுத்தம் தொடங்கியதும் எல்லாத் தமிழர்களுமே சந்தேகத்திற்கு உள்ளாகின்றனர். புலிகளையும், அப்பாவித் தமிழ் மக்களையும் எவ்வாறு வேறுபடுத்துவது? அப்படியான strategy எதுவும் இல்லை. யுத்தம் யாருக்கு எதிரானதாக இருந்தாலும் பாரியளவில் தமிழ் மக்களையும், முஸ்லீம்மக்களையும் அது பாதிக்கிறது. அது மட்டுமல்ல சிங்களச் சமூகத்தையும் பாதிக்கிறது.

***பேச்சுவார்த்தை மீளத்தொடங்கும் வாய்ப்பு பற்றி:***

பேச்சுவார்த்தைகள் மீளத்தொடங்கும் வாய்ப்புள்ளது. அதற்கான நம்பிக்கையைத் தலைவர்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டும். நம்பிக்கை இல்லாவிடின் எதனையும் ஏற்படுத்த முடியாது. முதலில் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டியது வேறொரு பிரச்சினையையும் தீர்க்கவல்ல; நாம் ஏதாவது கொடுக்கல் - வாங்கல் செய்ய முடியுமா? என்ற நம்பிக்கையை ஏற்படுத்தவாகும். அதுதான் முதல் கட்டமாகும். அந்த நம்பிக்கை ஏற்பட்டதும் எம்மால் எவ்வளவு தூரம் செல்லலாம் என்ற விடயம் பற்றிப் பின்னர் பேச முடியும்.

எல்லா நாடுகளிலுமேயே சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடந்தது முதற்கட்ட நம்பிக்கை ஏற்படுத்துகையினால் ஆகும். அனைத்து இடங்களிலுமே ஒரு விதமான நம்பிக்கை ஏற்படுத்தப்பட்டது. இருவரும் ஒருவருக்கொருவர் பயந்து கொண்டல்லவா தற்போது பேசுகின்றனர். இருபகுதியினருமே தமது தவறுகளைச் சுயவிமர்சனம் செய்ய வேண்டும். அதுதான் ஒரே வழி!

## சுட்ட தேசியவாதமா...

நாடுகளில் தேசிய இன ஒடுக்கலைக் கண்டுங்காணாதது போல இருக்கிறது; சில சமயம் உக்கிரமாக ஆதரிக்கிறது, தன் ஆதிக்கத்திற்குச் சவாலாக இருக்கக்கூடிய நாடுகளின் இனங்களிடையே பகைமையை மூட்டமுயல்கிறது; பிரிவினைக்கான போராட்டங்களைத் தூண்டிவிட முயல்கிறது; சிலசமயம் சுயநிர்ணயம் பற்றியும் பேசுகிறது. இந்தளவில் ஒரு மாக்ஸியவாதி சுயநிர்ணயம் பற்றி எச்சரிக்கையாக இருப்பது அவசியம்தான். ஆயினும் பிரச்சினைக்கான தீர்வு சுயநிர்ணயத்தை நிராகரிப்பதல்ல. மாறாகத் தேசிய இனங்கட்கு தத்தமது சுய அடையாளங்களின் அடிப்படையில் பாதுகாப்பான இருப்பை உறுதிப்படுத்தி அதன் மூலம் தேசிய இனங்களிடையே ஐக்கியத்தை வலுப்படுத்துவதுமாகும். அவ்வாறான சூழலிற், சுயநிர்ணயம் பிரிவினைக்கான கருவியுமல்ல.

தேசியம் பற்றிய விவாதம், தேசங்கட்கிடையிலான முரண்பாடு மட்டுமே எவ்வகையிலோ முக்கியமானது எனவும் சுயநிர்ணயக் கோட்பாடு தேசங்கட்கு மட்டுமே உரியது எனவும் முடங்கிவிடுகிற போது, பிற முக்கியமான சமுதாய ஒடுக்குமுறைகள் பற்றிய நமது கவனம் பிசகி விடுகிறது. தேசங்கட்குத் தம் இருப்பைப் பேண உள்ள உரிமை சகல இனப்பிரிவுகட்கும் இருக்க வேண்டிய ஒரு உரிமை. இது சுய அடையாளம் தொடர்பானது, வாழ்க்கை முறை தொடர்பானது, மாற்றங்களை உள்வாங்கிக் கொள்ள ஒவ்வொரு இனப்பிரிவுக்கும் உள்ள உரிமை தொடர்பானது. இது மனித சமத்துவத்தின் அடிப்படையில் அணுகப்பட வேண்டும். அந்தளவுக்குச், சுயநிர்ணயம் என்ற கோட்பாடு விரிவுபடுத்தப்பட வேண்டும்.

மனிதர் எந்த அடிப்படையில் ஒடுக்கப்படுகின்றனரோ, அந்த அடிப்படையிலேயே அவர்கள் போராட நேருகிறது. ஒடுக்குதலுக்கு எதிரான எந்தப் போராட்டமும் நியாயமானது. நியாயமான போராட்டங்கள் ஒன்றையொன்று ஆதரிப்பன. அவை மனித விடுதலைக்குப் பங்களிப்பன. தேசியவாதிகளால் ஒரே ஒரு முரண்பாட்டை மட்டுமே காண முடிகிறது. தேசிய ஒடுக்குமுறை உள்ளவரை, தேசிய விடுதலைப் போராட்டம் உள்ள வரை, அவர்கள் ஒருவேளை மற்ற முரண்பாடுகளை அலட்சியம் செய்ய முடியும். ஆயினும் அவை இல்லாமல் போய் விடுவதில்லை. ஒடுக்கு முறைகட்கு எதிரான போராட்டங்கள் ஓய்ந்து விடுவதுமில்லை. மாக்ஸியவாதிகள் எந்த முரண்பாட்டையும் அலட்சியம் செய்ய முடியாது, நியாயமான எந்தப் போராட்டத்தையும் நிராகரிக்க முடியாது. தேசிய விடுதலைப் போராட்டத்தில் அவர்களது பங்களிப்பு அதை முற்போக்கான திசையில் உந்திவிடும் நோக்கத்தால் மட்டுமன்றி, அதைவிட முக்கியமாக, அதன் நியாயத்தாலும் இயலுமாகிறது.

## புலிகள் பேச்சு...

சியல் இராணுவ விடயங்கள் தொடர்பான பேச்சுக்களை நடாத்துமளவுக்கு அது இன்னமும் வளர்ந்திருக்கவில்லை. ஜனாதிபதி அனுப்பியவர்களிடம் ஒரு நல்லெண்ண நிலைமையை உருவாக்கும் தகுதியும், ஆரம்பக்கட்டப் பேச்சில் எழக்கூடிய சிக்கல்களை கையாளும் நிபுணத்துவமும் இருந்தது.

இறுதியாக, மிகவும் முக்கியமாக ஞாபகப்படுத்திக் கொள்ள வேண்டிய விடயம் என்னவென்றால், புலிகளின் தலைவருக்கும் ஜனாதிபதிக்குமிடையில் 40க்கும் மேற்பட்ட கடிதப்போக்குவரத்துக்கள் இருந்தன என்பதும், இதுவே பேச்சுவார்த்தையின் பிரதான களமாக இருந்ததென்பதும் ஆகும். முக்கியமான விடயங்கள் தொடர்பான முடிவுகள் எடுக்கப்பட வேண்டிய தேவை எந்தத் தரப்பில் இருந்திருப்பினும் அவை நேரடியாக ஜனாதிபதியுடனோ பிரபாகரனுடனோ பேசப்பட்டிருக்கலாம்.

***அரசியல் தீர்வு இல்லை:***

இறுதியான விடயம் என்னவென்றால், அரசாங்கம் ஒரு அரசியல் தீர்வை முன்வைக்கவில்லை என்பதாகும். இதுதான் எல்லாவற்றிலும் மிகவும் மோசமானதாகும். அரசியல் தீர்வை முன்வைப்பதிலேற்பட்ட தாமதத்திற்கு காரணம், புலிகள் அதைப்பற்றி கலந்துரையாட மறுத்ததே அன்றி, அரசாங்கம் ஒன்றை முன்வைக்காததல்ல. அரசாங்கம் டிசம்பர் மாத இறுதியில் ஒரு அரசியல் தீர்வுத் திட்டத்தைத் தயாரித்திருந்தது. இது 13வது திருத்தச் சட்டத்தை விட சிறப்பானதாக இருந்தது. மே 17ம் திகதி இதன் பருமட்டமான விடயங்கள் அறிவிக்கப்பட்ட போது எல்லாத் தமிழ்க் கட்சிகளாலும் பேச்சுவார்த்தையை நடாத்த சிறந்த ஒரு அடிப்படை இது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஜனாதிபதி திரும்பத்திரும்ப புலிகளிடம் அரசியல் பேச்சுவார்த்தையை தொடங்கும்படி கோரினார். அரசியல் தீர்வின் அடிப்படை விதிகளை (அதன் முழு விபரங்களையும் அல்ல), யுத்த நிறுத்தம், புனர்நிர்மாணம் என்பன குறித்துப் பேசிக்கொண்டே, உருவாக்கிக் கொள்ள விரும்பினார். ஆனால் புலிகளோ முதலில் போர் நிறுத்தத்தையே கோரினார்கள். அதன் பின் புனர்நிர்மாணம். இறுதியாகவே அரசியல் தீர்வு என்பது அவர்களது கோரிக்கையாக இருந்தது. அவர்கள் கட்டம் கட்டமான பேச்சுவார்த்தையை விரும்பினார்கள். அரசாங்கமோ, ஒரே நேரத்தில் எல்லா முக்கிய விடயங்கள் தொடர்பாகவும் பேச்சுவார்த்தையை நடாத்த விரும்பியது.

புலிகள் அரசாங்கத்தின் இந்த ஒரே நேரத்தில் விவாதிக்கும் திட்டம் தம்மை ஒரு அரசியல் தீர்வை ஏற்கச் செய்யும் நடவடிக்கையாகக் கருதியிருக்க வேண்டும். அரசாங்கம், கட்டங்கட்டமான பேச்சுவார்த்தையை புலிகள் விரும்புவது அரசியல் பேச்சுவார்த்தையை தவிர்த்துக் கொள்ளவும் தம்மை இராணுவ ரீதியாகப் பலப்படுத்தவும் என்று கருதியிருக்கலாம்.

எவ்வாறாயினும், பேச்சுவார்த்தை நிகழ்ச்சி நிரலிலுள்ள வேறுபாடும், பேச்சுவார்த்தையில் கலந்து கொண்டோர் தொடர்பான குற்றச்சாட்டும், பொருளாதார தடைவிவகாரமும் தமிழ் மக்கள் அதிக நம்பிக்கை கொண்டிருந்த சமாதான முயற்சியைக் குழப்ப போதுமான, நியாயமான காரணங்கள் அல்ல. புலிகளின் இந்நடவடிக்கை தொடர்பான சர்வதேச நாடுகளின் ஏகமதான கண்டனங்கள் இதை உறுதிப்படுத்துகின்றன.

www.tamilarangam.net

0 அரசை ஆதரிக்க வேண்டும்!-சிவசிதம்பரம்
0 கண்மூடித்தனமாக ஆதரிக்க முடியாது!-ஜோசப்

# கூட்டணிக்குள் கயிறிழுப்பு!

தமிழர் விடுதலைக் கூட்டணியில் அரசாங்கத்தை ஆதரிப்பது தொடர்பாக பலத்த இழுபறி ஒன்று ஏற்பட்டுள்ளதாகவும், இது காரணமாக கட்சிக்குள் ஒரு 'ஈரணி'ப் போர் நடந்து வருவதாகவும் தெரியவருகிறது. நீலன் திருச்செல்வம், தங்கத்துரை, சிவசிதம்பரம் ஆகியோரினைக் கொண்ட அணி அரசாங்கத்தை ஆதரிக்க வேண்டும் எனவும், ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலான மட்டக்களப்பு எம்.பி.க்களின் அணி அவ்வாறு கண்மூடித்தனமாக ஆதரிக்க முடியாது என்றும் நிலைப்பாடு எடுத்துள்ளதைத் தொடர்ந்து இந்த இழுபறி ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் யுத்த முனைப்புடன் செயற்படத் தொடங்கியுள்ள இன்றைய நிலையில் அரசாங்கத்தை ஆதரிக்க விரும்புவது, கட்சியின் தற்கொலைக்கு ஒப்பானது மட்டுமல்ல தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியலில் இன்னுமொரு கறைபடிந்த அத்தியாயத்தைச் சேர்த்துவிடும் என்று இனப்பிரச்சினையின் தீர்வில் அக்கறை கொண்டவர்களைக் கவலை கொள்ள வைத்துள்ளது..

தங்கத்துரை - சம்பந்தர் பிரச்சினையின் சூடு சற்றுத் தணிந்து வருகிற வேளையில் இன்னொரு முக்கிய பிரச்சினையாக இது வெடித்துள்ளது.

கலாநிதி நீலன் திருச்செல்வம், தங்கத்துரை, கட்சித்தலைவர் மு.சிவசிதம்பரம் ஆகியோர் அரசைக் கூட்டணி ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை வலியுறுத்துகின்றனர்.

இன்னொருபுறம், தமிழ் மக்களின் நலனைப் பாதிக்கக் கூடிய முறையில் அரசைக் கண்மூடித்தனமாகக் கூட்டணி ஆதரிக்கக்கூடாது என்பது மட்டு/ பாராளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கத்தின் நிலைப்பாடு. இந்த விடயத்தில் அவருக்குப் பக்கபலமாக ஏனைய இரு மட்டு. பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா, துரைராஜசிங்கம் ஆகியோரும் உள்ளனர். இப்பிரச்சினை அண்மையில் அவசரகாலச் சட்ட வாக்கெடுப்பு, காணிகள் (திருத்த) சட்ட வாக்கெடுப்பு, பாதுகாப்பு வரி மீதான வாக்கெடுப்பு ஆகியவற்றில் மிகத்தெளிவாகவே வெளிப்படலாயிற்று.

அவசரகாலச் சட்டத்தின் கீழ்த்தான் தமிழ் மக்கள் மீதான அடக்கு முறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன. குறிப்பாக இராணுவம் பரவலாக நிலைகொண்டுள்ள கிழக்கு மாகாணத்தில் நடைபெறும் பல அடாவடித்தனமான கைதுகள், விசாரணையற்ற தடுத்து வைப்பு, நீண்ட கால தடுத்துவைப்பு ஆகியன அவசர காலச்சட்டத்தின் கீழேயே சாத்தியமாகின்றன. அத்துடன் ஒருவருடைய ஒப்புதல் வாக்குமூலத்தினை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு அவர் மீது குற்றப்பத்திரிகை தயாரித்து வழக்குத் தொடரவும் அவசரகாலச் சட்டம் அனுமதிக்கிறது. (சாதாரண ஒறுப்புச் சட்டத்தின் கீழ் ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியாகாது. ஏனெனில் ஒரு நபரை துன்புறுத்திப் பெற்றதாக இருக்கலாம் என்பதால்) இதுமட்டுமல்ல அவசரகாலச் சட்டத்திற்கு மிகுந்த பக்கபலமாக இருந்துவரும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை இன்று சந்திரிகா அரசு தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்ற நிலையில் 'அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவு வழங்குவதென்பது தமிழ் மக்களை மேலும் நசுக்கிட அரசபடைகளினுள்ளும், பொலிசினுள்ளும் பரவலாகக் காணப்படும் இனவாத சக்திகளுக்கு வலுவூட்டுவதாகவே அமையும். பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஒழிக்க வேண்டும் எனத் தேர்தலுக்கு முன் கூறிவந்த பொ.ஐ.மு., புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் மிகச்சுமூகமாக இருந்த நேரத்தில் கூடதான் தேர்தலுக்கு முன் கூறியதற்கு இணங்க அதை நீக்கிட முற்படவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயம்.

மூன்றாம் ஈழப்போர் தொடங்கிய கையோடு தமிழ் மக்களுக்கு கிழக்கு, கொழும்பு, மலையகம் ஆகிய பகுதிகளில் பலத்த நெருக்கடி தோன்றியுள்ளது. இந்தச் சூழ்நிலையில் கலாநிதி நீலன் திருச்செல்வம், தங்கத்துரை கூட்டணித்தலைவர் மு.சிவசிதம்பரம் ஆகியோர் அரசாங்கத்தை ஏன் திடீரென ஆதரிக்கக் கிளம்பினார்கள் என்பது மட்டு.பா.உக்களுக்குப் பெரும் புதிர்.

''அவசரகாலச் சட்டத்தைப் பாராளுமன்றத்தில் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களிக்க வேண்டும் என நாம் கூட்டணி மத்திய குழுவை வலியுறுத்துவோம்'' எனப்பாராளுமன்றத்தில் பேசிவிட்டார் தங்கத்துரை.

''இது பிழையான காரியம், மக்கள் நம்மை இனங்கண்டு வெறுத்து ஒதுக்கிவிடுவார்கள்'' என இந்த நிலைப்பாட்டைக் கடுமையாக எதிர்த்துப் பேசினார் பரராஜசிங்கம். ''இல்லை. நாம் அரசை ஆதரிக்கவே வேண்டும்'' என பரராஜசிங்கத்துடன் வாதிட்டாராம் கூட்டணித் தலைவர் மு.சிவசிதம்பரம்.


ஜூன் 24 அன்று இந்த விடயமாக அரசிற்குச் சாதகமாகவே கட்சியின் மத்திய குழு தீர்மானம் எடுக்கும் என்பதில் நம்பிக்கையாக இருந்தனர் மு.சிவசிதம்பரம், நீலன் திருச்செல்வம், தங்கத்துரை ஆகியோர். ஆனால் ஜோசப்பும் ஏனைய மட்டு.பா.உக்களும் தாம் அதைக் கடுமையாக எதிர்க்கப்போவதாக வெளிப்படையாகவே தமது ஆதரவாளர்களிடமும் தெரிந்தவர்களிடமும் கூறினர்.

→ 18

திருமலை:
# புத்திசாலித்தனம் எது?

திருகோணமலையில் பொலிசாரின் கவனம் இப்போது மாணவர்கள் மீதும் திரும்பியுள்ளது. இதற்குக் காரணம் இங்கு புலிகளால் நிகழ்த்தப்பட்டதாகக் கூறப்படும் கொலைகளுக்குப் பாடசாலைச் சீருடை அணிந்தோரே பொறுப்பு என நம்பப்படுவதேயாகும். பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் முடிவடையும் நேரம் தவிர்ந்த இடைநேரங்களில் மாணவர்கள் தெருக்களில் உலாவுவது ஏறத்தாழத் தடை செய்யப்பட்டுள்ளது.

ஜூன் 14ம் திகதி இரவு பத்துமணியளவில்



டெலோ அமைப்பின் திருமலைக் கிளையின் முக்கியஸ்தரான நகரசபை உறுப்பினர் ஒருவர் மீது நகரத்துத் தெருவொன்றில் வைத்துத் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. காயங்கள் எதுவுமின்றி அந்த நபர் தப்பிவிட்டார். சுட்டவர்களும் யாரென்று தெரியவில்லை. இதற்கு விடுதலைப் புலிகள் காரணமாக இருக்கலாம் என கதை பரவ ஆரம்பித்த போதும் இது ஒரு உட்பூசலே என விஷயமறிந்தவர்கள் கூறுகிறார்கள்.

இச்சம்பவத்தையடுத்து நகரசபைத் தலைவர் பெ.சூரியமூர்த்திக்கு அநாமதேயப் பயமுறுத்தல்கள் தொலைபேசி மூலம் விடுக்கப்பட்டிருக்கின்றன. இவ்விடயம் சம்பந்தமாக நகரசபைத் தலைவரும் பொலிசாரினால் விசாரிக்கப்பட்டார்.

நகரசபைத் தலைவர் தனது இக்கட்டான நிலையையும், நகரசபையின் டெலோ உறுப்பினர்கள் தம்முடன் நிர்வாகத்தில் ஒத்துழைக்க மறுப்பதையும் குறித்து டெலோ உயர்மட்டத்துக்குக் கடிதம் ஒன்று எழுதியிருப்பதாகச் செய்தி. இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டுப் பரிகாரம் காணும்படி அக்கடிதத்தில் கேட்கப்பட்டிருக்கிறதாம்.

சரிநிகர் விசாரித்ததில் சீரான நிர்வாகத்துக்கு தலைவர் போராடுவதாகத் தெரியவருகிறது. ஆளும் கட்சி உறுப்பினர்கள் என்பதால் அடாத்தாக நடக்க அவர் அனுமதிப்பதில்லையாம். உறுப்பினர்கள் எப்படி? ஒரு உறுப்பினரிடமிருந்து நகரசபைக்குப் பெருந்தொகையான பணம் வரவேண்டியுள்ளது. அந்த உறுப்பினர் டிமிக்கி கொடுக்க முயல்கிறாராம். இன்னொரு உறுப்பினர் வீடு கட்டுவதற்கு நகரசபை சீமெந்தும் மண்ணும் தனக்கு அன்பளிப்பு செய்தால் என்ன என்று கேட்டுப் பார்த்திருக்கிறார். இந்த லட்சணத்தில் நிர்வாகம் நடக்கிறது.

இதேவேளை ஜூன் 22ம் திகதி இராணுவத்துடன் சென்று கொண்டிருந்த டீன் என்ற நபரை நோக்கி ரெலோவினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். எனினும் அவர் உயிர்தப்பிவிட்டார். இதனையடுத்து பொலிஸார் ரெலோ அலுவலகத்தைச் சுற்றிவளைத்து அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறிமுதல் செய்ததோடு ரெலோவினர் இருவரையும் கைது செய்து கொண்டு சென்றுள்ளனர்.

நகருக்குள் நடமாடிய விடுதலைப் புலி உறுப்பினர்களைப் பொலிஸார் சுற்றிவளைத்த போது ஒருவர் தப்பிவிட்டார். ஒரு இளைஞர் சயனைட் அருந்திய நிலையில் திருமலை ஆஸ்பத்திரியில் பலத்த பாதுகாப்புடன் தீவிர சிகிச்சைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறார். அவர் இறந்துவிட்டதாகச் செய்திகள் வெளிவந்த போதும் இக்கட்டுரை எழுதும் வரை அவர் மயக்க நிலையிலேயே இருந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜூன் 17ம் திகதி இரவு பத்துமணியளவில் மூதூர் நகரில் வைத்து ஒருவர் சுடப்பட்டிருக்கிறார். இஸ்மாயில் என்றழைக்கப்படும் முன்னாள் இறைச்சிக்கடைக்காரரே இவர். வழமை போல இச்சம்பவமும் புலிகள் தலையில் போடப்பட்ட போதும், மூதூர் மக்களின் அபிப்பிராயம் வேறு விதமாக இருக்கிறது.

மொத்தத்தில் எவரும் தமது எதிரியை துப்பாக்கியொன்றின் மூலம் பழிவாங்குவது புத்திசாலித்தனமான செயல் என்றே கருதுவதாக இப்போது தோன்றுகிறது.

புகைப்படம் : லியாகத் அலி

# கரையொதுங்கும் சடலங்கள்! -கொல்லப்பட்டவர்கள் தமிழர்கள்?

தென்னிலங்கையில் மீண்டும் ரயர் போட்டு சடலங்கள் எரிப்பதுவும், ஆறு, கடல் என்பவற்றில் சிதைக்கப்பட்ட சடலங்கள் ஒதுங்கும் நிகழ்வுகளும் ஆங்காங்கே தலைகாட்டி வருகின்றன.

இந்நிகழ்வுகள் மீண்டும் மக்கள் மத்தியில் பீதியைக் கிளப்பி விட்டிருக்கின்றன. இந்தப் படுகொலைகள் பெரும்பாலும் இனவாதப் பின்னணியில் நிகழ்த்தப்படுபவையாகவும் படுகொலை செய்யப்பட்டவர்கள் தமிழர்களாகவும் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேவேளை இந்தக் கொலைகள் பெரும்பாலும் முன்னர் போல் அரசாங்கத்தினது நேரடி தலையீட்டுடன் நடப்பதாக தெரியவில்லை. எனினும் இனவாத நோக்கில் இவற்றை மேற்கொள்வதாகவே வெளிவந்த தகவல்களிலிருந்து அறியமுடிகிறது.

கடந்த 51 நாட்களுக்குள் 26 சடலங்களுக்கு மேல் கிடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் தகவல்கள் அறிவிக்கின்றன. இவற்றில் 25 சடலங்கள் சவச்சாலையில் ''இனந்தெரியாத சடலங்கள்'' எனும் லேபலுடன் இருக்கின்றன. முற்றாகச் சிதைக்கப்பட்ட சடலங்கள் அவை எனத் தெரிகிறது. பெரும்பாலான சடலங்கள் இளைஞர்களது எனத்தெரியவருகிறது.

களுத்துறை களுகங்கையில் கண்டெடுக்கப்பட்ட சடலம் கை, கால்கள் முறிக்கப்பட்ட நிலையில் தலையை பொலித்தீன் பையால் இறுகக் கட்டப்பட்டு காணப்பட்டது. பெரும்பாலான சடலங்கள் பாணந்துறை பொல்கொட கங்கை ஏரி மற்றும் நீர்கொழும்பு கரையோரப்பகுதிகளிலுமே காணக்கிடைத்துள்ளது.

பொல்கொட கங்கையில் மாத்திரம் இதுவரை 13 சடலங்களும், முகத்துவாரம் - நீர்கொழும்பு கரையோரங்களில் 9 சடலங்களும் கிடைக்கப்பெற்றுள்ளன.

பொல்கொட கங்கையிலிருந்து பிலியந்தல பொலிஸாரினால் அண்மையில் கண்டெடுக்கப்பட்ட மூன்று சடலங்களில் ஒரு சடலத்தின் வலப்புறக்கையில் தமிழில் பச்சை குத்தப்பட்டிருந்தது.



அச்சடலம் சிதைக்கப்பட்டு விகாரப்படுத்தப்பட்டு கிடக்கக் காணப்பட்டுள்ளது. இந்த சடலங்கள் கிடைக்கப்பட்டிருக்கிற போதும் பிலியந்தல பொலிஸ் பொறுப்பதிகாரி 'அடையாளம் தெரியாத சடலங்கள்' எனக்கூறி அச்சடலங்கள் பற்றிய விசாரணைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தாரே ஒழிய தமிழில் குத்தப்பட்டிருந்த பச்சை தொடர்பாக கூட எவ்வித கவனமும் செலுத்தவில்லை என்பது கவனிக்கத்தக்கது. அதுமட்டுமல்லாது தமிழில் பச்சை குத்தப்பட்டிருந்ததால் தான் அவை தமிழரது சடலம் என இனங்காண முடிந்திருக்கிறது. அப்படியென்றால் ஏனைய சடலங்கள் எவரது? சடலங்களைக் கொண்டு இனரீதியில் பகுத்தறிய முடியாவிட்டாலும் கூட அண்மைய தென்னிலங்கைச் சம்பவங்கள் அனைத்தும் இவை தமிழரது சடலங்களாகத்தான் இருக்கக்கூடும் என நம்பவைக்கிறது.

இதே பொல்கொட ஏரியில் மே மாதம் 30ம் திகதி கரையொதுங்கிய இருவரது சடலங்களில் ஒருவரது கண் கட்டப்பட்டிருந்தது. உடம்பில் ஜட்டி மட்டும் காணப்பட்டது. அடுத்த சடலம் டெனிம் நீள காற்சட்டையுடன் காணப்பட்டது.

இதில் முக்கிய விடயம் என்னவென்றால் இவ்விரு சடலங்களிலும் இடுப்பில் கறுப்பு நிற அரைஞாண் கயிறு காணப்பட்டது. இந்த அடையாளம் சிங்களவரது சடலமல்ல இது என்பதற்கு போதுமான ஆதாரம் என்று லக்பிம பத்திரிகை எழுதுகிறது.

மே மாதம் 30 க்கும் யூன் மாதம் 16ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்திற்குள் மாத்திரம் 12 சடலங்கள் மோசமாக அழுகிய நிலையில் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச்சடலங்கள் பற்றிய வைத்திய அறிக்கையின்படி ''சடலமாக கண்டெடுக்கப்பட்ட இளைஞர்கள் பட்டினி போடப்பட்டு, பின் கைகள் கட்டப்பட்டு பெரும் வதைக்குள்ளாக்கியதன் பின் நீரில் மூழ்கடிக்கப்பட்டே கொல்லப்பட்டுள்ளனர்'' என தெரிவிக்கிறது.

(இக்கோரச் சம்பவங்களுக்கு தமிழர்கள் இலக்காகிவருவதாகவே சிங்களச் செய்தியாளர்களும், சில சிங்களப் பத்திரிகைகளும் தெரிவிக்கின்றன.) தென்னிலங்கையில் மீண்டும் தலைகாட்டியிருக்கும் இனவன்முறைகளின் தொடர்ச்சியாகவே இவை இருக்குமென்றும் நம்பப்படுகிறது. ஆனால் விசார

→ 19

# பிரக்ஞையற்ற நடுவர்கள்!

ஜூன் 22 வியாழனன்று மேல் மாகாணத்தின் தமிழ்த்தின விழாப்போட்டிகள் கொழும்பு விவேகானந்தா கல்லூரியில் நடைபெற்றன. எல்லாப் போட்டிகளும் சுமுகமாக நடைபெற்றன. நாடகப் போட்டி என்று வந்தவுடன்தான் கிளம்பிற்று சிக்கல்.

போட்டிகள் பலதரப்பட்டவை. இசை, நடனம், பேச்சு, வாசிப்பு, பா ஓதல், சிறுகதை, கவிதை, நாடகம் என்று போட்டிகள். இசைப்போட்டி என்று வருகின்ற போது கர்நாடக சங்கீதம் தெரிந்தவர்களே அப்போட்டிக்கு நடுவர்களாக அமர்வார்கள். நடனப்போட்டி என்றால் பரத நாட்டியம் தெரிந்தவர்களே நடுவர்களாக இருப்பார்கள். ஆனால் நாடகம் என்று வருகின்ற போது அங்கு பொழுது போகாமல் இருப்பவர்களை நடுவர்களாக அமர்த்தி விடுவதுண்டு. இவ்வாறு நடுவர்களாகச் செல்பவர்களும் தாங்கள் நடுவர்களாக இருக்கத் தகுதி உடையவர்கள் தானா என்று யோசிப்பதில்லை. அவர்களை நடுவர்களாக அனுப்புகின்ற நிர்வாகத்தினர்க்கும் அதைப் பற்றிய கவலை கிடையாது. பிறகென்ன, நடுவர்கள் தான்தோற்றித்தனமாகத் தீர்ப்புக்களை வழங்க வேண்டியது தானே?

பல வருடங்களாகவே கொழும்புப் பாடசாலை நாடகப் போட்டிகளைப் பொறுத்தவரை இத்தகைய ஒரு அவலம் நிலவி வருகிறது. சென்ற வருடம் கொழும்பில் புகழ் பெற்ற மகளிர் கல்லூரி ஒன்றின் சார்பில் மேடையேற்றப்பட்ட நாடகம் ஒன்று பெண்ணிலைவாதம் பேசுகிறது என்பதற்காகக் கடைசி இடத்துக்குத் தள்ளப்பட்டுவிட்டது. நடுவர்களின் நியாயம் ''ஐயோ! விதவைகள் பொட்டு வைக்கலாம் என்று சொல்கிறார்களே இந்த Feminists!'' என்பதாகும்.

இந்தப் போட்டிகள், நடுவர்கள், மேல்மாகாணக் கல்வித்திணைக்களத்தின் பெண் எதிர்ப்பு மனோபாவம் (Misogyny) பற்றிப் பக்கம் பக்கமாக எழுதலாம். இப்போதைக்கு இது:

மேல் மாகாணத் தமிழ்த்தின விழாப்போட்டி நடைபெறுகின்ற போது ஐந்து நாடகங்கள் போட்டிக்காக வந்திருந்தன. அவற்றில் இரத்மலானை இந்துக்கல்லூரி மாணவர்களின் 'நலிந்தி

→ 19

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பிரதம ஆசிரியர்:- சேரன். எல்லாத் தொடர்புகளுக்கும்: ... கொழும்பு 05. ☎ 593615